Registered as a News Paper in Sri Lanka
விலை : ரூபா 25.00

தினச்செய்தி
வாரமலர்
என்றும் உங்களுடன்

அன்றாடச் செய்திகளை
உடனுக்குடன்
தினந்தோறும்
இணையத்தில்
அறிந்து கொள்ள
www.thinacheithi.com

பக்கம் 24 | நவ,டிச 29-05, 2015 | செய்தி - 09

# இடம்பெயர்ந்தோருக்கு 65 ஆயிரம் புதிய வீடுகள்



அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்

இடம்பெயர்ந்து வாடும் எமது சொந்தங்களுக்கு 65 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்து வழங்க சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் மீள்குடியேற்றம், இந்து விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் முன்வந்துள்ளார்.

இந்த புதிய வீடுகள் அமைப்பதற்கு சர்வதேச கேள்விப்பத்திரம் கோரி கடந்த ஒக்ரோபர் 28 ஆம் திகதி முடிவடைந் துள்ளது. அதன் பிரகாரம் பல முக்கிய சர்வதேச நிர்மாண கம்பனிகள் இந்த வீடுகளை நிர்மாணிக்க முன்வந்துள்ள தாகவும் அமைச்சர் தினச்செய்திக்குத் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் குறிப்பிடுகையில் :

வடமாகாணத்தில் இடம்பெயர்ந்து வாழ்வோருக்கு 40 ஆயிரம் வீடுகளும் கிழக்கு மாகாண மக்களுக்கு 25 ஆயிரம் வீடுகளும் அமைத்துத் தரவுள்ளதாகக் கூறினார்.

இந்த வீடுகள் ஒவ்வொன்றும் தனித் தனியான வீடுகள் என்றும் ஒவ்வொரு வீடும் 550 சதுர அடி பரப்பளவைக் கொண்டவை என்றும் கூறினார்.

இந்த வீடுகள் ஒவ்வொன்றும் இரண்டு படுக்கையறைகளையும், அடுக்களை, வரவேற்பறை மற்றும் கழிவறையுடன் கூடியதாகக் காணப்படும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் சூரியசக்திமூலம் மின்சாரம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதாவது வீட்டுப்பாகங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு அந்தந்த இடங்களில் வைத்து அமைத்துக் கட்டுவதே (prefabricated) இத்திட்டமாகும்.

பார்க்க பக்கம் 2இல்

தினச்செய்தி
என்றும் உங்களுடன்

T.P : 021 7539300
Fax : 021 7539300
E-mail : thinacheithi@gmail.com
Web : www.thinacheithi.com / lk

## தமிழ் தேசியக் கூட்டணியை உடைந்து சிதறாமல் பாதுகாக்கவும்

தமிழ்த் தேசியக் கூட்டணியே தமிழ் மக்களின் ஒரே பாதுகாவலன். தமிழர்களையும், தமிழ்த் தேசியத்தையும் பாதுகாக்க என்று 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் உருவாக்கப்பட்ட ஒரே அரசியல் அமைப்பாகும்.

2001ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள் ஒர் இணக்கப்பாட்டிற்கு வந்து தமிழ்த் தேசியக் கூட்டணியை அமைத்தது. அதையடுத்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் அன்று போட்டியிட்டார்கள். அன்று நாடாளுமன்றத் தேர்தலிலே மொத்தம் 225 ஆசனங்களில் 15 ஆசனங்களை வெற்றி பெற்றார்கள்.

அதையடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசிய கூட்டணிக்கு முக்கிய பங்கு செலுத்த முன்வந்த போது, அதை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவரான வீ.ஆனந்தசங்கரி முழுமூசாக எதிர்த்தார். அந்த எதிர்ப்பை அடுத்து தமிழ் தேசியக் கூட்டணிக்குள் இருந்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்றவர்கள் பிரிந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட முன்வந்தார்கள்.

அதையடுத்து இலங்கை தமிழரசுக் கட்சியை மீண்டும் புதுப்பிக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. 2004ஆம் ஆண்டு தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டார்கள். அந்தத் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கியிருந்தது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தின் அநேகமான தேர்தலுக்கு தமிழ்ச்செல்வனும், விடுதலைப் புலிகளுமே வேட்பாளர்களை நியமித்தார்கள். அந்தத் தேர்தலில் நாடாளுமன்றத்தில் மொத்தமாக இருந்த 225 தேர்தல் தொகுதியில் 22 தேர்தல் தொகுதிகளில் வெற்றிபெற்றார்கள். அந்த சமயம் 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாணசபை தேர்தலையும், மட்டக்களப்பு மாநகர சபை தேர்தலையும் தமிழ் தேசியக் கூட்டணி பகிஷ்கித்தது.

2009ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் 2010ஆம் ஆண்டு ஜனவரி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டணி அன்று பொது வேட்பாளராக போட்டியிட்ட இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கியது.

2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் தமிழ் தேசியக் கூட்டணி வடக்கு,கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழீழக் கொள்ளையை கைவிட்டது. அதற்குப் பதிலாக சமஷ்டி ஆட்சி முறையையும், வடக்குகிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைத்து இணைந்த மாகாணசபை வேண்டும் என்று கோரிற்று.

அந்தக் காலத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரசைச் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ்த் தேசியக்கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கஜேந்திரன் (குதிரைக் கஜேந்திரன்), பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் தமிழ் தேசியக் கூட்டணியை விட்டு விலகி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்ற புதிய அரசியல் கட்சியை உருவாக்கினார்கள்.

2010 இல் தமிழ் தேசியக் கூட்டணிக்கும் இலங்கை தமிழரசுக் கட்சிக்குமான தலைவர் பொறுப்பை திரு. இரா .சம்பந்தன் ஏற்றுக் கொண்டார். அவரது தலைமையில் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டது. அந்தத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டணி 14 தேர்தல் தொகுதிகளில் வெற்றிபெற்றது.

அதையடுத்து 2013ஆம் ஆண்டு நடைபெற்ற வடமாகாணசபைத் தேர்தலுக்கு ஓய்வு பெற்ற முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தி தேர்தலில் போட்டியிட்டார்கள். வடமாகாணசபைத் தேர்தலில் மொத்தமாக இருந்த 38 ஆசனங்களில் 30 ஆசனங்களை தமிழ் தேசியக் கூட்டணி வென்றது. அந்தக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட சீ.வி.விக்கினேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அதையடுத்து 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம்திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவிற்கு தமிழ்த் தேசியக் கூட்டணி ஆதரவு அளித்தது.

மேலும் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 4+2=16 தொகுதிகளை தமிழ்த் தேசியக் கூட்டணி கைப்பற்றியது. இந்தத் தேர்தலை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இதற்கு முன்னர் 1977ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு.அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் முதன்முதலில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார் என்பது தெரிந்ததே.

பெரும்பான்மையான தமிழர்களின் அன்பையும், அபிலாஷைகளையும் வென்ற தமிழ்த் தேசியக் கூட்டணி இன்று குழுக்களாக பிரியும் ஒரு அபாயகரமான கட்டத்தை எதிர்நோக்கியுள்ளது. கோட்டைக்குள் குத்து வெட்டு. அங்கே குழுக்கள் பல உருவாகிவிட்டன. தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட எம்.ஏ.சுமந்திரன் தனக்கு என ஒரு கோஷ்டியை கட்டியெழுப்பும் முயற்சிகளை எடுத்துவருகின்றார். சம்பந்தனுக்கு பின் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவராக தானே வரப்போவதாக ஒரு கனவுலகில் வாழ்ந்து வருகின்றார்.

வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்கினேஸ்வரன் ஒரு அப்பாவி. அப்பிராணி. அவருக்கு அரசியலும் தெரியாது. ஒரு மண்ணாங்கட்டியும் தெரியாது. அவர் தனக்கென ஒரு வழிமுறைகளை உருவாக்கி அதன்படி இயங்கிவருகின்றார். அதை நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் தேசியக் கூட்டணியின் பேச்சாளருமான சுமந்திரன் எதிர்க்கின்றார். விக்கினேஸ்வரனை பதவியிலிருந்து நீக்க முனைப்புக் காட்டி வருகின்றார். அதைத் தவிர வேறு கோஷ்டி பூசல்களும் கிளம்பிக் கொண்டே இருக்கின்றன.

இந்நிலை மாற வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டணி தலைவர்கள் சொல்வதொன்று செய்வதொன்றாக இருக்கக் கூடாது. இவர்களுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தது, இவர்கள் தங்கள் நலன்களைப் பாதுகாப்பார்கள், உரிமைகளை வென்றெடுப்பார்கள், தமிழ்த் தேசியத்தை வளர்ப்பார்கள், என்ற எதிர்பார்ப்பிலேதான்.

ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்றோர் பகிரங்கமாக கோஷ்டி சண்டையில் ஈடுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டணி அழிக்கும் வேலைகளில் செயற்பட்டு வருகின்றார்கள். இது தவறு.

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு." இது முதாதையர் மொழி. மேலும், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. இது எல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டணித் தலைவர்களுக்கு தெரியாததல்ல. ஒரு ஜனநாயக அமைப்புக்குள் கருத்து வேறுபாடு வருவது சகஜம். ஆனால், எங்கள் பல்லைக் குத்தி பிறரின் மூக்கில் மணக்க விடக் கூடாது. நாம் தர்மத்தின் வழி நிற்கவேண்டும். பிரச்சினைகள் இருந்தால் எமக்குள் பேசித்தீர்க்க வேண்டும். ஒற்றுமையாக இல்லா விட்டாலும், ஒற்றுமையாக இருப்பதாக காட்டிக் கொள்ளவேண்டும். தமிழ் தேசியக் கூட்டணி தமிழ் மக்களின் கூட்டணி அதை முறியடிக்க தாய் தடுத்தாலும் விடோம்.

(01ஆம் பக்கத்தொடர்ச்சி)

## இடம்பெயர்ந்தோருக்கு ...

அந்தவகையில் ஒரு வீடு 15–20நாட்களுக்குள் நிர்மாணிக்கப்பட்டுவிடும்.

உலகத்தின் தலைசிறந்த நிர்மாண கம்பனிகள், கட்டட நிர்மாண கம்பனிகள் அனுப்பி வைத்த கேள்விப் பத்திரங்களை தெரிவுசெய்ய வேண்டும் என்றார். விரைவில் அந்த நிர்மாணக்கம்பனி ஒன்று தெரிவுசெய்யப்படும்.

அதையடுத்து மிக விரைவில் இடம்பெயர்ந்தோர்களின் பிரச்சினை அதுவும் குறிப்பாக நலன்புரி நிலையங்களில் வாழ்வோரின் பிரச்சினைகள் குறிப்பாக நலன்புரி நிலையங்களில் வாழ்வோரின் பிரச்சினைகள் முடிவுக்கு வரும் என்று அமைச்சர் சுவாமிநாதன் கூறினார்.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, கோப்பாய், பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் மொத்தமாக 6000 இற்கும் மேற்பட்டோர் நலன்புரி முகாம்களில் உள்ளார்கள். இவர்களில் பெரும்பான்மையானோர் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் நலன்புரி முகாம்களிலேயே வசித்து வருகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் நரகலோகத்தைத் தேட வேண்டும் என்றால் அங்குள்ள 32 நலன்புரி நிலையங்களில் ஒன்றிற்குப் போனால் கண்டு கொள்ளலாம்.

கடந்தவாரம் பெய்த பெருமழையால் சுன்னாகத்திலுள்ள சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையம், கண்ணகி நலன்புரி நிலையம், பெரிய மதவடி நலன்புரி நிலையம், பிள்ளையார் நலன்புரி நிலையம், நீதவான் நலன்புரி நிலையம், கோப்பாய் கிருஷ்ணன் கோவிலடி நலன்புரி நிலையம், இலுப்பையடி நலன்புரி நிலையம், யோகபுரம் நலன்புரி நிலையம், உரும்பிராய் இந்துக் கல்லூரி நலன்புரி நிலையம், வசந்தபுரம் நலன்புரி நிலையம் ஆகியவற்றில் வாழும் மக்கள், பெரியவர்கள், சிறியவர்கள், கைக்குழந்தைகள் எல்லோரும் உணவுக்கே வழியின்றி அவதிப்பட்டார்கள்.

இந்த விடயம் தொடர்பாக 'தினச்செய்தி' அமைச்சர் சுவாமிநாதனின் கவனத்திற்கு கொண்டுவந்தது. இது சம்பந்தமாக அமைச்சர் யாழ். மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகத்துடன் தொடர்புகொண்டு இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு மற்றும் நிவாரணங்களை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். இதையடுத்து 'தினச்செய்தி', 'ஏசியன் ரிபியூன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியரான திரு.கே.ரி. இராசசிங்கத்தின் தலைமையில் நலன்புரி நிலையங்களைச் சேர்ந்த தலைவர்களின் தூதுக்குழு ஒன்று கடந்த 25 ஆம்திகதி யாழ். மாவட்ட அரச அதிபர் திரு.வேதநாயகத்தைச் சந்தித்து நலன்புரி நிலையங்களிலுள்ள சீர்கேடுகள் பற்றியும் குறைபாடுகள் பற்றியும் எடுத்துக் கூறினார்கள்.



கே.ரி. இராஜசிங்கம் மற்றும் நலன்புரி நிலையத் தலைவர்கள் யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகத்துடனும் இதர அரச உத்தியோகத்தர்களுடனும் கடந்த 25 ஆம் திகதி யாழ். மாவட்ட அரச அதிபர் காரியாலயத்தில் கலந்துரையாடுவதைக் காணலாம்.

இது சம்பந்தமாக ஆக வேண்டிய நடவடிக்கை எடுப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களாக உலர்ந்த உணவுப்பொருட்கள் வழங்குவதாகவும் யாழ். மாவட்ட அரச அதிபர் திரு.என். வேதநாயகம் உறுதியளித்தார்.

அமைச்சர் சுவாமிநாதனுடன் "தினச்செய்தி" பத்திரிகை பிரதம ஆசிரியர் திரு.கே.ரி.இராசசிங்கம் உரையாடும் போது 2011 ஆம் ஆண்டு நிறுத்தி வைக்கப்பட்ட நிவாரணம் வழங்குவதை மீண்டும் ஆரம்பித்து எமது சொந்தங்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இது சம்பந்தமாக அமைச்சரின் செயலாளர் வி.சிவஞானசோதியையும், மேலதிக செயலாளர் நயமுடீனையும் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் சுவாமிநாதன் கேட்டுக்கொண்டார்.

## மாவீரர்களுக்கு அஞ்சலி

தமிழர் தாயக விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரகளை அர்ப்பணித்த மாவீரர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் அஞ்சலி செலுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றில் நடைபெற்றுவரும் வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும் போதே



மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

# யாழ்ப்பாணத்தைவிட்டு இராணுவமே வெளியேறு!



இந்தக் கோஷம் 2009 வரை விடுதலைப் புலிகள் என்ற இராணுவப் பலத்துடனான அமைப்பால் கூட வாய்திறந்து பேசப்படவில்லை. ஆனால், புலிகளின் பின்புலத்தில் நின்று ஜனநாயக ரீதியில் வாக்குப் பெற்ற செ.கஜேந்திரன் இலங்கை நாடாளுமன்றில் "40000 இராணுவத்தை பொதிசெய்து தென்பகுதிக்கு அனுப்புவோம்" என்று முழங்கியிருந்தார். அப்படி எதையும் புலிகளின் தலைவர் தனது மாவீரர் உரையில் கூட குறிப்பிட்டதில்லை. அவ்வாறெனில், இது பற்றி தற்போது கதைப்பவர்களும் கஜேந்திரன் பாணியிலா பேசுகின்றனர்?

2013இல் நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலின் போது "கூட்டமைப்பு வென்றால் முதல் வேலையாக வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றியே தீருவோம்" என்று கூறியிருந்தனர். மாகாண சபை என்ற விடயத்தை விடுதலைப் புலிகள் ஏற்கனவே நிராகரித்திருந்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

2013 மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக வெற்றி பெற்றதும் மாகாணசபையை "வடக்கின் தமிழீழம்" என்றே நினைத்தனர். மற்றத் தமிழரைவிட மீள்குடியேற்றத்திற்கு காத்திருந்த மக்கள் இராணுவம் வெளியேறினால் தாங்கள் சாதாரணமாக நமது நிலத்துக்கு போய் விடலாம் என்று நம்பினர்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்போது "தமிழீழம் தான் தீர்வு" என்று கூறிய தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் பின்பான காலகட்டத்தில் தம்மை எதிர்த்த இளைஞர்களை முன்னே தள்ளிவிட்டு அழித்தது. தமிழீழம் என்பது சாத்தியம் இல்லையென்பது நன்றாகவே தெரிந்திருந்தது.

வட்டுக்கோட்டைப் பிரகடனத்தைச் சொன்னவர்கள் வாழ்ந்தார்கள் அல்லது இது வரை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதைக் கேட்டவர்கள் அழிந்து போனார்கள்.

இலங்கை ஓர் இறைமையுள்ள நாடு. தமது நாட்டின் இறைமையை எவ்வாறு பாதுகாப்பது என்பதிலும் கவனம் செலுத்தவே செய்யும். வடபகுதியிலிருந்து இராணுவத்தை வெளியேற்றினால் இலங்கை அரசின் இறைமை இல்லாமல் போய்விடும். பின்னர் அதுவே தமிழீழம் என்றாகிவிடும்.

தமிழ்ச் சமூகம் மிக மோசமாக உளுத்துப் போயுள்ளமைக்கு மிகச் சிறந்த உதாரணம் வித்தியா படுகொலை அண்ணன் தம்பி, மாமன் மச்சான், பெரிய தகப்பன் சிறிய தகப்பனெனப் பங்கெடுத்ததாகக் கூறப்படும் 9 பேரில் ஒருத்தன்கூட அந்தச் சம்பவத்தை பிழை என்று கூறாதது தான் தமிழ்ச் சமூகத்தின் தோல்வி என்று கூற முடியும்.

மிகப்பெரிய இழப்புக்களைச் சந்தித்த போராட்டங்களும் ஊருக்கோர் கோயில் கட்டி யாகம் செய்து, தேர் இழுத்து, பிரசங்கங்கள் செய்து எம்மினம் பெற்றுக்கொண்டது இவ் வளவுந்தானா? என்று பிறத்தியான் கேட்டால் தமிழினமே வெட்கித் தலைகுனிய வேண்டும். "யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம்" என்பர். இதுவா அது?

புலிகள் கூட வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும், கிழக்கிலும் தமது கட்டுப்பாட்டுப் பகுதியை வரையறுத்து வைத்திருந்த போது தமது படைநிலைகளை பின்னால் எடுக்க ஒருபோதும் சம்மதிக்கவில்லை. இந்நிலையில் வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற வேண்டுமென கேட்கலாமே தவிர அது நடந்துவிடப் போவதில்லை.

இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த ஐநாவுக்கான அமெரிக்க பிரதிநிதி சமந்தா பவர் இதுபற்றிக் குறிப்பிடுகையில் "2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது முற்றிலும் மாற்றமான சூழலே இலங்கையில் காணப்படுகிறது. இராணுவத் தலைமைத்துவம் மாறி சிவில் நிர்வாகத்தை நோக்கி நாடு நகர்ந்து செல்கிறது. அதற்குத் தேவையான கௌரவமான இராணுவச் சூழல்தான் தற்போது உள்ளது." என்று குறிப்பிட்டுள்ளார்.

மீள்குடியேற்றத்திற்கு மகிந்த அரசு ஏற்பாடுகள் செய்தபோது வன்னி மக்கள் மிகவிரைவாக மீள்குடியேறினர். ஆனால், வலிவடக்கு மீள் குடியேற்றம் 25 வருடங்கள் கடந்துவிட்டதால் ஏற்கனவே வலி வடக்கில் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் அனைவரும் குடியேறவில்லை. இது மகிந்த அரசிற்கு பெரும் ஏமாற்றமாக இருந்தது. மீள் குடியேற்றப்பட்ட பகுதிக்கு 100% மீள் குடியேற்றத்தை முதலில் உறுதிப்படுத்த வேண்டும்.

அடுத்த கட்டமாக ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி அரசால் விடுவிக்கப்படும் பகுதிகளுக்கு மக்கள் சென்று குடியேறத் தயாராக இருக்கிறார்களா? என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். உண்மையில் மீள் குடியேற்ற நடவடிக்கையில் ஆளுநர், பிரதம செயலர், மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள் தான் பொறுப்பாயிருப்பர்.

இவ்விடயத்தில் அரசியல் வாதிகள் தலையிட்டு தம்மை முன்னிலைப்படுத்துவதே மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா வலிவடக்கு மக்களின் வாக்கைப் பெற்று தெரிவானவர். அவரது "தமிழீழப் பிரகடனம்" என்பது தனக்கு வாக்களித்த மக்களின் மீள் குடியேற்றத்திற்கு கேடாக வந்துள்ளது.

**வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்போது "தமிழீழம் தான் தீர்வு" என்று கூறிய தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் பின்பான காலகட் டத்தில் தம்மை எதிர்த்த இளைஞர்களை முன்னே தள்ளிவிட்டு அழித்தது. தமிழீழம் என்பது சாத்தியம் இல்லையென்பது நன்றா கவே தெரிந்திருந்தது. வட்டுக்கோட்டைப் பிரகடனத் தைச் சொன்னவர்கள் வாழ்ந்தார்கள் அல்லது இதுவரை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதைக் கேட்டவர்கள் அழிந்து போனார்கள்.**

இவரது பாராளுமன்ற உரை என்பது வெறும் பகிடியான உரை அல்ல. தமிழ்த் தேசியத்தின் கூட்டமைப்பின் செயலாளர் என்ற வகையில் அவ்வாறு பொறுப்பற்ற வகையில் கதைத்திருக்க வாய்ப்பில்லை. அவரது நாடாளுமன்ற உரை நாடாளுமன்றப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கும். எனவே அவருக்குப் பின்னணியில் யாரோ பலமாக இருப்பதால்தான் அவர் அவ்வாறு உரையாற்றினார் என்பது சிங்கள ஆட்சியாளர்களுக்கு குறிப்பாக பிரதமர் ரணிலுக்கு தெரியாதது அல்ல.

இந்தப் பின்னணியில் இந்தியா மற்றும் புலம்பெயர் நாடுகளில் தமிழர்கள் உள்ளனர் என்பதை மாவை சேனாதிராஜா மறைமுகமாகத் தெரியப்படுத்தியுமுள்ளார்.

இந்தப் பின்னணியில் வலிவடக்கில் இருந்து இராணுவமும், கடற்படையும் விலகிச் செல்லவாய்ப்பில்லை.

தற்போது விடுவிக்கப்பட்ட நிலத்தை தான் விடவில்லை. மகிந்தராஜபக்ச ஏற்கனவே விடச் சம்மதித்த பகுதிகளைத்தான் விடுவித்துள்ளோமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் தான் தமிழ் மக்களுக்கு எதையும் விட்டுக்கொடுக்கவில்லை என்பதையே கூறியிருக் கிறார்.

இதைவிட இந்தியாவின் மீன்பிடிப் படகுகள் மூலம் கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் இலங்கைக்குள் கடத்தப்பட்டு வருகிறது. இது போலவே ஆயுத ரீதியான தொடர்புகளும் ஏற்பட்டுவிட வாய்ப்புண்டு என்பதையும் இலங்கையின் பாதுகாப்புப் படைகள் எதிர்பார்த்திருக்கின்றன.

இதைவிட, தமிழ் மக்கள் மத்தியில் நிறைந்துள்ள அடாவடித்தனங்களின் மத்தியில் படைக்குறைப்பு என்பது சாதாரண மக்களையே பாதிக்கும். படையை வெளியேறுமாறு கூறுபவர்கள் முதலில் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். அதை யாராவது பொறுப்பெடுக்கிறீர்களா என்று பிரதமரோ, ஜனாதிபதியோ கேட்டால் இருந்த இடத்திற்கும் பதில் சொல்லாமல் இடத்தைக் காலி செய்து விடுவார்கள்.

இராணுவமே வெளியேறு என்ற கோசத்திலுள்ள குரூரம் என்னவெனில் இலங்கை அரசை விட இராணுவத்தை வெளியேறுமாறு கூறுபவர்களுக்கு 100% தெரியும் அது சாத்தியமில்லை என்று. ஆனால், அவர்களும் மக்களுக்காகத்தான் கதைக்கிறார்கள் என்றால் அதை நம்பித்தான் ஆக வேண்டுமா? தமது காணியில் குடியேறக் காத்திருக்கும் மக்கள் தான் பாவம்.

தற்போதுள்ள முன்னரங்க நிலை படைநிலைகளை மீளப் பெற்றுக் கொள்ளும் நிலையில்லை. அந்தக் காணிகளுக்கு சொந்தமான மக்கள் அதை விளங்கிக் கொண்டால் இராணுவத்தை வெளியேற்றுவோம் என்ற வாணவெடி வெறும் புஸ் வாணம் என்பது புரியும்.

**விழி**

# பிரதேசவாதத்தில் ஊறியோரின் அர்த்தமற்ற போராட்டம்

## கண்டாவளைப் பிரதேச செயலகம்

நல்லதம்பி கார்த்திகே

கடந்த 14, 15 ஆம் திகதிகளில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்கு முன் 20 தொடக்கம் 30 வரையானவர்கள் ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.



நாட்டில் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டமும் அது சார்ந்த பிரச்சினையும் பெரியளவில் ஊடகங்கள் முதல் அரசியல் மட்டங்களில் முக்கியத்துவம் மிக்க பிரச்சினையாகக் காணப்பட்ட நேர்த்தில் ஒரு உண்ணாவிரதம் என்றவுடன் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து நடக்கிற போராட்டமாக இருக்கலாம் என்று நினைத்தால் அந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் எம்பிமாரோ, அரசியல் பிரதிநிதிகளையோ காணவில்லை எனவே அப்படி இருக்காது. ஏனெனில் காகம் இருக்க பனம் பழம் விழுந்த கதையாக மக்கள் நலன் சார்ந்து ஏதேனும் அமைப்புகள் ஏற்பாடு செய்கின்ற இவ்வாறான போராட்டங்களை எப்படியோ மோப்பம் பிடித்து அறிந்து அரசியல்வாதிகள் அந்த இடங்களுக்கு வந்து நிற்க

மீடியாக்காரரும் உடனே ஓடிப் போய் ஒலி வாங்கியை நீட்ட பிறகென்ன வந்த எம்.பி முழங்கித் தள்ளுவார் ஏதோ தான் ஏற்பாடு செய்து மக்களின் நலனுக்காக கஸ்ரப்பட்ட மாதிரி. ஆனால் ஏற்பாட்டாளர்களோ செய்வதறியாது தலையை சொறிஞ்சு கொண்டு நிற்பினம் இதுதான் தமிழர் பிரதேசங்களில் நடக்கிற மக்களின் எதிர்ப்பு போராட்டங்களில் நடக்கிற நாடகம். ஆனால் இந்த போராட்டத்தில் அப்படி அரசியல்தரப்பு ஒன்றையும் காணாதது இந்தப் போராட்டம் அவர்களது அரசியல் இலாபத்திற்குரிய போராட்டம் அல்ல அல்லது இந்த உண்ணா விரதப் போராட்டத்தின் இலாப நட்ட கணக்கில் அரசியல் இலாபம் குறைவாக இருந்திருக்கலாம் அதுதான் அவர்களை காணயில்லை. என்று நினைச்சுக்கொண்டோம்

சரி இது ஒருபுறமிருக்க கடும் மழை வெள்ளத்தின் பாதிப்பு எனவே அதனால் பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டமாக இருக்குமோ என்றால் அதுவும் இல்லை ஏனெனில் பிரதேச மட்ட அரசியல் தரப்புக்களையும் அந்த உண்ணாவிரத்தில் காணவில்லை. எனவே இது மக்கள் நலன்சார்ந்த போராட்டம் இல்லை என்பதனை உறுதியாக தீர்மானித்துக் கொண்டு கரைச்சி பிரதேச சபைக்கு முன் சென்று உண்ணா விரதத்தில் ஈடுபடுகின்றவர்களிடம் கேட்டால் தெரியும்தானே என்றால் உள்ளுக்குள் ஒரு சின்ன பயம் நாங்கள் மீடியாக்காரர் இல்லையே, மீடியாக்காரர் இவ்வாறான இடங்களுக்கு அருகில் செல்லும் போதே போராட்டக்காரர்கள் முண்டியடித்துக் கொண்டு ஏன் உண்ணாவிரதம் இருக்கிறம் எங்களின் கோரிக்கை என்ன, என்ன செய்யப் போறம் என்ற எல்லா விளக்கத்தையும் சொல்லிப் போடுவார்கள் செய்திகளில் வருகின்றதோ இல்லை மீடியாக்காரரிட்ட சொன்னால் சரி போராட்டத்தின் இலக்கு அடைந்துவிட்டதாக திருப்தி அடைந்துகொள்வார்கள்.

இப்போதெல்லாம் அரசியல் தரப்புகள் செய்கின்ற எல்லா போராட்டங்களில் அவர்கள் அறிவிக்கின்ற நேரத்திற்கு மக்கள் உள்ளிட்ட எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தி அடைந்திருந்தாலும் மீடியாக்காரர் குறித்த இடத்திற்கு வாராமல் தங்களின் போராட்டத்தை ஆரம்பிக்கவே மாட்டார்கள். ஒரு கதைக்கு மீடியாக்காரர் சமுகம் தரவில்லை என்றால் சமுகமளித்திருந்த மக்களை இன்று போய் நாளை வா என்று சொல்லுவார்களே தவிர போராட்டத்தை செய்யமாட்டார்கள். சிலர் ஒரு போராடடத்தை நடத்த தீர்மானிக்கும் போதே மீடியாக்காரரிடம் தொடர்பு கொண்டு இந்த திகதியில் உங்களுக்கு நேரம் இருக்குமா என்று கேட்டுவிட்டு ஏற்பாடு செய்கின்றவர்களும் உண்டு. தற்போது போராட்டங்கள் என்பது ஊடகங்களுக்காக நடத்தப்படுவதாக மாறிவிட்டது.

எனவே எதுவாகினும் சரி அவர்களிடமே கேட்பம் என்று சென்றால் 20 அடி தகரப் பந்தலில் 20 தொடக்கம் 30 வரையான ஓய்வு பெற்ற கிராம அலுவலரோட சில வயோதிபர்கள் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார்கள். முன்னால் ஒரு பனர் அதை வாசித்த போதும் புரியவில்லை. எனவே ஒருவரிட்ட கிட்டப்போய் ஏன் ஐயா இருக்கிறீங்கள் என்றேன். உண்ணாவிரதம் என்றார். பனரில் எழுதிப்போட்ட படியால்தான் தெரிஞ்சது இது உண்ணாவிரதம் என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டு, ஏன் என்று மெதுவா கேட்க பாவம் வயது போன மனிசன் சத்தமாக ஏஜிஒ கந்தோரை மாற்றக் கூடாது அதுக்குத்தான் என்றார்

எந்த ஏஜிஒ கந்தோர் நீங்கள் எங்கிருந்து வந்து உண்ணாவிரதம் இருக்கின்றீர்கள் என்றேன் கண்டாவளை ஏஜிஒ கந்தோர் நாங்கள் கண்டாவளையில் இருந்து வ்ந்து உண்ணாவிரதம் இருக்கிறம் என்றார் கண்டாவளை ஏஜிஒ கந்தோர் வெளிக்கண்டல் பாலத்திற்கு அருகில் வெள்ளத்திற்குள் இருக்கிற ஏஜிஒ கந்தோரா? ஒவ்வொரு ஆண்டும் மாரி காலத்தில் வெள்ளத்தினால மூழ்கி பூட்டப்படுகின்ற ஏஜிஒ கந்தோரா என்றேன் ஓம்ஓம் அதுதான் என்றார். அந்த ஏஜிஒ கந்தோரை எங்க மாற்றப் போகினம் புளியம் பொக்கணைச் சந்தியில் என்றார்



அட அது நல்ல இடமாயிற்றே வெள்ளம் வராது, ஏஜிஒ கந்தோரின் திட்டமிடல் பிரிவு, சமுர்த்தி வங்கி அலுவலகம், ஏஜிஒ ஐயாவின்ர வாசல்தளம், கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம், கமநல சேவை நிலையம், கூட்டுறவு கடைகள், தேனீர் கடைகள் என எல்லாம் ஒருமித்து காணப்படுகின்ற ஒரு மத்திய பகுதிதானே அந்தப் பிரதேசம் ஏன் அங்கு கொண்டு போகக் கூடாது என்றபோது அவர் சொன்னார்

அது கண்டாவளை என்ற பெயரில் இருக்கிற ஏஜிஒ கந்தோர் அது கண்டாவளையில் தான் இருக்கவேண்டும் என்று. தொடர்ந்தும் அவரிடம் கேட்டேன்

கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 16 கிராம அலுவலர் பிரிவுகளில் 30 ஆயிரம் வரையான மக்கள் வாழ்கின்றார்கள் அதில ஒரு கிராம அலுவலர் பிரிவைச்சேர்ந்த ஒரு முப்பது பேருக்குத்தானா ஏஜிஒ கந்தோர் நல்ல பொருத்தமான இடத்திற்கு போறது பிடிக்கயில்லையா என்றேன் என்னை ஒரு மாதிரி பார்த்து நீங்கள் எந்த இடம் என்றார் நான் கிளிநொச்சி உருத்திரபுரம் என்ற போது தொடர்ந்தும் பதிலளித்தார்

மற்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வரமாட்டினம். ஏன் கேட்கயில்லையா? கேட்டம் அவர்கள் ஒத்துவரயில்லை சரி கண்டாவளையிலும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் உள்ள போதும் நீங்கள் ஒரு முப்பது பேர் ஏன்? அவர்களுக்க இதில் அக்கறையில்லை என்றார். யார்தான் ஒரு அலுவலகம் தொடர்ந்தும் வெள்ளத்திற்குள் தற்காலிக கட்டடங்களில் இருக்க விரும்புவினம் என மனதிற்குள் நினைத்தபடி ஐயா உங்கட ஏஜிஒ கந்தோர் தொடர்ந்தும் வெள்ளத்திற்குள் அதுவும் ஒரு தற்காலிக கொட்டகையில் இயங்குவது உங்களுக்கு விருப்பமாக இருக்கிறதா, கிளிநொச்சி மாவட்டத்தில் பளை கரைச்சி அழகான நிரந்தர கட்டங்களில் இயங்குகின்றன. பூநகரி தற்போது கட்டிக்கொண்டிருக்கின்றார்கள் கண்டா வளைக்கு மட்டும்தான் இரண்டு தடவை மூன்று மாடி கட்டடத்திற்கு நிதி வந்து இந்த பிணக்கு காரணமாக திரும்பிச் சென்றுவிட்டது. இந்த வருடம்தான் நிதியை திரும்ப விடாது மூன்று கட்டடத்திற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 25 வீதமான கட்டுமானப் பணிகளும் நிறைவடைந்த நிலையில் ஒரு பொருத்தமில்லாத காரணத்திற்காக உண்ணாவிரதம் போராட்டம் இருக்கின்றீர்கள் இது சரியா என்றேன்.

கண்டாவளை பழமையான ஊர் அந்த ஊரின் பெயரில்தான் ஏஜிஒ கந்தோர் இருக்குது எனவே அது அங்குதான் இருக்க வேண்டும் என்றார். அப்படியென்றால் காசு தாறவன் ஏஜிஒ கந்தோர் கட்ட அந்த இடத்திற்கு காசு தரமாட்டான் என்றேன் அதைப் பற்றி எங்களுக்கு கவலையில்லை எங்களுக்கு அங்கு ஏஜிஒ கந்தோர் இருக்க வேணும் என அடிச்சு கூறிவிட்டார். ஏனையவர்களைப் பார்த்தால் அவர்களும் அதே நிலைப்பாட்டில் தான் இருக்கின்றார்கள் ஏனெனில் அருகில் உள்ள இன்னொருவரிடம் கேட்ட போது சொன்னார் அவர் (ஐயா) சொனன்னதுதான் எங்கட நிலைப்பாடும் என்று.

எனவே இதுவரை உரையாடிதற்கு அமைவாக ஒன்றை மட்டும் தெளிவாக புரிந்துகொள்ள முடிந்தது. அதாவது உண்ணாவிரதம் இருப்பவர்கள் தங்களின் பிரதேச வாதத்தில் ஊறியவர்கள் என்று. அந்த பிரதேச வாதத்தின் வெளிப்பாடுதான் ஒரு பொருத்தமில்லாத ஒவ்வொரு வருடமும் வெள்ளத்தினால் மூழ்குகின்ற ஒரு இடத்தில் இருக்கின்ற பிரதேச செயலகத்தை தொடர்ந்தும் அதே இடத்தில் இருக்க வேண்டும் என்ற கொஞ்சமும் நியாயமில்லாத சிறு பிள்ளை தனமான கோரிக்கையும் போராட்டமும். அமைக்கப்பட்டு வருகின்ற மூன்று மாடி கட்டடம் நிறுத்தப் பட்டாலும் பரவாயில்லை இனிமேல் அவ்வாறு ஒரு கட்டடம் அமைப்பதற்கு நிதி கிடைக்காது விட்டாலும் பரவாயில்லை புளியம்பொக்கணைச் சந்தியில் உள்ள அரச காணியில் புதிய பிரதேச செயலகத்தை அமைக்க கூடாது எனும் கோரிக்கை.

கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 16 கிராம அலுவலர் பிரிவுகளில் ஒரு கிராம அலுவலர் பிரிவான கண்டாவளை கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஒரு குறிப்பிட்ட வீதத்தினரே இவ்வாறு சுய நலமிக்க ஒரு கோரிக்கையை வைத்து இரண்டு நாள் உண்ணா விரத போராட்டத்தை நடத்தினார்கள். இதில் ஓய்வு பெற்ற கிராம அலுவலர் முக்கியமானவர் ஒரு படிச்ச மனிசன் முட்டாள் தனமாக சிந்தித்து ஒரு சிலரை ஒருங்கிணைத்து இந்தப் போராட்டத்தை நடத்தியிருக்கிறார்.

ஆனால் உண்மையாக தற்போது பிரதேச செயலகம் இயங்குகின்ற இடத்திலிருந்து தொலைவில் உள்ள பரந்தன், ஆனையிறவு, தட்டுவன் கொட்டி, உமையாள் புரம், முரசு மோட்டை ஊரியான் போன்ற கிராமங்களைச் சேர்ந்த

(தொடர்ச்சி 23 இல்......)

# நாவடக்கம் மிக்க அரசியல்வாதியே சிறந்த மக்கள் தலைவன்

மனித வாழ்வுக்கு சிறந்த நா அடக்கம் தேவை. இது நாட்டை ஆளுகின்ற தலைவர்களுக்கு மிக முக்கியம். ஒருவனது அறிவு அவனது நாவடக்கத்திலிருந்து புலப்படும். சிறந்த தலைமைத்துவம் உடையவன் என்றால் நாவடக்கம் மிக்கவனாக அவன் இருப்பான்.

அறிஞர் அண்ணா தமிழக முதல்வராக இருந்தகாலத்தில், ஒரு முறை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கே.விநாயகம் அண்ணாவை நோக்கி, தமிழக அரசு பேருந்துகளில் எழுதப்பட்டிருக்கும்

**“யாகவராயினும் நாகாக்க காவாக்கால்**

**சோகப்பர் சொல்லிழுக்குப் பட்டு”**

என்கின்ற திருக்குறள் யாருக்காக எழுதப்பட்டுள்ளது? என்று ஒரு வினாவை எழுப்பினார். காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் நன்றாக அண்ணாவை சிக்கலில் மாட்டிவிட்டார் விநாயகம் என்று தங்களுக்குள் சிரித்துக் கொண்டார்கள்.

அந்தக் குறள் பேருந்தில் பணி புரியும் ஊழியர்களுக்காகவே எழுதப்பட்டிருக்கிறது என்று அண்ணா பதில் சொல்வாராகின், பேருந்து ஊழியர்கள் வாய்ச்சொல்லில் அடக்கம் இல்லாதவர்கள் என்று



அமைந்துவிடும். அந்தக் குறள் பேருந்தில் பயணம் செய்பவர்களுக்காகவே எழுதப்பட்டிருக்கிறது என்று அண்ணா பதில் சொல்வாராகில் பொது மக்களின் மனம் வருத்தப்படுவர். எனவே, எப்படிப் பார்த்தாலும் நிலை சிக்கலாகவே இருப்பதால், அவர் எப்படி பதில் சொல்லப்போகிறாரோ என்று சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அண்ணாவையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அறிஞர் அண்ணாவோ எந்த வித தயக்கமுமின்றி – எந்தவித சஞ்சலமுமின்றி– மிகத் தெளிவாக, “யாருக்கெல்லாம் நாவு இருக்கிறதோ அவர்கள் எல்லோருக்காவும் தான் இந்தக் குறள் எழுதப்பட்டிருக்கிறது”–என்றார். அண்ணாவின் பதிலைக் கேட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் உட்பட எல்லோரும் ஒரு சேர ஆர்ப்பரித்து கைதட்டி மகிழ்ந்தார்களாம்.

நான் இந்தக் கருத்தை ஏன் இங்கு பதிவேற்றுகின்றேன் என்றால், எங்களுடைய வடக்கு முதல்வர் பெருமதிப்புக்குரிய விக்கி ஐயா அவர்கள் அண்ணாவைப் போன்று ஒரு சிறந்த கல்விமான். ஆன்மீகவாதி. நீதியரசராக இருந்து பல்வேறுதரப்பட்ட மக்களையும், பல்வேறு குணாதிசயம் படைத்தவர்களையும் கற்றுணர்ந்தவர். பல சமூகங்களின் வாழ்க்கை முறையை உணர்ந்தவர். அரசியலில் புதியவர் என்றாலும் மக்கள் மயப்பட்ட– மக்களின் பிரச்சினைகளை உணர்ந்த – ஒருவரே வடக்கின் முதல்வர் கதிரையை அலங்கரித்துள்ளார். இலங்கையின் 9 மாகாணங்களிலுமுள்ள முதல்வர்களிலும் பார்க்க வடக்கின் முதல்வருக்கு கற்றறிந்தோர் சமூகத்தில் ஒரு தனிமதிப்புண்டு. அவர் எமது முதல்வராக தெரிவுசெய்யப்பட்டமை தமிழ் மக்களாகிய நாம் செய்த நற்றவமே என்று மாகாணசபை ஆட்சிப்பீடமேறியதும் எண்ணி மகிழ்ந்தனர். சர்வதேசமும் எமது முதல்வருக்கு ஒரு தனிகெளரவத்தை வழங்கி வருகின்றது. ஆனால், எமது முதல்வா தற்போது பத்திரிகைகளில் வெளியிட்ட அறிக்கை மூலம் தனது சிறுமைத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளாா். தனது அறிவின் ஆழம் இவ்வளவுதான் என்பதைப் புலப்படுத்தியுள்ளாா். தலைமைத்துவம், சாணக்கியம், புத்திசாதுர்யம், ஆளுமை என்ற சொற்களுக்கு பொருள்புரியாதவராகத் தான் உள்ளேன் என்பதை அவரது அறிக்கையிலிருந்து அவ் வெளிப்படுத்தியுள்ளாா்.

“ஒன்றானுந் தீச்சொல் பொருட் பயன் உண்டாயின்

நின்றாகாதாகி விடும்.” என்று வள்ளுவர் குறிப்பிட்டதன் பொருள், ஒரு குடம் பாலில் துளி நஞ்சு போல், பேசும் சொற்களில் ஒரு சொல் தீய சொல்லானால் அதுவரை கூறிய நல்ல சொற்கள் அனைத்தும் பயனற்றுப் போய்விடும் என்பதை முதல்வரின் அறிக்கை காட்டியுள்ளது. சுமந்திரன் அவர்களும் ஆரம்பத்தில ஆஸ்திரேலியாவில் அலட்டியிருந்தாலும், முதல்வரின் கடிதத்துக்கு அவரது பதில் அவரது நாவடக்கத்தையும், சாணக்கியத்தையும், ஆளுமையையும், அறிவையும் வெளிப்படுத்தியுள்ளது.

பழங்காலத்தில் “அடக்கம்” என்ற ஒரே சொல் பல ஒழுகலாறுகளையும் வற்புறுத்தியது. இன்று அடக்கம் என்ற பண்பு விரிந்து தனித்தனியே குறியிட்டுச் சொல்கிற வகையில் அமைந்துள்ளது. பொதுவாக மற்றவர்களிடம் அகந்தையின்றி அடக்கமுடையவராக நடந்து கொள்ளும் பண்பு. “பணிவு” என்ற பிறிதொரு சொல்லால் உணர்த்தப்படுகிறது. திருக்குறள்படி பணிவுடமையும்

அடக்கமுடைமையிலேயே அடங்கியிருக்கிறது. அடுத்துத் தன்னடக்கம், நாவடக்கம், பொறிகள் அடக்கம், புலனடக்கம் என்றெல்லாம் சொல்லப் பெறுகின்றன.

மனிதன் அடைந்து ஒழுக வேண்டிய நற்பண்புகள் பற்பல. அவற்றுள் தலையாயது தன்னல மறுப்பு. நீதியின்பால் வேட்கை, ஈகைக்குணம், அன்புடைமை இவையெல்லாம் சிறந்தனவாயினும் தன்னடக்கமில்லாது போனால், இந்தப் பண்புகள் அனைத்தும் கெடும். ஆதலால், ஒழுக்கங்களுள் சிறந்தது, தலையாயது தன்னடக்கம். கிரேக்கச் சிந்தனையாளன் சோக்ரட்டீஸ், மனிதன் மேற்கொள்ள வேண்டிய முதல்நிலைப் பண்புகளாகத் தன்னடக்கத்தையும் புலனடக்கத்தையும் கூறியுள்ளாா். இவை எமது அரசியல் தலைமைகளுக்கும் அவசியமாகின்றன.

தன்னடக்கம் என்ற சிறந்த பண்பினைப் பெற வேண்டுமாயின் மற்றவர்களிடம் குறை காணும் தீமை அறவே கூடாது. குறை கண்டாலும் அதை இரகசியமாகக் கொண்டு பிறரிடம் கூறக்கூடாது. வீணான விவாதங்கள் அறவே கூடாது. கட்சி – பிரதி கட்சிச் சுழியில் சிக்கித் தவிக்காமல் என்றும் எப்பொழுதும் பொதுநிலை வகிக்க வேண்டும். தன்னைப் பற்றிய உயர்வு நினைவுகளை விட்டொழித்து விட்டால் அடக்கப்பண்பு தானாகவே வந்து விடும்.

பொதுவாகத் திருக்குறள் அடக்கமுடைமையையும் அதன் பயனையும் முதல் நான்கு குறள்களில் வகுத்து கூறுகின்றது. அடுத்து மற்றவர்களிடத்தில் பணிவாக நடந்து கொள்ள வேண்டிய பண்பை எடுத்துக் கூறுகிறது. செல்வமுடைமை அகந்தையை வளர்க்கும். ஆதலால், செல்வம் உடையார் பணிவுடையாராகவும் இருப்பின் இரண்டு மடங்கு செல்வம் பெற்றது போன்றது என்பது திருக்குறள் கருத்து.

அடுத்து, ஐம்பொறிகள், ஐம்புலன்களின் அடக்கத்தை எடுத்துக் கூறுகிறது. அடக்கமுடைமை என்ற பண்பின் தோற்றத்திற்குரிய ஒழுகலாற்றை எடுத்துக் காட்டுகிறது, புலன்கள், ஆசைகள் தோன்றும் களம். ஆசைகள் தோன்றி வளர்ந்தால் அடக்கமுடைமையைப் பெறுதல் இயலாது. புலன்களில் ஆசைகள் தலைப்படின் அந்த ஆசைகளை அடையப் பொறிகளை இயக்கும் ஆன்மா, அப்போது பொறிகள் மதம் பிடித்த களிறுகளைப்போல் கட்டுப்பாடின்றிச் செயற்படும். இது தவறு. பெரும்பாலும் இச்சை, பொறி வாயிலாகச் செய்திகளாக, பொருள்களாகப் புலன்களுக்குச் செல்லும். புலன்கள், தாம் பொறி வாயிலாகப் பெற்ற செய்திகளை, பொருள்களை இச்சையாக மாற்றி மீண்டும் பொறிகளைத் தூண்டும் அவற்றை அடைந்து அனுபவிப்பதற்காக! ஆதலால், பொறிகளை கண்டபடி சுற்றவிடாமல் பாதுகாத்தல் பொறியடக்கம், புலனடக்கம் இரண்டும் ஒருங்கே வந்தணையும். இந்த உயரிய ஒழுகலாறு அமைய வேண்டுமானால் அழகுடையன எல்லாம் ஆராதனைக்கே உரியன, அனுபவிப்பதற்கு அல்ல என்ற கருத்தும் நல்லனவெல்லாம் மற்றவர்களுக்கே என்ற எண்ணமும் தோன்றிடின் பொறியடக்கம் தானே வந்தமையும் புலனடக்கமும் வந்தமையும். பொறிகள் அடக்கத்திற்குத் திருக்குறள் அற்புதமான ஓர் ஆலோசனை கூறுகிறது. ஆமையை உதாரணமாக வைத்துக் கூறுகிறது.



ஆமை, தனக்கு நலம் பயக்காத சூழல்களில் தனது உறுப்புகளை உள்ளே இழுத்து ஒடுக்கிக் கொள்ளும். தனது நலனுக்கே ஏற்ற சூழ்நிலையில் தனது உறுப்புக்களை வெளியே நீட்டி அனுபவிக்கும். இதுபோல நாமும் நமக்கு நலம் பயக்கக்கூடிய காட்சிகளைக் கண்டு அனுபவிக்கலாம். கேள்விகளை கேட்டு அனுபவிக்கலாம், சுவையானவைகளை உண்டு அனுபவிக்கலாம். நம்முடைய ஆன்ம நலனுக்குப் பயன்தராத செய்திகளில் நம்முடைய பொறிகளை ஈடுபட அனுமதிக்காமல் இழுத்து அப்புறப்படுத்தி விடவேண்டும். ஆமையின் பொறிகளைப் போல் மனிதனின் பொறிகள் ஒடுக்கக்கூடியன அல்ல. பின் என்ன செய்யலாம்? நமது பொறிகளுக்கு நாமே நலம் பயக்கக்கூடிய அனுபவங்களைப் படைத்துக் கொடுக்க வேணும். இதனையே திருமந்திரத்தில் திருமூலர்,

“ஆசை அறுமின் ஆசை அறுமின்

ஈசனோடாயினும் ஆசை அறு மின்

ஆசை படப் பட ஆய் வரும் துன்பங்கள்

ஆசை விடவிட ஆனந்தமாகுமே” என்கிறாா். ஆசைகள் எம்மைச் சூழச்சூழ துன்பங்கள்தான் அதிகரிக்கும். ஆனால், ஆன்மீகத்தில் ஞானநிலைவரை சென்ற முதல்வா், அரசியலில் இறங்கி சாதாரண மனிதா்கள் போல் இச்சைகளால் சூழப் பெற்று துன்பசாகரத்தில் உழறுகின்றாா். இன்று அதிலிருந்து மீள முடியாது அவர் தவிக்கின்றமை தமிழ் மக்களுக்கு வேதனையளிக்கின்றது.

அடுத்து நாவடக்கம் பற்றியும் மூன்று குறள்களில் பேசுகிறது. தீய சொற்களை அறவே விலக்கும்படி திருக்குறள் ஆணையிடுகிறது. இத்தகு அடக்கமுடைமையைச் சார்ந்த பண்புகள் வாழ்க்கையில் தங்கினால் வாழ்வு அறவாழ்வாக வளரும்.

“யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்

சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு” என்கிறது திருக்குறள்.

அடக்கம் என்ற தன்மை ஒருவனைத் தேவனுக்கு ஈடாக உயர்த்தும் என்பது திருவள்ளுவர் சொல்லிய வாக்கு. அந்த வகையில் அடக்கமுடையவனுக்கு எல்லாவிதத்திலும் சிறப்பு என்று நாம் அறிகிறோம். ஒருவன் தன் நாவைக் கட்டுப்படுத்த வேண்டும் (இந்த இடத்தில் வயிற்றுக்கு ஈயப்படும் பொருளைக் கொண்டு வள்ளுவர் சொல்லவில்லை). நாவடக்கம் என்றால், எந்த இடத்தில் எப்படிப் பேச வேண்டும் என்று பகுத்தறியும் தன்மை. ஒருவனுக்கு மிகவும் அவசியம் ‘நாவடக்கம்’ அல்லது ‘சொல்வன்மை’. எதை எங்கே பேசுவது என்று தெரியாது பேசிவிட்டு, பிறகு ஐயோ பேசினோமே என்று வருத்தப் படுவதில் என்ன பலன்?

ஆகையால் ஒரு மனிதன், (இக்கால அரசியல்வாதி போலில்லாமல்) நாவடக்கம் கொண்டவனாக இருந்தால் அவன் பெருமையடைவான், மாறாக வாயில் வந்தபடி பேசிவிட்டால், மற்றவரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி அசிங்கப்பட்டுப் போவான். தனது கதிரையை –இருப்பை– தங்கவைப்பதற்காக சாதாரணமானவர்கள் போல் முதல்வா் செயற்பட்டால் அது அவரை நிச்சயம் படுகுழியில் தள்ளும்.

தற்போது தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிய மேய்ப்பானின்றி சரியான கட்டுப்படுத்தும் திறன் கொண்ட தலைமையின்றி காணப் படுகின்றது. சரியான தலைமைத்துவம் என்றால் தன் பின்னுள்ள

தமிழதிரன்

(தொடர்ச்சி 23 இல்......)

# யாழில் சமந்தா பவர்









கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ஐ.நாவிற்கான அமெரிக்காவின் தூதுவர் சமந்தா பவர் யாழ்.ஒஸ்மானியக் கல்லூரியில் வடமாகாண முதல்வர் விக்கினேஸ்வரனுடன் இணைந்து நூலகத்தை திறந்து வைப்பதனையும் மாணவிகளுடன் சேர்ந்து எல்லே விளையாடுவதனையும் காணலாம்.





# என்ன என்ன மாற்றங்களோ?

காத்தால வெள்ளெண எழும்பிறது சரியான கஸ்டம். மழைக்குளிர் இது முடிய பனிக்குளிர் வரப்போகுது.

எங்கட இளமைக் காலத்தில கொஞ்சம் குழறுபடி யாரும் நடந்தா... 'ஆளுக்குப் பனிக் குணம் போல என்று சொல்லுவம். இந்த பனிக் குணத்துக்கெண்டு விசேட அடையாளம் எங்கயோ இடி இடிக்க எங்கயோ மழை பெஞ்சமாதிரி... ஆற்றயோ கோவத்தை ஆரிலயோ சாட்டுறது இல்ல காட்டுறது. இப்பத்தயில் பிள்ளையள் பெரும்பாலும் தங்கடரோல் மாடலா வச்சிருக் கிறது சினிமாவைத்தான்.

வச்சிருக்கட்டன் நாங்களும் இல்லை இருந்தாலும் வயது வந்து திருமணமாவர்களிடமே இருந்தது. திருமணமாகாதவர் குடித்தாலும் அது நாலாம் பேருக்கும் தெரியாம நடந்துது. குடிகாரன் எண்டு தெரிஞ்சா பொம்பிளை குடுக்க யோசிப்பாங்கள். எண்ட பயம் இருந்துது. தங்கட தங்கட கதாநாயகர்களைப் போல தாங்களும் நடக்கிறதில பெருமைப்பட்டினம். அயல் பொம்பிளையள தங்கட உறவா நினைச்சு அவயட பாதுகாப்புக்கு துணை நிண்டினம். அப்ப அந்தக் காலத்தில காதல் இல்லையோ எண்டு நினைக்க வேண்டாம். இருந்தது. விரும்பிக் கொண்டவர்கள் ஊர்ப பெரியவர்களிடம் தெரிவித்தால் போதும் அவர்கள் பெற்றோர்களை கலந்து பேசி கலியாணத்தை தாய் தேப்பன்ர சம்மதத்தோட செய்து விட்டாங் கள். நீண்ட நெடுங்காலம் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் கண்டு வாழ்ந் தவர் அவர். காதலென்னடா காதல்....

இதையெல்லாம் சொல்லுற னெண்டா இந்தக்காலப் பிள்ளை யளும் எங்களப்போலத்தான். சினிமாதான் அவயளுக்கும் வழிகாட்டி. தல தளபதி சுப்பர்ஸ்டார் மாஸ் அவர் இவரெண்டு எக்கச்சக்கம் கதாநாயகர்கள் வச்சு பூப் போட்டு மாலை போட்டு பாலாபிசேகம் செய்து. அவயளின்ர படம் வாற தியேட்டரெல்லாம் கலியாண மண்டபமாக்கி அட அட அட சொல்லி வேலையில்ல.

இந்தக் கதாநாயகர்கள் இன்றைய உலகின் வழிகாட்டி கள். இன்றைய இளைஞர்களின் போதகர்கள்.. எப்பிடி எண்டா மட்டும் அவன் பறந்து பறந்து அடிக்கிறதும் பாக்கிற வங்கள் நூற்றுக்கணக்கில இருந்தாலும் கதாநாயகனுக்கு உதவியா கூடமாடப் போய் ஒரு அடி அடிக்க மாட்டாங்கள்.

எங்கையாவது அடிமட்டத்தில கைத்தொழில் செய்வான் கதாநாயகன். அவனுக்கு பெரீய்ய்ய இடத்தில உள்ள பொம்பிளயில காதல் வரும் இல்ல அந்தப் பொம்பிளைக்கு இவனில காதல் வரும். பின்ன ஊரைச் சுத்திக் கொண்டிருக்கிற பெடியளின்ர இலக்கும் இதுதான். குடிக்கிறதாலயும் புகைக்கிற தாலயும் தனக்கு கதாநாயக அந்தஸ்து வருதெண்ட கற்பனையில மிதக்கிறாங்கள் சரிவராட்டி வன்முறையில இறங்க வேண்டியதுதான்.

பெற்றோரை ஏமாத்தி பொய் சொல்லி காசு பிடுங்கிறது அவர களோட சமதையா வாயடிக் கிறது பிறகு பின்னால அவர் மிதந்துடுவார். அப்பவும் இருக்கமாட்டாம கத்தினா புருசன்காறன்தான் பிள்ளைய வச்சிருக்க வேணும்.

அந்தநாளயில சினிமாவில கதாநாயகியும் கவர்ச்சி நடிகையும் வேற வேற. கவர்ச்சிக்கெண்டு ஒரு கிளப் டான்ஸ் மட்டும் வரும் பின்ன ஜோதிலச்சுமி, அனுராதா, விசியலலிதா, ஜெயமாலினி டிஸ்கோசாந்தி, அவைதான் கொஞ்சம் குண்டிய நெளிச்சு நெளிச்சு ஆட்டம் போடுவினம். கதாநாயகி மட்டும் மரியாதையான உடுப்போடதான் நடிப்பா நடப்பா... இப்ப கவர்ச்சி நடிகையள் இல்ல ஏனெண்டா கதாநாயகியளே கவர்ச்சி நடிகைளாகிட்டினம். என்ன... காசுதான் இவயள் கிளாமர் ரோலில நடிக்க வெளிக்கிட்டதில கிழவிமாரும் இப்ப தெருவில திண்ணையில கிளாமரா போக வெளிக்கிட்டிட் டினம்.

தங்களப் பாத்து பல்லைக் காட்டினா இவை அதுக்குமேல நெளியினம். பிள்ளை உது சரியில்லயெண்டா என்ர அப்பிடித்தான். எம்ஜியார், சிவாஜி சண்டையில மண்டை உடைச் சவையும் உண்டு. நான் எப்பவும் எம்ஜியார் கட்சிதான். டேய் எம்ஜியார் தன்ர வீட்டுக்கே தாய்வீடு எண்டுதான் பேர் வைச்சவர். ஏண்டாப்பூ சிவாஜியின்ர வீட்டுக்கே அன்னை இல்லம்தான் பேர். எங்கட சண்டைக்க அப்பு இறங்கினா அது வேற பக்கமா இழுத்துக்கொண்டு போயிரும்.

"அ... ஒழுங்கா... ஒரு பாட்டுப் பாடத் தெரியாது.... அவன் சவுந்தரராசன் இல்லாட்டி கவுண்டு போம் மார்கட்டு... அந்த நாளயில தியாகராசா பாகவதர் பாடின பாட்டுக்கு நிகரா... இப்ப உள்ளவையால முடியுமோ. அப்பு இப்பவும் பாகவதர் கிராப் தான். அவற்ற பம்பைத் தலைக்கு அது விசேசமாத்தான் இருக்கும். உடன என்ர தம்பி தரா ...ன்னா.. ய்... னாய். யயயய. பாகவதர் காலத்து இழுப்பை கிடியா இழுத்துக் காட்டுவான்

"அப்புபாகவதர் இப்பராகம் போட்டா கடவுள் நித்திரையாப் போவார்" என்பான் அவனும் எம்ஜியார் கட்சிதான். எங்கட கட்சி வலுவேற வலுவேற அப்பு தன்ர வீட்டோப் பவரை பயன்படுத்த வேண்டிவரும். ஆக, ஏலாத கட்டத்தில,

"அங்... ஆங்... காணும் காணும் போய் பாடப்புத்தகங்களத் திறவுங்கோ சும்மா வம்பளந்து கொண்டிருக்காம... விட்டாக் காணும் 'கதைகண்ட இடம் கைலாயம்' எழும்புங்க எல்லாரும் அவரவர் அலுவலப் பாருங்க" எண்டொரு அதட்டலப் போட்டு தன்ர தோல்விய ஒப்புக் கொண்டி ருவார். அநேகமான பிள்ளைகள் தாயைத் தெய்வமாப் பாத்திச்சினம். அக்கா, தங்கை பாசத்தில தணியாத தாகமா இருந்தினம். மதுபான பாவனை பெரும்பாலும் முடித்து வைத்த சம்பவங்கள் உண்டு. அப்ப வில்லன்கள் இல்லையெண்டும் நினைக்க வேண்டாம். எங்களூர் வில்ல னொருவன் தான் விரும்பிய பெண்ணை கடத்த நினைச்சான். தன்ர நண்பர்களிட்ட உதவி கேட்டான். அவர்கள் ஒரு காரை ஒழுங்குசெய்து கொடுத்தார்கள். கூட ரெண்டு மூண்டு பேர் வந்திச்சினம். வீட்டுக்குள்ளபோய் பெட்டையக் கூட்டிக்கொண்டு வாறதுக்கு அங்க போய்ப் பிழங்கின ஒருத்தனை அனுப்பிச சினம். அவனும் சாதாரணமாப் போறமாதிரி பொழுதுபடப் போனான். தாய்தேப்பன் கவனக் குறைவா இருந்த நேரம் பாத்து பிள்ளை உன்னைக் கொண்டு போகத்தான் வந்தனான் எண்டான். பெடிச்சி திகைச்சுப் போனாள்.

"அண்ணையாணை நான் அந்தாளை விரும்பேல்ல... என்னை விட்டிருங்கோ..." எண்டு சொல்லிப் போட்டாள். அவன் திரும்பிவந்து மற்றாக் களுக்கு விசயத்தை சொன்னதோட விடாம அந்த மாசமே வேற பொம்பிளை பாத்து அவன்ர நான் ஒண்டொண்டாச் சொல்லுவனோ ஒருமிக்கச் சொல்லுவனோ.

காதலில வெற்றியா காதலிக்கு சொல்லியாச்சா காதலில தோல்வியா நண்பர்கள் கூடி சரக்கடிச்சாத்தான் அதில ஒரு ஆனந்தம் பெருமை. அதுக்காக களவெடுக்கலாம் மத்தவங்கள ஏமாத்தி பணம் பறிக்கலாம். எப்பிடிப் பாத்தாலும் பெரும்பாலும் வேலவெட்டி இல்லாத கதாநாயகன் தான். அவனுக்கு காசு குடுத்துக் குடுத்தே காதலை வாங்க ஒரு பணக்காரப் பெண் காத்துக் கிடப்பா. இந்த சரக்கை படிக்கிற போதே மட்டுமில்ல பாடசாலை கல்லூரி வளாகத்துக்குள்ளயும் வச்சுக் குடிக்கலாம் ஒரு கையில சிகரட்டை புகைச்சுக்கொண்டே ஒரு கையால புத்தகத்தைப் படிச்சு பரிட்சைக்கு தயார் செய்வான். வீட்டில ரோட்டில நடக்கிற அநியாயங்கள தட்டிக் கேக்கயுக்க அப்பா வந்து பிள்ளை என்ன கதைச்சாலும் பெருமையத் தேடித் தந்திட்டான் எண்டு சொல்ல வேண்டியது. இதன் போதனை என்னவென்றால் பிள்ளையள் எதிர்த்துப் பேசினால் பெற்றார் பொறுத்துக் கொள்ளவும்.

பொம்பிளைப் பிள்ளையளின்ர நிலைமை இன்னும் திறம். பெற்றார் இப்ப இவையோட பேசவே பயப்பிட வேணும் கடுமையா கதைச்சா உரிமை மீறல் அடக்குமுறை அப்பிடி இப்பிடி எண்டு பிரச்சனை பெரிசாப்போம் பிறகென்ன எந்தத் தாரியா இருந்தாலும் ரண் பண்ணிருவினம். பழி தாய் தேப்பனுக்குத்தான் வளப்புச் சரியில்ல.

இப்ப இப்ப உடுத்திற உடுப்பும் அந்த நாளயில கிளப் டான்ஸ்காறியள் காட்டின மாதிரி கண்ணைப் பறிக்கிது. சட்டை சீலையெல்லாம் முள்ளுப்பத்தை குழந்தைப்பிள்ளையள் மடியில வழி எனக்குத் தெரியும் நீங்க உங்கட அலுவல சரியாப் பாருங்கோவாம். ஆருக்குச் சொல்லுற. ஊருக்க சரியான வில்லனே இல்ல எல்லாரும் அவைக்கு கதாநாயகன்தான்.


முந்தி ஆரும் புது ஆக்கள் வீட்ட வந்தால், வெளியில இருக்கிற பிள்ளையள் வீட்டுக்க போயிரும் 'அம்மா ஆரோ வருகினம்' எண்டிட்டு. இப்ப ஆரும் புதிசா வீட்டுக்கு வந்தா... வெளியில இருக்கிற அம்மா...'

'பிள்ளை ஆரோ வந்திருக் கினம்.' எண்டிட்டு உள்ளுக்க போறா... போறா என்ன போக வேணும். பத்தாக்குறைக்கு இரவும் பகலும் செல்போன கன்னத்தில வைச்சுக் கொண்டு கிடக்கிறதும் கன்னத்தில வைச்சுக் கொண்டு திரியிறதும் இப்ப பாசன். சினிமாவில் நடிக்கிறவள் லச்சக்கணக்கில காசை வாங்கிக் கொண்டு கவர்ச்சி காட்டுறாள் அதைப் பாத்திட்டு ஊரில உள்ளதுகள் கவர்ச்சி காட்டியே தீருவமெண்டு தலைவிரிகோல மாத் திரியுதுகள். அதுகளப் பிழை சொல்லேலாது அதுகளுக் கும் வழிகாட்டி சினிமாதானே. இதென்னப்பா நாங்கள் சினிமா வைப் பாத்து நடக்கலாம் இளசுகள் நடக்கக் கூடாதே... ஆரெட்டச் சொல்லி அழுறது. மாற்றங்களை ஏற்றுத்தான் ஆகவேணும் ட்டேய்... பங்கார் உள்ளதைச் சொன்னா அடிக்கத் திரத்திறதே ஆளவிடு சாமி.



**தமிழ்க்கவி**

# புலிப் பயங்கரவாதம் ஆரம்பம்



புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெயரை தமிழீழ விடுதலைப் புலிகள் என்று 1976 ஆம் ஆண்டு மாற்றினார்கள். அதையடுத்து பிரபாகரன் ஐந்து பேர் கொண்ட உயர்மட்ட மத்திய குழு ஒன்றை உருவாக்கினார். பிரபாகரன் தன்னைத்தானே அந்த உயர்மட்ட மத்திய குழுவில் ஒரு உறுப்பினராக நியமித்துக் கொண்டார். மேலும் 1978 ஆம் ஆண்டு நடுப்பகுதியில உயர்மட்ட மத்தியகுழு உறுப்பினராகவும், விடுதலைப் புலிகளின் தலைவராகவும் உமாமகேஸ்வரனை பிரபாகரன் நியமித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு என்று தனியான ஒரு யாப்பை உருவாக்கினார். அந்த உயர்மட்ட தலைவர் குழுவில் இருந்த சகலரும் ஒப்பமிட்டு அந்தச் சட்டங்களை ஏற்றுக் கொண்டனர்.

புதிய விடுதலைப் புலிகளின் யாப்பு சுதந்திரமான இறைமையுடைய தமிழருக்கான ஈழம் என்று அழைக்கப் படும் தனி ஒரு இராச்சியம் அமைக்க வேண்டுமென குறிப்பிட்டிருந்தது.

மேலும், விடுதலைப் புலிகள் யாப்புக்கு எதிராக இயங்குபவர்களுக்கும், குடும்ப அமைப்பை தமது வசதிகளுக்கு ஏற்ப மாற்றி அமைப்பவர்களுக்கும், மது, மாது, புகைத்தல் போன்ற செயற்பாட்டில் ஈடுபடுபவர்களுக்கும் எதிராக கடுமை யான தண்டனைகள் வழங்கப்படும் எனவும், அந்த யாப்பில் குறிப்பி டப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளில் உள்ள உறுப்பினர்கள் திருமணம் செய்யக்கூடாது எனவும் அந்த யாப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

1978ஆம் ஆண்டு நடுப் பகுதியில் விடுதலைப்புலிகளில் இணைந்து கொண்ட உமாமகேஸ்வரன் இந்தப் புலி களின் யாப்புக்கு அமைவாக நடப்பதாகவும், குடும்ப வாழ்க்கையை கைவிடுவ தாகவும், பாலியல் செயலில் ஈடுபடுவதில்லை என்றும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிராக ஒரு அமைப்பை உருவாக்க மாட்டேன் என்றும் சத்தியப் பிரமாணம் செய்து ஒப்பமிட்டார்.

மேலும், யாராவது விடுதலைப் புலி களின் அமைப்பிலிருந்து விலகி வேறு போட்டி இயக்கங்களை ஆரம்பித்தால் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அந்த யாப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளை (Libeeraration Tigers of Tamil Eelam) என்று ஆங்கிலத்தில் அழைக்கலாம் என அவரது நண்பர் ஒருவர் பிரபாகரனுக்கு சிபாரிசு செய்தார். அந்த சிபாரிசை ஏற்று விடுதலைப் புலிகள் அவ்வாறே ஆங்கிலத்தில் அழைக்கப்பட்டு வருகின்றனர்.

அதையடுத்து விடுதலைப் புலிகளின் சின்னமாக கர்ச்சித்து பாயும் ஒரு புலியின் முகமும், அதன் இரண்டு கால்களும், வட்டமாக 33 ரவைகளும் கொண்ட படத்தினை மதுரையில் வைத்து ஓர் ஓவியரின் உதவியுடன் உருவாக்கினார். அன்றைய காலத்தில் சோழ மன்னனின் சின்னமாகப் புலி இருந்தது. இலங்கை மன்னர்கள் யாரும் புலிச் சின்னத்தை வைத்திருக்கவில்லை. பிரபாகரனின் மனதில் இந்திய செல்வாக்கு மேலோங்கி இருந்தது. அதனாலேயே இந்திய வம்சா வளியினரின் புலிச் சின்னத்தை தனது அமைப்பின் சின்னமாக உருவாக்கினார். இலங்கைக்கும் புலிக்கும் எந்த சம்பந் தமும் இல்லை. இந்தியாவின் மேல் மோகம் கொண்டதால்தான் பிரபாகரனின் இந்தப் புலிச்சின்னம் உருவானது.

பிரபாகரன் அக்காலத்தில் தனது அமைப்பை ஸ்திரப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். 1978ஆம் ஆண்ட ளவில்தான் கிட்டு என்று அழைக்கப்பட்ட கிருஸ்ண குமார், மாத்தையா என்ற மகேந்திரராஜா மற்றும் ரகு ஆகியோர் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந் தார்கள். அதையடுத்து திருகோணமலை யில் இருந்த சாள்ஸ் லூக்காஸ் அன்ரனி யும் அந்த வருடமே விடுதலைப் புலியில் சேர்ந்து கொண்டார்.

புதிதாக சேர்ந்து கொண்டவர்கள் அனைவரிற்கும் துப்பாக்கி சுடும் பயிற்சியை வழங்க ஏற்பாடு செய்தார். இந்தப் பயிற்சி வவுனியாவிலுள்ள பூந்தோட்டத்தில் அடர்ந்த மரங்கள் நிறைந்த காடுகளில் நடாத்தி வந்தார்.

இந்தக் காலத்தில்தான் மாணவர் களுக்கான ஈழம் புரட்சிகர அமைப்பு (Eelam Revolutionary organization of students) என்று உருவாக்கப்பட்டது.



— அரசகேசரி —

இந்த இயக்கம் முதலில் லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கத்தை இளையதம்பி இரட்ணசபாபதி இவர் ஒரு மாக்சிஸவாதி. இவர் இலங்கையில் இருந்த காலத்தில் லங்கா சமசமாஜக் கட்சியிலும், பின்னர் ஜே.வி.பிக்கும் ஆதர வாளராக இருந்தார். லண்டனுக்குச் சென்று அங்கே வசிக்கத் தொடங்கிய பின்னர், அவர் மாணவர்களுக்கு என்று மேலும் ஒரு விசேட அமைப்பாக ஈழ மாணவர்களுக்கான பொதுஅமைப்பு (Gues General Union of Eelam Student) ஒன்றை அமைத்தார்.

திரு.இரட்ணசபாபதி அக்காலத்தில் பலஸ்தீன இயக்கத்திற்கு ஆதரவு வழங்கி வந்தார். அக்காலத்தில் அவருக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினுடைய (FATAH) என்ற இராணுவ பிரிவினருடனும் நிறையத் தொடர்புகளை உருவாக்கினார். அக்காலத்தில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த லண்டன் பிரதிநிதியான சையத் ஹமாமியுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். 1977 ஆம் ஆண்டளவில் ஈரோசைச் சேர்ந்த மூவர் அடங்கிய குழு ஒன்றை லெபனானிற்கு அனுப்பி ஆயுதப் பயிற்சி பெறுவதற்கு ஒழுங்கு செய்தார். விஸ்வு என்றழைக்கப்படும் விஸ்வேஸ்வரன், அருளர் என்றழைக்கப்படும் அருட்பிரகாசம மற்றும் சங்கர் ராஜூ ஆகிய மூவரும் பாலஸ்தீனத்திற்குச் சென்று ஆயுதப் பயிற்சிகள் பெற்றார்கள்.

அந்தக்காலத்தில் பிரபாகரனும் தன்னுடைய ஆட்களை லெபனானிற்கு அனுப்பி பயிற்சி வழங்குவதில் ஆர்வம் காட்டினார்.

அக்காலத்தில் ஈரோஸ் அமைப்பினர் வவுனியா செட்டிகுளத்திலிருந்த கண்ணாடி பாமில் (தொட்டத்தில்) தமது பயிற்சி களை நடாத்தினர். அந்தக் கண்ணாடி பாமுக்கு பிரபாகரன் 1977 ஆம் ஆண்டளவில் விஜயம் செய்தார். அவர் அங்கு வந்தபோது அருளரை அழைத்துக் கொண்டு பிரபாகரன் கையில் துப்பாக்கியுடன் வேட்டைக்குச் சென்றார்.

ஒரு குளக்கரை அருகில் வந்து இருவரும் தங்கள் துப்பாக்கி சுடும் திறமைகளை சோதிக்க முனைந்தார்கள். அதன்படி குளத்தில் இடுப்பளவு தண்ணீ ருக்குள் சென்று குளத்திலிருந்த வாத்து ஒன்றிற்கு பிரபாகரன் குறிபார்த்து சுட்டார். துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தில் எல்லா வாத்துக் களும் பறந்தன. ஆனால் ஒரு வாத்து மட்டும் பறக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. அரைக் காற் சட்டை அணிந்திருந்த பிரபாகரன் ஒரு கையில் துப்பாக்கியுடன் தத்தளித்துக் கொண்டிருந்த வாத்தைப் பிடித்துக் கொண்டு அருளருடன் கண்ணாடி பாமுக்கு திரும்பினார். அங்குவந்து பார்த்தபொழுதுதான் வாத்தின் எந்தப் பகுதியிலும் இரத்தக்காயம் காணப்படவில்லை.

அப்பொழுதுதான் இது சம்பந்தமாக அருளர் குறிப்பிடுகையில் "முதல்நாள் வேட்டைக்குச் சென்றபோது, ஒரு வாத்தைச் சுட்டேன். அது எங்கே சென்றது என்று தெரியவில்லை. ஆனால் நான் சுட்ட வாத்தைத்தான் பிரபாகரன் பிடித்தார். ஆனால் நான் அதைப் பிரபாகரனுக்கு கூறவில்லை," எனக் கூறினார்.

வழமையில் பிரபாகரனுக்கு துப்பாக்கி போன்ற பெரிய சுடுகலன்களில் அக்கறை இல்லை. ஆனால் றிவோல்வர் சுடுவதில் தான் வல்லுனராக இருந்தார். கண்ணாடி பாமிலிருந்த போது ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்த சங்கர்ராஜியை சூட்டுப்பந்தை யத்திற்கு வருமாறு கேட்டார்.

சுமார் 15–20 அடி தூரத்தில் ஒரு பால் பேணியை (milk tin) வைத்து அதைக் குறிபார்த்து சுடத் தயாரானார்கள். லெபனான், சிரியா ஆகிய நாடுகளில் பயிற்சிபெற்ற சங்கர் ராஜி சுட்டபொழுது இலக்குத் தவறாமல் குண்டு பேணியில் பாய்ந்து சிறிது தூரம் சென்று விழுந்தது. அவ்வாறு தூரத்தில் விழுந்த பேணியை பிரபாகரன் மீண்டும் அதேஇடத்தில் கொண்டுவந்து வைத்து விட்டு சங்கர் ராஜி நின்ற இடத்திற்கு வந்து சுட்டார். குண்டு துளைத்து பால் பேணி சிதறியது. பிரபாகரன் சங்கர் ராஜியைப் போல எங்கேயும் பயிற்சி பெற வில்லை. அவர் ஓர் ஏகலைவன். தானே புத்தகங்களைப் படித்தும் படங்களைப் பார்த்தும் பயிற்சி பெற்றவராவார்.

1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலுக்கு பிற்பாடு பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசு தமிழீழ விடுதலைப் புலிகளையும், மற்ற இயக்கங்களையும் தடைசெய்யும் சட்டம் ஒன்றை உருவாக்கி நடைமுறைக்கு கொண்டுவந்தது. இந்தச் சட்டம் நாடாளுமன்றில் வாதிடும்போது சட்டத்திற்கு பெரிதாக எதிர்ப்புக்களை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தெரிவிக்கவில்லை.

அவர்களின் மெத்தனப் போக்கு விடுதலைப் புலிகள் மத்தியில் கோபா வேசத்தை உருவாக்கிற்று. அவர்கள் அமிர்தலிங்கத்தின் தலைமையில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை காட்டமாக விமர்சிக்கத் தொடங்கினார்கள். சிலர் யாழ்ப்பாண நகரச் சுவர்களில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியைக் கண்டித்து சுலோகங்களை எழுதினார்கள்.

"கேட்டதோ தமிழீழம்: கிடைத்ததோ ஜப்பான் ஜீப் வண்டிகள்" என்று சிவப்பு மையினால் சுவர்களில் எழுதினார்கள். அக்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜப்பான் ஜீப் வண்டிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் தமிழர்களை கேவலப்படுத்தி கண்டனம் தெரிவிக்கும் அமைச்சர் சிறில் மத்தியூ ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் தமிழர் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலுக்கு உறுதுணையாக இருந்தார். சிறில் மத்தியூ ஒரு விசேட பத்திரிகை யாளர்கள் மாநாட்டைக் கூட்டினார். அந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளின் மூளையாக இயங்குபவர் அமிர்தலிங்கம்தான் என குற்றம் சுமத்தினார்.

மேலும், இந்த மாநாட்டில் பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசும் போது, 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் "சிங்கள மக்களின் இரத்த வெள்ளத்தில் நீந்தி தமிழீழத்தை அடைவோம் என்று திருமதி மங்கையர்கரசி அமிர்தலிங்கம் கூறினார்," என்று குற்றம் சாட்டினார். சிறில் மத்தியூ சாட்டடிய அந்தக் குற்றச்சாட்டு இரண்டையும் அமிர்தலிங்கம் மறுத்தார்.

தொடரும்

# லங்கா ராணி

அருளர்

(கடந்தவார தொடர்ச்சி.....)

பெரிய மேசையில் கிழக்கிலங்கையின் படம் தெரிந்தது. அதில் ஒருவர் வட்டாரியை வைத்துக் கொண்டு அளந்து கொண்டிருந்தார். அறையில் நின்றவண்ணம் நோட்டம் விட்டனர். எவரும் கவனிப்பதாகத் தெரியவில்லை. அந்த அறைக்கு முன்னால் இன்னொரு கூடம் இருந்தது. இதில் திசையறிகருவி வைக்கப்பட்டு தூண்மீது ஒருபேழை பொருத்தப்பட்டிருந்தது. இதை ஒருவர் பார்த்துக்கொண்டு நின்றார். இந்த அறையில் கண்ணாடியினூடாக நோட்டம் விட்டான் சரவணன். சுக்கான் பிடிக்கும் வளையமும் இதில்தான் இருந்தது.

இந்த அறையின் இடதுபக்கமூலையில் கப்டன் நின்று தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தார். இளைஞர்கள் நின்று கப்டனை பார்த்துக்கொண்டிருந்தனர். கப்டன் பேச்சை முடிப்பதாகத் தெரியவில்லை. இந்த அறையின் இடது பக்கத்தில் கதவு இருந்தது. அதனூடாக இளைஞர்கள் இருவரும் வந்து கப்பலை நோட்டம் விட்டனர். இந்த இடம் பார்வை இடுவதற்காகவே செய்யப்பட்டிருந்தது. சுற்றிவர இரும்புக்கம்பியால் பாதுகாக்கப்பட்டிந்தது. இதில் இன்னொருவரும் நின்றுகொண்டிருந்தார். அமைதியானவர். இளைஞர் வயது இருபத்தைந்து இருக்கும். வெள்ளைக் காற் சட்டையும் நீலச்சேட்டும் அணிந்திருந்தார். வேலை முடிந்து நிற்பவர்போல் தெரிந்தது. சரவணன் சற்று உற்றுநோக்கவே புன்னகை புரிந்த வண்ணம் இருவரையும் நெருங்கி "நீங்கள் யாழ்ப்பாணத்தில் எந்த இடம்" என்று தமிழில் தொடங்கினார்.

"சரவணனும் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏன் என்ன விசயம்?" என்றான்.

"இல்லை ஒருகடிதம் கொடுத்துவிட வேண்டும்"

"எழுதித்தாரும் கொடுக்கலாம்" என்று கூறிவிட்டு கப்பலைப்பற்றி வேறு விசயங்களைக் கேட்கத் தொடங்கினான் சரவணன். இவர் சுக்கான் பிடிப்பவர் என்றும் தொடக்க காலத்தில் இருந்தே பணிபுரிந்தவர் என்பதுவும் கப்பலைச் செலுத்துவது பற்றி ஓரளவு தெரிந்திருக்கிறது என்பதும் அவரது பேச்சில் இருந்து தெளிவாகியது. இந்தக்கப்பலில் 40 சிப்பந்திகள். அதிலும் அதிகாரிகள் என்ற தோரணையில் 15பேர் இருக்கின்றார்கள். இதில் இவர் ஒருவர்தான் தமிழர். அநேகமாக எல்லோரும் கடற்படையில் இருந்து கப்பல் வாங்கியதும் இதில் நியமிக்கப்பட்டிருந்தனர். தான் இரவில் வேலை பார்ப்பவர் என்றுமேலும் அவர் சொன்னார்.

கப்டன் பேச்சை முடிக்கவே "என்ன கூப்பிட்டீங்களாமே" என்று ஆங்கிலத்தில் வினவினான்.

"ஆம்!நேற்று உங்களுக்கு கூற மறந்து விட்டேன் நாங்கள் கழிவிடங்களை துப்பரவு செய்ய யாரையும் அழைத்து வரவில்லை. நீங்களே யாரையும் பிடித்து செய்யவேண்டும். ஏதாவது உதவி தேவையென்றால் கூறவும்" என்று கூறி குமாரின் ஆமோதிப்பை எதிர்பார்த்து நின்றார்.

குமாரும் "நாங்களும் இதைப் பற்றி சிந்தித்தோம் யாரையாவது தேடிப்பிடிக்கலாம்" என்று கூறிவிட்டு விடைபெற்று அங்கிருந்து வெளியேறினான். சரவணனும் பின்தொடர்ந்து படிகளில் இறங்கி ராணியைச் சந்திக்க இரண்டாவது தளத்திற்கு சென்றான். ராணி மலையகத்தைச் சேர்ந்தவள்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின் ஏற்பட்ட தேர்தலில் மலையகத் தமிழர்கள் பல இடதுசாரிகளை வெற்றிபெறச்செய்து அனுப்பி இருந்தார்கள். அப்போது இருந்த யூ.என்.பி. அரசாங்கம் இதனைப்பொறுக்க முடியாமல் மலையகத்தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்துவிட்டது. இவர்கள் தமிழர்களாகவும் இருந்ததனால் இந்தியாவிலிருந்து வந்தவர்களை இந்தியாவிற்கே அனுப்பவேண்டும் என்ற கோஷம் எழுப்பப்பட்டது. சிங்கள மக்களின் ஆதரவு அற்றுப்போய்விடுமென்று இடதுசாரிகளும் வாயை மூடிக்கொண்டு இருந்துவிட்டனர். இதே அரசாங்கத்தில் மந்திரியாக இருந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் இந்த மசோதாவை ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானார். இவர் யாழ்ப்பாண பிரதிநிதியாக நாடாளுமன்றில் இருந்தார். இவையெல்லாம் இலங்கை அரசியல் தேசியரீதியிலான அடிப்படையை மாற்றி இன அடிப்படையில் ஒரு போக்கை உருவாக்கி இருந்தன.

அரசாங்கத்தின் தனிச்சிங்களப்போக்கை எதிர்த்து எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமிழ் மக்களின் பிரச்சினையைப் பிரதிபலிக்கக்கூடிய இலங்கை தமிழரசுக் கட்சியைத் தோற்றுவித்தார். இதன் பின்பு நடந்த தேர்தல்களிலெல்லாம் சிங்களக் கட்சிகளுக்கிடையில் யார் அதிகமாக இனவெறிப்போக்கை கடைப்பிடிக்கின்றார்கள் என்பதே போட்டி.இந்தப்போக்கின் அடிப்படையில் அமைந்ததே இலங்கை ஒரு தனிச்சிங்கள பௌத்த நாடாக ஆக்கவேண்டுமென்பது. தமிழர்களை எல்லாம் இந்தியாவுக்கு அடித்து விரட்டுவோம். தமிழர்களின் தோலை உரிப்போம் தமிழ்மொழிக்கு இங்கு இடமில்லை. தமிழர்கள் நாட்டை அபகரித்து விட்டார்கள் என்று கூறுவதன்மூலம் தேர்தலில் வெற்றிபெற்றார்கள். இந்தக் கொள்கையின் கீழ் பதவிக்கு வந்தவர்கள் சிங்களத்தை நாட்டின் தேசியமொழியாகவும் அரசாளும் மொழியாகவும் ஆக்கினார்கள். தமிழர்களின் பாரம்பரிய பூமியாகிய வடக்கு, கிழக்குப் பகுதிகளில் திட்டமிட்டுஏராளமான சிங்களவர்களைக்




குடியேற்றினார்கள். மலையகத்தில் தொழிலாளர்களை தோட்டங்களில் இருந்து வெளியேற்றினார்கள்.

இவ்வாறு வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களில் பலர் வவுனியா போன்ற தமிழ்ப் பிரதேசங்களில் பல இன்னல்களுக்கு மத்தியில் சென்று குடியேறினர். சிங்களவர் குடியேற்றங்களால் தமிழ்ப்பிரதேசங்கள் அபகரிக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தினால் தமிழர்கள் சென்று குடியேறுவதை அரசாங்கம் விரும்பவில்லை. கலவரத்தினால் சிங்களப்பகுதிகளில் இருந்து விரட்டப்பட்டவர்கள் பலர் எங்கு போவதென்று தெரியாத நிலையில் அகதிகள் முகாம்களில் இருந்தனர். அரசாங்கமோ அவர்களை பழைய இடத்திற்கே போகவேண்டுமென்று கட்டளையிட்டது. இந்நிலையில் தொண்டர்கள் எல்லோரையும் வடபகுதி சென்று குடியேறும்படி ஆலோசனை கூறினார்கள்.இப்படி வந்த குடும்பங்கள் லங்காராணியில் இருந்தன. ராணியின் குடும்பமும் அவற்றுள் ஒன்று.

ராணி மலையகத்தில் பிறந்தவள். தோட்ட மக்களின் இன்னல்களை உணர்ந்திருந்தாள். அகதிகள் முகாமில் பெண்கள் பகுதியில் தொண்டு செய்து வந்ததால் சரவணனுக்கு முன்பே அவளைத் தெரிந்திருந்தது.

**1977 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் போது கொழும்பில் இருந்து 1200 தமிழ் அகதிகளைச் சுமந்தவாறு காங்கேசன்துறை வந்து சேர்ந்தது "லங்காராணிக்" கப்பல். அந்தக் கப்பலில் வந்தவர்களை வைத்தும் அன்றைய அரசியல் நிலவரத்தைப் பின்னணியாக வைத்தும் "லங்கா ராணி" என்ற நூலை அருளர் எழுதியுள்ளார். "தினச்செய்தி" வாசகர்களுக்கு அருளரின் நூலை வாரா வாரம் தரத் திட்டமிட்டுள்ளோம்.**

சரவணன்கீழே இறங்கி ராணியின் இருப்பிடத்திற்கு சென்றான். அவளின் பக்கத்தில் அவளின் தாய் தகப்பனும் அமர்ந்திருந்தனர்.

"என்ன? அமைதியாக உட்கார்ந்திருக்கிறீங்க" என்றவாறே சரவணன் பேச்சைத் தொடங்கினான்.

"ஏன்? மேல ஏதும் வேலை இருக்கிறதா?" புன்னகையுடன் வினவினாள் ராணி.

"ஆமாம் மேல வாறிங்களா?" என்று தலையை ஒருவாறு அசைத்தான்.

"ஓ அதுக்கென்ன" என்று கூறியவாறே எழுந்து சரவணணைப் பின் தொடர்ந்தாள்.

படிகளில் ஏறும்போபோது சரவணன் "உங்களுக்கு பெரிய வேலையிருக்கு" என்றான்.

"அப்படி என்ன பெரியவேலை" என்று கேட்டவாறே படிகளில் பின் தொடர்ந்தாள்.

இருவரும் கப்பலைப் பற்றி கதைத்தவாறே கப்பலின் முன்பகுதியை அடைந்தனர். ராணியிடம் சரவணன் நேராகவே விடயத்திற்கு வந்தான். அவள் செய்ய வேண்டியதை விளக்கினான்.

தேவன்கீழ்தளத்தில் காலையுணவை விநியோகித்துக்கொணடிருந்தான் குமார் சமையலறை வேலைகளை மேற்பார்வை செய்துகொண்டிருந்தான். குமார் தீர்மா னித்தவாறு சமையல் அறையில் புதிய ஆட்கள் வேலையைப்பொறுப்பேற்றிருந்தனர்.

"தம்பி நான் அவங்களை சும்மா விட்டது தான் பிழை"

"ஏன் என்ன சொல்லுங்கோ முத்தையாண்ணை"

கரட்டைவெட்டிக்கொண்டே முத்தையா கதையைத் தொடர்ந்தார். சமையல் அறையில் தனது பரிவாரங்களுடன் புகுந்து சில நிமிடங்களாயிருந்தன. குமார் மதிய உணவிற்குச் சாம்பார் தயாரிக்கும் பொறுப்பை அவரிடமே விட்டிருந்தான். சமையலறைக்கு ஆட்கள் தேவைப்படுகின்றார்கள் தனது வெள்ளவத்தை சாப்பாட்டுக்கடை எடுபிடியாட்களுடன் "தம்பி என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கோநான் செய்து தாறேன்" என்றவாறே சமையல் அறைக்குள் நுழைந்துவிட்டார்.

கத்தி இல்லையென்று தெரிந்தவுடன் தம்முடன் கொண்டு வந்திருந்த நான்கு பெரிய கத்திகளையும் கொண்டு வந்தனர். அங்கிருந்த பெரிய பாத்திரத்தில் தண்ணீர் பிடித்து அடுப்பில் வைத்து மரக்கறிகளை ஒவ்வொன்றாக வெட்டிக்கொண்டே கதைத்தார்.

"இவங்க நாலுபேர் வந்தாங்க ஒருத்தன் நீளக்காற்சட்டை மற்றவங்க கட்டைக் காற்சட்டை. அதைக் கொண்டுவா, இதைக் கொண்டுவா, என்றாங்க. பொடியனும் எடுத்துக்கொடுத்தான். அவயின்ர சிரிப்பும் விளையாட்டும் பிடிக்கவே இல்லை. நான் பின்னுக்குப் போய் சமையலறையில் இருந்தவங்களை மெல்ல வரச்சொல்லிப் போட்டு தெரியாத ஆள் மாதிரி வெளியில் வந்து நிண்டு கொண்டான். கணக்கு முப்பத்தாறு ரூபா அறுபது சதம்வந்தது. பொடியன் பில்லைக் கொடுத்தான். அதைக் கிளிச்செறிஞ்சு போட்டினம். வந்து மேசையில் கணக்குப் பிள்ளை யிட்ட லாச்சியில் எவ்வளவு காசு வச்சிருக்கிறாய் எண்டினம். இது தான் சமயமென்று நான் பாய்ஞ்சு பிடிச்சன் நீளக்காச்சட்டைக்காரனை. மற்றவர்களும் ஒரே பாச்சலா பாஞ்சு எல்லோரையும் பிடிச்சுப் போட்டம். இழுத்து மூடடா கதவை எண்டன். மூடினாங்க, நல்ல அடி. மேசையில் எல்லோரையும் வளத்தி, உள்ள சாம்பாறெல்லாம் ஊத்தி அபிஷேகம் பண்ணிப் போட்டு ஓடு நாய்களே" என்று துரத்தி விட்டன்.

முத்தையா வெட்டிய கரட்டைப் பாத்திரத்தில் அள்ளிப்போட்டுக்கொண்டு தொடர்ந்தார். "ஆறுமணி போல வாறாங்க தம்பி, ஒரு இருநூறுபேர் இருக்கும். எனக்குத் தெரிஞ்சு போட்டுது என்னட்டத்தான் வாராங்க எண்டு நான் பின் கதவால வெள்ளவத்தைக்கு வந்து சேர்ந்திட்டன். முன்னுக்கிருந்த கிருஷ்ண கபேக்கு அடிச்சிருக்கிறாங்க பெற்றோல் பொம்ப். கசியர் பொடியன் அதிலேயே எரிஞ்சு துடிதுடிச்சி செத்தானாம். இன்னொரு பொடியன் வெளியில் தப்பியோடியிருக்கிறான். பார்த்துக் கொண்டு நின்ற பொலிஸ்காரர் அவனை சுட்டுக்கொண்டுபோட்டாங்கள் எண்டால் அவன் தான் பொம்ப் அடிச்ச தெண்டு நினைச்சாங்களாம். எப்படியிருக்குது காலம்".

முத்தையா வீராவேசத்துடன் கத்தியை உயர்த் திக்காட்டிய வண்ணமே பேசினார். கதவைப் பிடித்துக்கொண்டு நின்ற இளைஞன் முத்தையாவுடன் கதையைத் தொடரும் நோக்குடன் "இதுக்கெல்லாம் என்ன செய்யலாம் சொல்லுங்கோ?" என்றான்.

"தம்பி ஒரே வழி தனி நாடுதான்".

"அதுசரி எப்ப திரும்பி போறது" ஏளனத்துடன் கேட்டான்.

"இப்படித்தான் ஐம்பத்தெட்டிலையும் சொல் லிப்போட்டு அடுத்தமாதம் எல்லோரும் திரும் பியிட்டினம்".

"அது அம்பத்தெட்டு. இது எழுபத்தேழு தம்பி. நாங்கள் இப்ப தனிநாடு கேட்டு போராடிக்கொண்டிருக்கிறம்".

ஒரு பக்கத்தில் இன்னும் பாண் வெட்டப் பட்டுக் கொண்டிருந்தது. தேவனும் வேறு சிலரும் மற்ற தளங்களில் எல்லோருக்கும் கொடுத்துக் கொண்டிருந்தனர். குழந்தைக்குப் பாலும் கரைத்துக் கொடுத்தார்கள். எல்லோருக்கும் தேனீரும் வழங்கப்பட்டது.

கதவைத் திறந்துகொண்டு தேவன் உள்ளே நுழைந்தான். கோபத்துடன் உள்ளே நுழைந்தது எல்லோரையும் சற்று ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. எல்லோரும் தேவனின் முகத்தைப் பார்க்கவே, "இதுகளுக்கு ஏன் சாப்பாடு; கிடந்து சாகட்டும்" என்று தன் கையிலிருந்த பொலித்தீன் உறையைக் கீழே விட்டு வீசினான் தேவன்.

"ஏன் தம்பி? என்ன நடந்தது?" முத்தையா கேட்டார்.

# மனவிருத்தி குறைந்த பிள்ளைகளுக்கு அடைக்கலமளிக்கும் சிவபூமி



சிவபூமி மனவிருத்திப் பாடசாலை கோண்டாவிலில் அமைந்துள்ளது. மனவிருத்தி குறைந்த 230 பிள்ளைகள் சகல வசதிகளும் கொண்டவர்களாக இங்கு கல்வி பயின்று வருகிறார்கள். ஆசிரியைகள் 16 பேர் உள்ளார்கள்.

மனவிருத்தி குறைந்த பிள்ளைகளாதலால் ஒரு தாயின் பரிவுடன் கூடிய உணர்வோடு இம் மாணவர்களுக்கு வேண்டிய சகல தேவைகளையும் அவ்வாசிரியைகள் நிறைவேற்றி வருகின்றனர்.

சிவபூமி அறக்கட்டளை நிதியத்தின் கீழ் இப்பாடசாலை இயங்கி வருகிறது. மனவிருத்தி குறைந்த பிள்ளைகளுக்கு ஒரு மனவிருத்திப் பாடசாலை ஆரம்பிக்க வேண்டும் என்ற நல்நோக்குடன் கலாநிதி ஆறு.திருமுருகன் இவ் வேலைத்திட்டத்தை ஆரம்பித்த போது இது ஒரு விஷப்பரீட்சை எனத் தெரிவித்து பின்வாங்கிய வர்கள் பலர். இப்படி ஒரு பாடசாலை ஆரம்பிப்பதிலும் பார்க்க வேறு ஏதாவது பயனுள்ள வேலைகளைத் தொடங்கலாமென அவர்கள் கூறினார்கள். இருந்தும் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் துணிந்து இப்பாடசாலையை இறைவன் திருவருளோடு தொடங்கினார். இன்று இப்பாடசாலையின் வளர்ச்சிகண்டு பலர் மூக்கின் மேல் விரலை வைக்கின்றார்கள். மாடிக்கட்டடங்கள், விளையாட் டரங்கம், அலுவலகம், சமையலறை, கேட்போர்கூடம், பாடாசாலை, தொழிற்பயிற்சிமையம் என விரிவாக்கம் பெற்று மிகச் சிறப்போடு இப் பாடசாலை இயங்கி வருவதையிட்டுப் பலர் மிகவும் மகிழ்ச்சியடைவதோடு பாராட்டும் தெரிவித்துள்ளார்கள்.

கல்வியில் சிறந்து விளங்கு வதோடு நில்லாமல் விளையாட்டுத் துறையிலும் இம் மாணவர்கள் உயர்ந்து விளங்குகின்றார்கள். அண்மையில் விசேட தேவை யுடையோருக்கான தடகளப் போட்டியில் 2015ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இப் பாடசாலையைச் சேர்ந்த அரசகுல சூரியர் மயூரன், ஜெயச்சந்திரன் மனோஜன் ஆகியோர் வெண்கலம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களை வென்று வந்தனர். 2013இல் அவுஸ்ரேலிய நாட்டின் சிட்னி நகருக்குச் சென்ற சி.தனுஷன் என்னும் மாணவன் வெண்கலப் பதக்கத்தை வென்றார். 2011ஆம் ஆண்டில் கிரீஸ் நாட்டின் எதென்ஸ் நகரில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியில் சிவராஜா துஷ்யந்தன் வெள்ளிப்பதக்கம் பெற்று சாதனை படைத்தார்.

மனவிருத்தி குறைந்தவர்கள் எனக் கருதப்பட்ட இம் மாணவர்கள் உலகின் பிரசித்தி பெற்ற நாடுகளுக்குச் சென்று விசேட ஒலிம்பிக் போட்டியில் பங்குகொண்டு சாதனை படைத் தது மட்டுமல்ல, இலங்கைக்கும் குறிப்பாக வடபுலத்துத் தமிழர் களுக்குப் பெருமைசேர்த்து புகழ் பரப்பி உள்ளார்கள்.

கோண்டாவில் மனவிருத்திப் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றுபவர் திருமதி. கலைவாணி குகதாசன். இவர் கண் வைத்திய நிபுணர் டாக்டர் குகதாசனின் துணைவியார். எந்த விதக் கொடுப்பன வுகளையும் எதிர்பார்க் காது அர்ப் பணிப்போடு இப் பாடசா லையின் வளர்ச்சிக்காக செயற்பட்டு வருபவர். முதன் முதலில் இவர்களின் குடும்பத்து உறவினர்களே கோண்டாவில் மனவிருத்திப் பாடசாலைக்கான காணியை அன்பளிப்பு செய்தவர்கள்.

இந்தியத் துணைத்தூது வர்கள் உட்படப் பல பிரமுகர்கள் இப் பாடசாலையில் நடைபெறும் விழாக்களுக்கு அடிக்கடி சமூகம் கொடுப்பார் கள். தற்போதைய யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆறுமுகம் நடராஜன் அண்மை யில் இங்கு விஜயம் செய்த போது, தேவகாந்தன் தனலட்சுமி மண்டபத்தில் மாட்டப்பட்டிருந்த தமிழர்களின் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் இசைக்கருவி களைக் கற்று, அத்தனை இசைக்கருவிகளையும் புதிதாகக் கொள்வனவு செய்து அவற்றை இப்பாடசாலை மாணவர்களுக்கு அன்பளிப்புச் செய்தார். தவில், நாதஸ்வரம், ஆர்மோனியம், தபேலா, மிருதங்கம், வீணை உட்படப் பல இசைக்கருவிகள் மாணவர்களுக்குக் கிடைத்தன.



கொழும்பு மனிதநேய அமைப்பு புதிய பேருந்து ஒன்றைக் கொள்வனவு செய்து கோண்டாவில் மனவிருத்திப் பாடசாலைக்கு வழங்கியது. விளையாட்டரங்கை இரு இளைஞர்கள் இணைந்து அமைத்துக் கொடுத்தனர். அமெரிக்க நாட்டைச் சேர்ந்த வைத்தியர் தேவகாந்தன் தனலட்சுமி தம்பதிகள் அழகிய நீண்ட பெரிய மண்டபத்தைக் கட்டுவித்து வழங்கினர். தொழிற் பயிற்சி மையம் நவீன இயந்திரங் களுடன் தொழிற்படுகிறது. விக்கினம் தீர்க்கும் விநாயகர் நடுவில் வீற்றிருக்கின்றார். எந்தவொரு நிகழ்வும் இங்கு நடைபெற்றாலும் விநாயகரை வழிபட்டே அவை ஆரம்பிக் கப்படுவது வழமை.

சிவபூமி மனவிருத்திப் பாடசாலைக் கட்டடம் 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டபோது 11 பிள்ளைகள் மட்டுமே இங்கு கல்வி பயில வந்தார்கள். இவ்வளவு காலம் இப்பாடசாலை முன்னேற்றம் கண்டதற்கு இதன் நிறுவுநர், அதிபர், ஆசிரியைகள் மற்றும் உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், நலன்விரும்பிகளே காரணகர்த் தாக்களாவர்.

இப்பாடசாலைக்கு அருகில் உள்ள நான்கு பரப்புக் காணியும் பாடசாலையின் தேவைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 14 வருடங்களுக்கு முன்னர் சிங்கப்பூர் செண்பக விநாயகர் ஆலயத்துக்கு சொற்பொழிவு ஒன்றுக்காகக் கலாநிதி ஆறுதிருமுருகன் சென்றபோது சீனப் பெண்மணி ஒருவர் மனவிருத்தி குறைந்த பிள்ளைகளுக்காக மனவிருத்திப் பாடசாலை ஒன்றை நடாத்து வதைக் கண்ணுற்றார். 600 பிள்ளைகள் 5பஸ் வண்டிகள், வைத்தியர் உட்பட மிகப்பெரிய ளவில் இப் பாடசாலையை அவர் நடாத்தினார்.

இப் பாடசாலையைப் போலவே ஒன்றை யாழ்ப்பாண மண்ணிலும் ஆரம்பிக்க வேண்டுமென அவர் எடுத்த முடிவு இன்று நிறைவான பலனைக் கொடுத்திருக்கின்றது. கிட்டத்தட்ட சீனப் பெண்மணி யின் மனவிருத்திப் பாடசாலை யைப் போலவே கோண்டாவில் பாடசாலையும் நெருங்கி வந்துள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் மனவிருத்தி குறைந்த ஒரு பெண்பிள்ளையை சிலர் கிண்டல் பண்ணிச் சிரித்ததைக் கண்ட கலாநிதி ஆறுதிருமுருகன் மிகவும் மனம் நொந்து போனார். இவரைப் போன்றவர்களுக்காக ஏதாவது செய்து அவர்களை வழிநடாத்தி வழிப்படுத்தல் வேண்டுமென அவர் விரும்பி யதன் பேரில் மனவிருத்திப் பாடசாலையொன்று நமது மண்ணில் உதயமானது.

நடந்து முடிந்த போர் மற்றும் பல அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பலர் இன்று வன்னிப்பகுதியில் அதிகம் காணப்படுவதனால் அவர்களுக் காகக் கிளிநொச்சிப் பகுதியில் ஒரு மனவிருத்திப் பாடசாலையை சிவபூமி அறக்கட்டளை நிதியம் ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான கட்டடப்பணி தற்போது தொடங்கப்பட்டுவிட்டது. இக் கட்டடத்துக்கான பெருந்தொகைப் பணத்தை அன்பர் ஒருவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

மேலை நாட்டில் மலையாளம் குன்றிய பிள்ளைகள் மிகவும் கருணையுடன் கவனிக்கப்படு கின்றார்கள். அவர்கள் அங்கே கேலிக்கு உள்ளாக்கப்படுவ தில்லை. அவர்களுக்குரிய கௌரவம் அங்கு தரப்படுகின்றது.

மனவளர்ச்சி குறைந்த ஒரு பெண்பிள்ளையின் தாயார், எவரும் தனது பிள்ளையைக் கவனிப்பதில்லை என மனக் கவலையுடன் தெரிவித்தார். தனது தந்தையை இழந்த இளைஞன் ஒருவன், தனது மனவளம் குறைந்த தங்கையைப் பற்றி மிகவும் மனம்நொந்து விபரித்தான்.

மனவிருத்திப் பாடசாலை ஆரம்பித்த பின்னர் இப்படிப் பட்டவர்களின் கவலை கரைந் தோடியுள்ளது. இப் பாடசாலை யில் கல்விபயிலும் ஆண், பெண் மாணவர்கள் மிகவும் நல்ல புரிந்துணர்வு கொண்டவர்களாகக் காணப்படு கின்றார்கள்.

மனவிருத்தி குறைந்தவர் களும் சமூகத்தில் சமத்துவத் துடன் வாழ வேண்டியவர் களே என்பதை நிரூபிக்கும் வண்ணம் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதே கோண்டாவில் மனவிருத்திப் பாடசாலை. இப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் சீருடை, போக்குவரத்து, உணவு, தேநீர் உட்படப் பலதும் மிகச் சீராகவும் சிறப்பாகவும் வழங்கப்படுகிறது.

உலகின் பல பாகங்களிலும் வதியும் மக்கள் இப் பாடசாலைக்குப் போதிய உதவி களையும், ஒத்தாசைகளையும் வழங்குகின்றார்கள். இவர்களது ஒத்துழைப்போடு இம் மனவிருத்திப் பாடசாலை தொடர்ந்தும் சீரும், சிறப்பும் பெற்று செழிப்போடு வளரும் என்பது திண்ணம்.

என்.கே.குலசிங்கம்



# சேர்.பொன்.இராமநாதன் அமெரிக்கா பயணம்

சேர்.பொன்னம்பலம் இராமநாதன் 1892 தொடக்கம் 1906 ஆம் ஆண்டு வரைக்கும் சொலிஷிற்றர் ஜெனரலாக கடமையாற்றினார். அவ்வாறு கடமையாற்றும் காலங்களில் மூன்று முறை சட்டமா அதிபராகவும் கடமையாற்றினார்.

அவர் சொலிஷிற்றர் ஜெனரலாக இருந்த காலத்தில்தான் மையூரொன் எச் பெல்ப்ஸ் இலங்கைக்கு வந்தார். பெல்ப்ஸ் பெரிய பிரசித்திபெற்ற ஒரு அமெரிக்கன். நியூ யோர்க்கில் பிரபல்யமான ஒரு சிறந்த சட்டத்தரணி. மொன்சல்வாட் பள்ளிக்கூடத்தின் இயக்குனர். இந்தப் பள்ளிக்கூடம் அக்காலத்தில மதங்கள் சம்பந்தமான ஆராய்ச்சி செய்யும் ஒரு நிறுவனமாகவும் இருந்தது.

மையூரொன் எச் பெல்ப்ஸ் 23 வருடங்களாக கீழைத்தேய மதங்களை ஆராயும் செயலில் மும்முரமாக ஈடுபட்டவர். அவர் ஒரு இந்து வேதாந்தியர் ஆகும். மரக்கறிப் பட்சினி. அவர் இந்தியர்களுடைய வாழ்க்கை முறையைப் பின்பற்றினார். இந்தியர்களைப் போலவே உடையணிந்தார். சுவாமி விவேகானந்தர் 1893 ஆம் ஆண்டு அமெரிக்காவிற்கு சமய நாடாளுமன்றத்தில் பங்கேற்க சென்றபோது, அவரை உபசரித்து சகல வசதிகளையும் செய்து கொடுத்தவர் பெல்ப்ஸ்ஸே ஆகும்.

இந்த பெல்ப்ஸ் 1901ஆம் ஆண்டு கொழும்பு வந்தபோது சேர்.பொன்னம்பலம் இராமநாதனைச் சந்தித்தார். அப்பொழுது இராமநாதனின் மதப் பிரச்சாரங்களைக் கேட்டு அதன்பால் கவரப்பட்டவர். அந்த சந்திப்பின் போது "அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான மக்கள் மதம் சம்பந்தமான பிரச்சாரங்களைக் கேட்க ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். எனவே நீங்கள் அங்குவந்து ஆன்மீகம் சம்பந்தமான பிரச்சாரங்களை செய்யவேண்டும்," என அன்புடன் வேண்டுகோள் விடுத்தார்.

அதையடுத்து அமெரிக்காவிலிருந்து இருநூறிற்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும் ஒப்பமிட்ட அழைப்பு ஒன்றை இராமநாதனுக்கு அனுப்பி வைத்தார்கள். அதில் இராமநாதனை அமெரிக்காவிற்கு வந்து "உண்மையை" உணர்த்தும் விதமாக பிரசங்கம் செய்ய வருமாறு அழைப்பு விடுத்தனர். அந்தக் காலத்தில் இராமநாதனின் சமயச் சொற்பொழிவுகளின் சிறப்புகள் பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் எல்லாம் பரவியிருந்தது.

மனிதனுக்கு மதம் சம்பந்தப்பட்ட அறிவை ஊட்டும் சேவை, உண்மையை நோக்கி தேடும் பயணம் ஆகிய முக்கியமான முடிவுக்கு வந்தார். மேற்குலகில் சுவாமி விவேகானந்தரின் சேவை எத்தனை மக்களுக்கு எவ்வளவு நன்மை பயத்தது என அறிந்து, அவ்வழியே தானும் பின்பற்ற விரும்பினார். மனிதர்களை வழிநடாத்தும் பெரிய ஒரு பொறுப்பு தன்னிடம் இருப்பதாக உணர்ந்தார். அந்த நோக்கத்தை நிறைவேற்ற முனைந்தார்.

"நீதிமன்றங்களில் வழக்குப் பேசுவது, சட்டசபையில். பணியாற்றுவது ஆகியவற்றிலும் பார்க்க மிகவும் பொறுப்புள்ள பெரிய கடமை எனக்கு இருப்பதை நான் இப்பொழுது புரிந்து கொண்டேன். அந்தப் பாரிய பொறுப்பை நான் உணர்ந்த பின் எனது காலம் அரசியலிலும், சட்டசபையிலும் வீணடிக்கப்பட்டதாக நான் இப்ப எண்ணுகின்றேன். நான் தொடர்ந்து வேலை, வேலை என்றே ஓடிக் கொண்டிருந்தேன். எனது நெருங்கிய நண்பர்களைக் கூட சென்று சந்திக்காமல் வேலையிலே மூழ்கியிருந்தேன்."

"இந்த வருட முற்பகுதியில் தேசாதிபதி சேர் ஹென்றி பிளேக்கை உத்தியோகபூர்வமாக சந்திக்கச் சென்றேன். அந்தநாள் தான் எனது வாழ்வின் திருப்பு முனையாக இருந்தது. தேசாதிபதிக்கு நான் சொலிஷிற்றர் ஜெனரலாகத்தான் தெரியுமென நினைத்திருந்தேன். அவர் என்னுடன் பேசும் போது என்னை வாழ்நாள் பூராகவும் நன்கு தெரிந்து வைத்திருப்பதைப்போல பேசினார். அவர் இரக்க சுபாவமுள்ளவர், பண்பாளர், நேர்மையானவர் என்றெல்லாம் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் அவருக்கு என் உள்ளத்தில் ஓடிக் கொண்டிருந்த விடயங்கள் எப்படித் தெரியவந்தது? நான் சொலிஷிற்றர் ஜெனரல் நாற்காலியில் 'மாட்டுவண்டியில் பூட்டப்பட்ட ஒரு ஓட்டப்பந்தயக் குதிரை' என அவர் கூறினார். நான் இன்னும் பெரிய பெரிய பொறுப்புக்களை வகிக்க வேண்டும். கடமைகளைச் செய்ய வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளதாகவும், அமெரிக்காவில் இருந்து எனக்கு அழைப்பு வந்திருப்பதாகவும், சமய தத்துவங்கள் சம்பந்தமான விடயங்களை நாடி நிற்பவர்களுக்கு அவர்களின் தாகத்தை நான் தீர்த்துவைக்க வேண்டுமெனவும் கூறினார்."

"எமது சம்பாசனையின் போது எனக்கு 12 மாத விடுமுறை தருவதாக தேசாதிபதி கூறினார். அவர் எனக்கு வழங்க முன்வந்த சலுகையை நான் நன்றியுடன் ஏற்றுக்கொண்டேன். மேலும், 12 மாதகாலம் முடிந்த பிற்பாடு நான் அரச சேவையிலிருந்து ஓய்வுபெறப்போவதையும், மீதிக்காலத்தில் எந்த விடயத்திலும் நாட்டம் செலுத்தாமல் எனது மக்களின் தேசிய நலன்களில் நாட்டம் செலுத்துவேன்," என்றும் கூறினேன்.

சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சமய சொற்பொழிவாற்ற அமெரிக்கா செல்கின்றார் என நாட்டில் தெரியவந்தபோது, இது எமது நாட்டிற்கு கிடைத்த பெரிய கௌரவம் என அனைவரும் நினைத்தார்கள். பல பாராட்டு கூட்டங்களும் நடைபெற்றன. இது சம்பந்தமாக 'ரைம்ஸ் ஓப் சிலோன்' என்ற பத்திரிகை அவரைப்பற்றி புகழாரம் சூடி கட்டுரை ஒன்றை வெளியிட்டது.

யூலை 5ஆம் திகதி 1905 ஆம் ஆண்டு Peninsular and onriental Steam Navigation Company இந்த கம்பனியின் கப்பல் ஒன்றிலேயே தனது அமெரிக்கா பயணத்தை ஆரம்பித்தார். அவர் லண்டனை அடைந்து அங்கிருந்து கம்பானியா (Campania) என்ற கப்பலில் நியூயோர்க் நகரத்திற்குப் பயணமானார். அப்பொழுது கப்பலில் அவரைச் சந்தித்த சிலர் அவரிடம் சில வினாக்களை எழுப்பினார்கள்.

அதில் ஒருவர் "ஐயா உங்களுடைய சமயம் என்ன? நாங்கள் அறிந்தோம் இந்திய மக்களுக்கு உண்மையான சமயம் இல்லை என்று. அது உண்மை தானா?" எனக் கேட்டார்.

அதற்கு அவர் பதிலளிக்கையில் "என்னுடைய சமயத்தை மேலைத்தேயத்தில் இந்து சமயம் என்று அழைப்பார்கள். எங்களுக்கு அப்படி பெயர்கள் தெரியாது ஆனால் நாங்கள் எங்களுடைய சமயத்தை சிவனை அடையும் பாதை என்றும், சைவ மார்க்கம் என்றும சொல்லுவோம்.

"சிவ" என்றால் எல்லா தேசியங்களின் ஆண்டவனையும் ஒன்றிணைத்து வழிபடுதல். மேலும் அமைதியும் அதிகாரமும் என்பதை குறிப்பதுதான் "சிவ" ஆகும். மற்றொருவர் கேட்டார் "உங்கள் மக்கள் கடவுள் வழிபாட்டில் மூழ்கும் நம்பிக்கை உள்ளவர்களா?" என்று.



அதற்கு இராமநாதன் பதிலளிக்கையில் "ஆம். அவர்கள் கடவுள் பக்தியில் மூழ்குவார்கள். ஆனால் மேற்கத்தியம் நம்புவது போல சடங்குகளிலல்ல"

பிறிதொருவர் உங்கள் மக்கள் ஏதாவது குறிப்பிட்ட தினத்தில் தான் கடவுளை வணங்குகின்றார்களா? என்று கேட்டபோது "அவர்கள் ஒவ்வொருநாளும் கடவுளை வணங்குபவர்கள். தினசரி அவர்கள் தங்கள் நாளை கடவுள் வழிபாட்டுடன்தான் ஆரம்பித்து, கடவுள் வழிபாட்டுடனேயே அந்த தான் நாளை முடிக்கின்றார்கள்" "எமது கோச்சியை ஓட்டும் சாரதிகூட கடவுளை வணங்கி விட்டுத்தான் வண்டியை செலுத்த ஆரம்பிக்கின்றான். ஒரு சாதாரண கூலிக்காரன்கூட கடவுள் வழிபாட்டை கைவிடுவதில்லை." என்று இராமநாதன் கூறினார்.

"மேலைத்தேசவத்தவரின் முன்னேற்றம் எப்படி?" என பிறிதொருவர் கேட்டார்.

"மேலைத்தேசத்தவர்களின் மூளை எப்பொழுதுமே ஓயாது. அவர்கள் ஓய்வில் நம்பிக்கை அற்றவர்கள். எனவேதான் அவர்கள் புதுப்புது விடயங்களில அக்கறைகாட்டி வருகின்றார்கள்" என்றார்.

அவர் இறுதியில் நியூயோர்க் நகரத்தை வந்தடைந்தார்.

The Newyork evening post என்ற பத்திரிகை இராமநாதனைப் பற்றிய ஒரு நீண்ட கட்டுரையை பிரசுரித்தது.

"இன்று வந்த கம்பானியா கப்பலில் இலங்கையில் சொலிஷிற்றர் ஜெனரலும், நீண்ட பழமை வாய்ந்த இந்துமதத்தை பின்பற்றும் குடும்பத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் இராமநாதன் இந்த நாட்டிற்கு வந்துள்ளார். அவர் இந்த நாட்டில் ஏழு எட்டு மாதங்கள் தங்கியிருந்து கடமைகளை ஆற்றுவார்.

அவருடைய தோற்றமே அவர் ஒரு இந்து என்று பறைசாற்றுகிறது. அவரது உடை மேலைத்தேயத்தையும் கீழைத்தேயத்தையும் சமரசப்படுத்தும் உடையாக காணப்படுகிறது. அமெரிக்கா வந்த இராமநாதன் கிறீன் ஏக்கர் பல்கலைக்கழகத்தில் முதன் முதலில் பிரசங்கம் செய்தார். அவர் அங்கு "நம்பிக்கைகளின் ஐக்கியம்" என்ற தலைப்பிலே பேசினார்.

இராமநாதனை அக்கூட்டத்தில் அறிமுகம் செய்து மையூரொன் எச் பெல்ப்ஸ் வருமாறு கூறினார். "நண்பர்களே இன்று எமது நீண்டநாள் அபிலாசை ஒன்று நிறைவேறியது. நாம் எவ்வாறு அமைதியை அடைவதெனக் கூற எங்கள் மத்தியில் வந்துள்ளார் இராமநாதன் அவர்கள்.

ஒளியைத்தேடி, உண்மையைத்தேடி நான் கீழைத்தேயம் சென்றிருந்தேன். அப்போதுதான் நான் திரு.இராமநாதனைச் சந்தித்தேன். அங்கு அவர் போதிப்பதைப் பார்த்தேன், கேட்டேன். அப்பொழுதுதான் நான் தேடுதலின் முடிவுக்கு வந்துவிட்டேன் என என்னால் உணரக்கூடியதாக இருந்தது.

மற்றவர்களால் வழங்க முடியாத அறிவுரைகளையும் விளக்கங்களையும் அவரால் தான் தரமுடியுமென நான் நம்புகின்றேன். அவருடன் ஒரு வருடகாலம் இலங்கையில் தங்கியிருந்தேன். அப்பொழுது நீங்கள் அமெரிக்கா வந்து எனக்கு கற்பித்த விடயங்களைப் பற்றியும் "உண்மையை" எவ்வாறு தேடுவது பற்றியும் எமது நாட்டுக்கு வந்து எம் நாட்டவர்களுக்கும் கற்பிப்பீர்களா எனக் கேட்டேன். அப்பொழுது அவர் பதிலளிக்கையில் நீங்களும் அவர்களும் தீவிரமாக என் வரவை விரும்பினால், தான் அங்கே நிற்பேன் எனக் கூறினார். எங்களது பற்றும் அன்பும் தீவிரமானது என நிரூபணமாகிவிட்டது.

நான் அமெரிக்கா திரும்பிய பின் அவரை அமெரிக்காவுக்கு அழைக்குமாறு நீங்கள் பலமுறை கெஞ்சினீர்கள். இறுதியில் அவரும் வந்துவிட்டார். இனி அவருடைய அன்பான இனிய குரல் உங்களுடன் பேசட்டும்", என பெல்ப்ஸ் கூறி தனது உரையை முடித்தார்.

(தொடரும்)



# மீண்டும் விஜயகாந்த்

விஜயகாந்த் மற்றும் அவரது மகன் சண்முக பாண்டியன் இணைந்து நடிக்கும் படத்துக்கு 'தமிழன் என்று சொல்' என்று பெயரிடப்பட்டுள்ளது. தேமுதிக கட்சியைத் தொடங்கிய பிறகு சினிமாவில் நடிப்பதைக் குறைத்துக்கொண்டார் விஜயகாந்த். கடைசியாக 2010-ம் ஆண்டு 'விருதகிரி' என்ற படத்தில் நடித்தார். பின்னர், ஐந்து வருடங்கள் அரசியலில் பிசியாக இருந்த விஜயகாந்த், தன் மகன் சண்முகபாண்டியன் ஹீரோவாக அறிமுகமான, 'சகாப்தம்' படத்தில் கெஸ்ட் ரோலில் நடித்திருந்தார். இப்போது மீண்டும் 'தமிழன் என்று சொல்' என்ற படம் மூலம் சினிமாவுக்கு வந்திருக்கிறார் விஜயகாந்த். இதில் அவர் மகன் சண்முகபாண்டியனும் நடிக்கிறார்

# விக்ரமுடன்



# மின்சாரம்





# இது நம்ம ஆளு

# என்னை அறிந்தால் 2

கௌதம் மேனன் இயக்கத்தில் அஜித் நடித்து இந்த வருடம் வெளிவந்த படம் 'என்னை அறிந்தால்'. இப்படத்தில் அஜித்துடன் திரிஷா, அனுஷ்கா, அருண் விஜய் ஆகியோரும் நடித்திருந்தனர். இப்படத்திற்கு நல்ல விமர்சனங்கள் எழுந்த நிலையில், ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. இந்நிலையில், இப்படத்தின் இரண்டாம் பாகம் எடுக்கப்படுமா? என்று பல்வேறு தரப்பிலிருந்தும் பெரிய எதிர்பார்ப்பு நிலவி வந்தது. அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் தற்போது கௌதம் மேனன், என்னை அறிந்தால் படத்தின் 2-ஆம் பாகத்தை எடுக்க முடிவு செய்துள்ளாராம்.

இந்த படத்திற்காக கதை எழுதும் பணி பாதியளவு முடிந்துள்ளதாம். கதையை தயார் செய்துவிட்டு, அஜித்தை சந்தித்து இதில் நடிக்க ஒப்புதல் வாங்கவிருக்கிறாராம்.

கௌதம் மேனன் இயக்கத்தில் தற்போது 'அச்சம் என்பது மடமையடா' படம் இறுதிக்கட்டத்தை நெருங்கி வருகிறது. இதைத் தொடர்ந்து ஜெயம் ரவியை வைத்து 'துருவ நட்சத்திரம்' படத்தை இயக்கவிருக்கிறார். இவ்விரு படங்களுக்கு பிறகு, என்னை அறிந்தால் 2ஆம் பாகத்தை தொடங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



# இணையும் நயன்

...ப் நடித்த "புலி" படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவரான ஷிபு தமீன், விக்ரம் நடிக்கவுள்ள அடுத்த படத்தை தயாரிக்கவுள்ளார். "அரிமா நம்பி" இயக்குனர் ஆனந்த் சங்கர் இயக்கவுள்ள இந்தப் படத்திற்கு "மர்ம மனிதன்" என்ற தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில் இந்த படத்தில் விக்ரமுக்கு ஜோடியாக நடிக்க காஜல் அகர்வால் உட்பட முன்னணி நடிகைகளிடம் பேச்சுவார்த்தை நடந்து வந்ததாக கூறப்பட்ட நிலையில் தற்போது லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா நடிக்கவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளிவந்துள்ளன. விரைவில் இதுகுறித்த அதிகாரபூர்வமான அறிவிப்பு வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தகவல் உறுதி செய்யப்பட்டால் விக்ரமுடன் முதன்முதலாக நயன்தாரா ஜோடி சேர்வார் என்பது குறிப்பிடத்தக்கது. நயன்தாரா ஏற்கனவே ஜீவாவுடன் திருநாள் மற்றும் கார்த்தியுடன் காஷ்மோரா ஆகிய படங்களில் நடித்து கொண்டிருக்கிறார். மேலும் விக்னேஷ் சிவன் இயக்கவுள்ள அடுத்த படத்திலும் நடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.



## சவுகார்பேட்டை



# எந்திரன் 2 சங்கர் மும்முரம்

ரஜினியின் நடிப்பில் கடந்த 2010-ஆம் ஆண்டு வெளிவந்த பிரம்மாண்ட படம் 'எந்திரன்'. இப்படத்தை ஷங்கர் இயக்கியிருந்தார். பிரம்மாண்டமாக வெளிவந்த இப்படம், வசூலிலும் பிரம்மாண்டம் ...டைத்தது. இதுவரை எந்த படங்களும் செய்யாத வசூல் சாதனை படைத்த, இப்படத்தின் இரண்டாம் பாகத்தை எடுக்க ஷங்கர் தீவிர ஆர்வம் காட்டினார். இரண்டாம் பாகத்தில் நடிக்க ரஜினியும் பச்சைக் கொடி காட்டினார். இதையடுத்து, எந்திரன் 2-ம் பாகத்தை எடுப்பதற்கான ஆரம்ப கட்ட பணிகளில் ஷங்கர் தீவிரமாக ஈடுபட தொடங்கியுள்ளார். இந்த படத்தில் ரஜினி, அர்னால்டு, எமி ஜாக்சன் ஆகியோர் ...டிக்கவிருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளது. இந்நிலையில், இப்படத்தில் ரஜினிக்கு மேக்கப் போடுவதற்கு ...ற்கெனவே ஷங்கரின் 'ஐ' படத்தில் பணியாற்றிய வேட்டா நிறுவனத்தின் ஷான் பூட், ஒப்பந்தமாகியுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளது. ஷான்பூட் சிவகார்த்திகேயன் நடிப்பில் தற்போது உருவாகி வரும் புதிய படத்திற்கும் மேக்கப் போட ஒப்பந்தமாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 'எந்திரன் -2' படத்திற்காக வருகிற டிசம்பர் மாதம் ரஜினிக்கு மேக்கப் டெஸ்ட் நடக்கவிருப்பதாகவும், அதேநேரத்தில் ரஜினியின் ...டுப்புக்கும் மேக்கப் டெஸ்ட் நடக்கவிருப்பதாகவும் கூறப்படுகிறது. ரஜினி தற்போது 'கபாலி' படத்தில் பிசியாக நடித்துக் கொண்டிருக்கிறார். இந்த படம் அனேகமாக டிசம்பரில் முடிவடைந்துவிடும் என தெரிகிறது. எனவே, டிசம்பர் மாத இறுதியில் 'எந்திரன்-2' படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# உடன்பட மறுக்கும் ஓவியா

சிவா, அசோக் செல்வன், ஓவியா ஆகியோர் நடிக்க ஜி.மணிகண்டன் டைரக்ஷனில் சி.வி.குமார், அபினேஷ் இளங்கோவன் ஆகிய இருவரும் தயாரிக்கும் படம் '144'. இந்த படத்தின் அறிமுக நிகழ்ச்சி சென்னை வடபழனியில் உள்ள ஆர்.கே.வி. ஸ்டுடியோவில் நடந்தது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நடிகை ஓவியா நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவருடைய வலது கை தோள்பட்டையில் பச்சை குத்தி இருப்பது பற்றி நிருபர்கள் கேட்டார்கள். அதற்கு பதிலளித்து ஓவியா கூறியதாவது:-

என் தோள்பட்டை அழகாக இருக்க வேண்டும் என்பதற்காக கடல்குதிரை ஓவியத்தை பச்சை குத்திக்கொண்டேன். இது எனக்கு அழகாக இருப்பதாக நிறைய பேர் பாராட்டுகிறார்கள். என் வலது கையின் தோள்பட்டையில் மட்டுமே நான் பச்சை குத்திக்கொண்டேன். வேறு எங்கும் பச்சை குத்திக்கொள்ளவில்லை. காதலுக்காக பச்சை குத்திக்கொள்வதில் எனக்கு உடன்பாடில்லை. மற்றவர்களுக்காக உடம்பை புண்ணாக்கி கொள்ளத்தேவையில்லை என்று கருதுகிறேன்.

13 ஆம் பக்கம் பார்க்க

# குடாநாட்டில் ஜே.வி.பி எழுச்சி பெறும்

யாழ். குடாநாட்டில் மக்களுக்காக சேவையாற்றுபவர்கள் என எவரும் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூட தமது நலன் சார்ந்தே பணிபுரிகின்றது. எனவே எதிர்காலத்தில் ஜே.வி.பி ஆகிய நாங்கள் யாழ்ப்பாணத்தில் எழுச்சி பெறுவோம் என ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் முன்னாள் பிரதித் தலைவருமான இ.சந்திரசேகரன் தெரிவித்தார். அவர் தினச்செய்திக்கு அளித்த பிரத்தியேக பேட்டி வருமாறு –

***கேள்வி:பொதுத்தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவதற்கு காரணம் என்ன?***

கடந்த பொதுத் தேர்தலின் போது மக்கள் விடுதலை முன்னணி என்னை யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவதற்கு தெரிவு செய்ததற்கான காரணம் இங்குள்ள அனைவருக்கும் தெரியும். கொழும்பில் செயற்பட்ட நாம், 33 வருடங்களின் பின் யாழ்ப்பாணத்திற்கு வரக் கூடிய சூழல் ஏற்பட்டது. யுத்த காலத்திலும் அதன் பின்னரான கடந்த ஜனவரி 8ஆம் திகதி வரை ராஜபக்ச அராஜகம் தலைவிரித்தாடியது. அதன் காரணமாக பிரதேசத்திலிருக்கின்ற அரசியல் வாதிகளுக்கோ ஏனைய மற்ற செயற்பாட்டாளர்களுக்கோ சுதந்திரமாக தங்களது கருத்துக்களை சொல்வதற்கோ செயற்படுவதற்கோ சூழ்நிலை ஏற்படவில்லை. கடந்த ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலின் பின்பு எமது நாட்டில் ராஜபக்சவின் அராஜகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இந்த நிலையில் வடபகுதியில் வாழ்கின்ற மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடன் சேர்ந்து இணைந்து அவர்களுக்காக குரல்கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஜே.வி.பி. ஒரு தேசிய ரீதியிலான கட்சி. தேசிய ரீதியாகவே மக்களுக்கு சேவையாற்றுகின்றது. அதனடிப்படையில் யாழின் குரலாக மக்கள் விடுதலை முன்னணி ஒலிக்கவேண்டும். இதனை நோக்கமாக கொண்டு என்னை இந்தப் பிரதேசத்திற்கு வேட்பாளராக எமது கட்சி தெரிவு செய்தது.

***கேள்வி: வடக்கு மக்களின் அபிலாசைகளைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்ற வகையில் பணியாற்ற நீங்கள் முன்வந்துள்ளீர்களா?***

***பதில்:*** நிச்சயமாக வடக்கு மாத்திரமல்ல நாங்கள் ஒவ்வொருமுறையும் ஒவ்வொரு மக்களையும் சந்திக்கின்றபோது குறிப்பிடுவது கடந்த 67 வருடங்களை ஆராய்ந்து பார்க்கின்றபோது இந்த நாட்டை ஆளுகின்ற வர்க்கங்கள் முதலாளி வர்க்கமே ஆகும். அதனால் இந்த முதலாளி வர்க்கத்தால் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது என்பதை 67 வருடங்களில் இவர்கள் நிரூபித்துவிட்டார்கள்.

அந்த 67 வருடங்களாக எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாத முதலாளித்துவ வர்க்கத்தின் கீழ் நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற மூவின மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதன் போது விசேடமாக தமிழர்கள் என்ற காரணத்தால் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக பல்வேறு இன்னல்களையும் தமிழ் மக்கள் சந்தித்திருக்கிறார்கள்.



அதனால் இருக்கின்ற பிரச்சினைகளால் ஜே.வி.பி நாட்டில் பொதுவாக பல்வேறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. உதாரணமாக எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு வருடமும் 3 இலட்சத்துக்கும் அதிகமாக வேலை வாய்ப்பு பெறுவதற்காக இளைஞர்கள், யுவதிகள் காத்து நிற்கின்றார்கள். அவர்களில் தொழில் கிடைப்பதோ 65,000 பேருக்கு மட்டுமே. மிகுதி இருக்கின்ற 235000 பேருக்கு தொழில் வாய்ப்பு இல்லை. இதனால் பாதிக்கப்படுவது மூவின மக்களுமே. அதனால் இந்த மக்களது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத வர்க்கத்தினரால் நாட்டில் இன அடிப்படையில் மக்களின் மனங்களை சிதைத்து வருகின்றார்கள். தமிழ் மக்களின் மனங்கள் வேதனையில் ஆழ்ந்துள்ளன. இந்த மக்களை புரிந்து கொண்டுதான் இந்த மண்ணில் எங்களது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

***கேள்வி: நீங்கள் தமிழ் மக்களுக்கு பணியாற்றுகின்றோம் என்கின்றீர்கள். ஆனால் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தே வடக்கு, கிழக்கை பிரித்தீர்கள் இது தொடர்பில் உங்களின் கருத்து என்ன?***

***பதில்:*** இலங்கை நாடானது தமிழருக்கோ, முஸ்லிம்களுக்கோ, சிங்களவருக்கோ சொந்தமான நாடு அல்ல. மூவின மக்களுக்கும் சொந்தமான நாடு. எனவே இந்த நாட்டை தமிழருக்கு, சிங்களவருக்கு, முஸ்லிம்களுக்கு என்று பிரிப்பதை, பாகுபடுத்துவதை ஜே.வி.பி எதிர்க்கின்றது. ஏன்நாம் இவ்வாறு கூறுகின்றோம் என்றால் கடந்த காலத்தை எடுத்துக்கொண்டாலும் சரி தற்போதும் சரி தமிழ் மக்களில் 53 சத வீதமானவர்கள் தென்னிலங்கை யில் தான் வாழுகின்றார்கள். அப்படியானால் வடக்கு, கிழக்கு மக்கள் என பிரிக்கப்படுகின்ற போது தென்னிலங்கையில் வாழுகின்ற மக்களுக்கு தாய்நாடு என்ற பிரச்சினை எழுகின்றது.

இந்தப் பிரச்சினை என்பது முழு நாடும் மக்களுக்கு சொந்தம் என்கின்ற அடிப்படையிலும் அதுமட்டுமன்றி வடகிழக்கை இணைத்தது நாட்டின் தமிழர்களோ அல்லது இங்கிருக்கின்ற அரசியல் வாதிகளோ அல்ல. வடகிழக்கை இணைத்தது 1987 ஆம் ஆண்டு இந்திய இலங்கை உடன்படிக்கையின் ஊடாக. இந்த உடன்படிக்கையானது தமிழருக்காகவோ, சிங்களவருக்காகவோ செய்த ஒன்று அல்ல. இந்தியா இலங்கை மீதான ஆக்கிரமிப்பைத் தொடுப்பதற்கு ஓர் துரும்பாகவே அமைந்தது. அதனடிப்படையில் ஜே.வி.பி அந்த ஆக்கிரமிப்புக்கும் ஆதிக்கத்துக்கும் போராடியபோது அவர்களால் திணிக்கப்பட்டிருக்கின்றது, இணைக்கப்பட்டிருக்கின்றது. இது மக்களின் விருப்பத்துக்கு மாறாகவே இணைக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல இது இணைக்கப்பட்டதற்கு பின்பு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு இதன்பின்பு அது இணைவதா பிரிவதா என்று முடிவெடுக்கப்படும் என்று கூறப்பட்டது. இருந்த போதிலும் அவ்வாறு இடம்பெறவில்லை. இவ்வாறு இடம்பெறாத சந்தர்ப்பத்தில் தான் உச்ச நீதிமன்றம் இப்படியான தீர்ப்பை வழங்கியது. நீதிமன்றத்துக்கு யாரும் தலை பணிந்தாக வேண்டும். அதற்கு நாமும் தலை வணங்கினோம்.

அதுமட்டுமன்றி நாட்டில் வாழுகின்ற மக்களுக்கு முழுநாடும் சொந்தமானது. முழுநாட்டிலும் எங்கும் எப்படியும் வாழக்கூடிய சுதந்திரத்தை வழங்கவேண்டும். தமிழ், மலையகம், முஸ்லிம் என தனித்தனியாக பிரிப்பதை ஜே.வி.பி எதிர்க்கிறது.

***கேள்வி: யாழ்ப்பாணத் தில் ஜே.வி.பி அரசியலை முன்வைக்கிறீர்கள். 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்தவர்கள் இன்றும் கொட்டும் மழைக்குள் நலன்புரி நிலையங்களுக்குள் பல்வேறு துன்பங்களை அனுபவிக்கின்றார்கள் இவர்களை சொந்த இடங்களுக்கு விடுவதற்கு ஜே.வி.பி என்ன நடவடிக்கை எடுத்தது.***

***பதில்:*** நாங்கள் பல தடவைகள் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக பேசியுள்ளோம். எமது தலைவர் அனுரகுமாரதிஸநாயக்க நாடாளுமன்றத்திலும் சரி ஏனைய கலந்துரையாடல்களிலும் எடுத்துக் கூறியுள்ளார். இன்று விசேடமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற அதியுயர். பாதுகாப்பு வலயம் என்று சொல்லப்படும் பலாலியைச் சூழவுள்ள பகுதிகள் மக்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும். 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொலை தூரத்தில் இருந்து தாக்குதல் நடாத்தினால் அது பலாலியை பாதிக்கும் என கூறப்பட்டது. இந்தக் காரணத்தால் பலாலி விஸ்தரிக்கப்பட்டதாக கூறப்பட்டது.

ஆனால் இன்று புலிகள் இல்லாத சூழலில் யுத்தம் இல்லாத சூழலில் எதிர்வரும் காலங்களில் ஏற்படாது என்கின்ற சூழலில் இன்று இந்தக் காணிகள் இராணுவத்திற்கு அத்தியாவசியமற்றது.

***கேள்வி: யாழ்ப்பாணத்தில் இராணுவம் கூடியளவில் இருப்பதாக பாதுகாப்புச்செயலர் ஏற்றுக் கொண்டுள்ளார். அவர்களை குறைப்பதற்கு தான் நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியுள்ளார். இவ்வாறான சூழ்நிலையில் இராணுவத்தைக் குறைப்பதற்கான வழிகள் உண்டா?***

***பதில்:*** ஒரு நாட்டில் தேசிய பாதுகாப்பு என்று பார்க்கின்றபோது தமிழர் பிரதேசம் என்றோ சிங்களவர் பிரதேசம் என்றோ வேறுபாடு காட்டக் கூடாது. அதனால் இராணுவம் தனது வேலையை மட்டும் செய்துகொண்டிருந்தால் போதும். உதாரணத்திற்கு கட்டுநாயக்க பிரதேசம் உயர்பாதுகாப்பு வலயம், அநுராதபுரத்தில் உயர்பாதுகாப்பு வலயம், கொழும்பில் இருப்பது உயர்பாதுகாப்பு வலயம். அந்த வலயங்களிலெல்லாம் மக்கள் வசிக்கின்றார்கள். அதனால் நாங்கள் கூறுகின்றோம் அளவுக்கதிகமாக உள்ள இராணுவம் அகற்றப்பட வேண்டும் என்பதில் நியாயம் கிடையாது. இராணுவம் தங்களது வேலையை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். மக்களை சுதந்திரமான முறையில் நடமாடுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். அதற்கேற்ற சூழல் உருவாக்கப்பட வேண்டும். அதே நேரம் இராணுவத்திடம் இருக்கின்ற அதிகாரங்கள் சிவில்நிலையங்கள் ஊடாக பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட வேண்டும்.

***கேள்வி: சந்திரிக்காவை ஆட்சிக்கு கொண்டுவந்தது ஜே.வி.பி ஆனால் இன்று தங்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தொகை குறைந்துள்ளது. இதனால் மக்கள் தற்போது ஜே.வி.பி இல் இருந்து அந்நியப்பட்டு வருகின்றார்கள் என்று எடுத்துக்கொள்ள முடியுமா?***

***பதில்:*** ஜே.வி.பி 1994ஆம் ஆண்டு ஜனநாயக சூழலுக்கு வந்தது. அதற்கு முன் 60 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். எமது கட்சியின் தலைவர் படுகொலை செய்யப்பட்டார். இதன் மூலம் கட்சி கூண்டோடு அழிக்கப்பட்டுவிட்டது என்றார்கள். இனி25 வருடங்களுக்கு ஜே.வி.பி எழும்பாது என்றார்கள். ஆனால் ஜே.வி.பிஇல் இருந்து 1994 ஆம் ஆண்டு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னர் நடந்த நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஜே.வி.பி. பாரிய வெற்றியைப் பெற்றது. மகாமன்னராக போற்றப்பட்ட மகிந்த ராஜபக்ஷவின் 8 வருட ஆட்சியை அசைத்துக் காட்டியது ஜே.வி.பி

அத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஆட்சிப்பீடத்திற்கு கொண்டு வருவதற்கு மறைமுகமாக செயற்பட்டது ஜே.வி.பி தான். இதற்காக மக்கள் மத்தியில் கருத்துக்களை கொண்டு சென்றது ஜே.வி.பி

அப்பொழுது இருந்தது 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான். இவ்ரகள் மூவர் இருக்கின்றபோதுதான் கட்சித் தலைவராக அனுரகுமாரதிஸநாயக்கவை நியமிக்க வேண்டுமென்ற கருத்து உருவானது. மாணவர்களின் பிரச்சினை தொழிலாளர்களின் பிரச்சினை, விவசாயிகளின் பிரச்சினை எனும்போது ஜே.வி.பியைத் தான் அனைவரும் தேடிவருகின்றனர். இதனால் மக்கள் மத்தியில் அதிக நம்பிக்கை உள்ளது.

***கேள்வி: நல்லாட்சி அரசின் செயற்பாடுகள் தொடர்பாக கூற முடியுமா?***

***பதில்:*** நல்லாட்சி அரசாங்கம் அல்ல இது. நல்லாட்சி அரசு வர வேண்டுமென்று நாம் எவ்வாறு ஒத்துழைத்தோம் என்று பார்க்க வேண்டும். மைத்திரிபாலசிறிசேன ஜனாதிபதித் தேர்தலுக்கு வருகின்ற போது எமது கட்சித்தலைவர் குறிப்பிட்டார். மகிந்த ராஜபக்ஷவின் கடையில் இருக்கின்ற பொருட்கள் தர மற்றவை. அதனால் இந்தக்கடை

(தொடர்ச்சி 23 இல்......)

நேர்காணல்: லக்ஷா

# குடாநாட்டுக் கேணிகளும் ஆவுரோஞ்சு கற்களும்

நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமையப் பெற்ற பிரதேசம் யாழ் குடாநாடாகும். தமது முன்னோர்கள் குளம் கண்ட இடத்தில் வளங்கண்டவர்கள். குடா நாட்டில் ஏராளம் குளங்கள் இருந்திருக்கின்றன. இன்றும் இங்கு ஆங்காங்கே குளங்கள் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இப்பகுதிகளில் முன்பு வாழ்ந்தவர்களின் தொழில் விவசாயமாகவே இருந்தது.

அக்காலத்தில் மனிதன் அன்றாட வாழ்க்கைக்கும் ஏன் கால்நடைகளுக்கும் குளங்களும் வாய்க்கால்களும் உதவின. குளங்களையும் வாய்க்கால்களையும் அன்று பார்த்தால் வயலுக்கு நீர்பாய்ச்சிக் கொண்டிருப்பார்கள். அதேவேளை கால்நடைகள் அங்கு கூட்டங் கூட்டமாகவோ தனித்தோ குளத்தில் நீரினை குடிப்பதைக் காணலாம். மறுபுறத்தே மனிதர்கள் ஆடைகளைத் துவைப்பதையும், நீராடுவதையும் காணலாம். சிலர் மறுபுறத்தில் மேல் நீரைப் புறப்பாத்திரத்தால் தள்ளிவிட்டு நீரினை அள்ளிக் கொண்டு செல்வதையும் காணலாம்.

குளத்தினை அண்டிய பகுதிகள் சில குடியிருப்புக்களாக மாறின. அவைகள் நாளடைவில் கிராமங்களாயின. இதேபோன்று நீர் நிலைகளுக்கு வெகுதூரத்தில் இருந்த குடிசை மக்களுக்கு அண்மையில் நீர்நிலைகள் தேவைப்பட்டன. இந்தவேளையில் உருவாக்கப்பட்டவைதான் துரவுகள். இந்தத் துரவுகள் ஆழமானவையாகவும் பலபக்கங்களிலிருந்து இறங்கி நீர் எடுக்கக் கூடியதாகவும் இருந்தது. இதுபோன்ற துரவுகள் தென்மராட்சிப் பகுதிகளிலும் தீவுப் பகுதிகளிலும் இருந்தன. கொடிகாமம், பளை போன்ற இடங்களில் இத்துரவுகளை இன்றும் காணலாம். தென்னை மற்றும் காய்கறிப் பயிர்கள் போன்றவற்றிற்கு இன்று இத்துரவுகள் மூலம் கோலுபட்டையால் நீர் ஊற்றுவதைக் காணலாம்.

துரவுகளாக இருந்தவற்றில் சில கல்லால் கட்டப்பட்டவை கேணிகளாயின. கேணிகளுக்கும் குளங்களுக்கும் அண்மித்ததாய்ப் பாதைகள் உருவாகின. இந்த நீர் நிலைகளுக்குள் நீர் குடித்த கால்நடைகள் இவைகளுக்குப் பக்கத்தில் நின்ற மரங்களில் முதுகை உரைசின. இதன் காரணமாகத்தான் மனிதர்கள் குளக் கரைகளிலும் கேணிவாசல் கரையிலும் கற்றூண்களை நான்கு, ஐந்து அடி உயரமுடையதாக நாட்டி வைத்தனர். நீர் குடித்த மாடுகள் இந்தக் கற்களிலே முதுகைத் தேய்துச் செல்லும். இதனாலே ஆவுரோஞ்சு கற்களாயின. இந்த ஆவுரோஞ்சு கற்கள் பற்றி பண்டைத் தமிழ் நூல்களில் வருவதை அறியலாம்.

இன்றும் வடமராட்சி தென்மராட்சி வலிகாமம் தீவுப் பகுதிகளிலும் அதுவும் வயல்களை அண்டிய பாதைகளில் அமைந்த குளங்களோ, கேணிகளோ இருந்தால் அங்கே ஆவுரோஞ்சு கற்கள் நாட்டியிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றன. குறிப்பாக இன்றும் நாகர் கோயில், கரவெட்டி, தொண்டைமானாறு, மட்டுவில், மீசாலை, கந்தரோடை, சண்டிலிப்பாய் போன்ற இடங்களில் இவைகள் இருக்கின்றன. இவற்றில் சில நல்ல நிலையில் பேணப்பட்டு மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் பயன்பட்டு வருகின்றன. சில கேணிகள் இருந்த இடங்கள் தெரியாமல் மறைந்துவிட்டன. சிலகேணிகள் குப்பை கூழங்களால் நிறைந்து கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றன. முன்பு பெரும் தொகையான கோயில்களுக்கு அருகில் கேணிகள் இருந்தன. இன்று சில கோயில்களில் மட்டும் காணப்படுகின்றன.



பிற்காலத்தில் வீதியோரங்களில் கிணறுகளும் நீர்த்தொட்டிகளும் ஆவுரோஞ்சுக் கற்களும் உருவாக்கப்பட்டன. இதனால் மக்களும் கால்நடைகளும் பயனடைவதைப் பார்க்க முடிகிறது.

காலப்போக்கில் கால்நடைகள் வீட்டில் கட்டப்பட்டன. வாளியில் தண்ணீர் வைக்கப்பட்டது. மனிதர்கள் வைக்கோலால் கால்நடைகளின் (அரிப்பை) அலுப்பைத் தீர்த்து வைக்கின்றனர்.

என்னதான் நவீன முறைகள் வந்தாலும் பண்டைய மக்களின் வாழ்க்கை முறைகளை அறிய கேணிகளும் ஆவுரோஞ்சு கற்களும் பேணப்பட வேண்டும் என்பது புலனாகிறது.

தொகுப்பு : கலாபூஷணம் சு.துரைசிங்கம்

# இலக்கியக் கிண்ணம்

## புகழ்பூத்த அறிஞர் கடிதம்

**அ.நாகநாத பண்டிதர் (1824 – 1884) குமாரசுவாமிப் புலவருக்கு எழுதிய கடிதம்**

மிகுந்த நேயமுள்ள அ.கு.அறிவது,

நீர் கார்த்திகை மாதம் 30 தேதியன்று எழுதிய காகிதம் வாசித்தறிந்தேன். உமக்கும் இப்படியே சடங்கு எடாமல் நல்ல ஆஸ்தியுள்ள பெண்ணாய் எந்தவூரிலும் ஆண்பிள்ளைக்குச் சரியே பார்த்தெடுக்கவும். ஆஸ்திரியில்லாமல் சடங்கு முடிந்தால் விருதுக்கு வேட்டையாடுவதாய் முடியும். மாசி மாதம் உத்தரவு தந்தால் 23–ம் தேதி புறப்படுவேன். அது எப்படி முடியுமோ தெரியாது. இடையூறுன்றி இருந்தால் வருவேன்.

மாகம் பத்துச் சருக்கமும் மொழி பெயர்த்து வைத்திருக்கிறேன். வருகிறபோது கொண்டு வருவேன். யாதொரு செய்யுளும் அந்தப் புஸ்தகத்துக்கு வேண்டாம்...

நீரும் சங்கரபண்டிதர் மகனும் சமஸ்கிருதம் படிக்கத் தொடங்கியிருப்பது நலம். இனிமேல் இங்கிலிசு படிக்கிறவர்கள் அதிகம் குறையும். தமிழும் சமஸ்கிருதமுமே அதிகப்படும். கைக்கூலி கொடுத்தாகுதல் படிப்பியும். இப்போது படிக்கிற பிள்ளைகளை விட்டுவிடாதேயும். நன்றாய்ப் பயப்படாமற் சொல்லிக்கொடும். இதற்கு மறுமொழி வேண்டாம். உதயபானுப் பத்திரம் நடக்குதா?

# இலக்கியத் துளிகள்

**இரு பேரறிஞர்களின் பேருரைகள்**

சுன்னாகத்தில் 1950களில் நடந்த முத்தமிழ் விழாவில் கிழக்கு மாகாண புலவர் பெரியதம்பிப் பிள்ளையும் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அரிய இலக்கியப் பேருரைகள் நிகழ்த்தியிருக்கிறார்கள். அவ்வுரைகள் பலராலும் போற்றப்பட்ட ஒன்றாக இன்றும் கருதப் படுகிறது.

**தமிழ் விளையாட்டு**

கவிக்கோ அப்துல் ரகுமானின் பவள விழாவில் கலைஞர் கருணாநிதி கலந்து வாழ்த்துரை வழங்கினார். அவ்விழாவில் கவிஞர வைரமுத்து, ஏ.ஆர்.ரகுமான் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் பிரிட்டிஷ் அரசால் நடத்தப்பட்ட B.A.ஆரம்பப் பரீட்சையில் சித்தியடைந்த மூவரில் இருவர் யாழ்ப்பாணத்தவர். மற்றவர் இந்தியாவைச் சேர்ந்தவர் 1857இல் B.A. இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களும் அவரின் ஆசிரியருமான விசுவநாதப் பிள்ளையுமாவார். இவர்கள் இருவரது பெயர்களும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம். தென்கிழக்காசியாவில் முதலில் சித்தியடைந்த இருவரும் இவர்களேயாவர்.

**சிற்பியே யாழ்வாசி**

அண்மையில் அமரத்துவம் அடைந்த "கலைச்செல்வி" ஆசிரியர் யாழ்வாசி என்ற புனை பெயரில் எழுதி வந்தார். குறிப்பாக நா.பார்த்தசாரதியை ஆசிரியராகக் கொண்டு தென்னிந்தியாவிலிருந்து வெளிவந்தது தீபம் இயங்கிய இதழ் இந்தத் தீபம் பத்திரிகையில் இலங்கை இலக்கியம் செய்திகளை யாழ்வாசி என்ற பெயரில் எழுதி வந்தது குறிப்பிடத்தக்கது.

**அ.செ.மு.முருகானந்தம் (சிறுகதை எழுத்தாளர்)**

இவர் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டவர். சிறுகதை எழுத்தாளரான அ.செ.முருகானந்தம் சுன்னாகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ஈழகேசரி என்ற வாரப் பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும் இருந்தவர். முதுமை காலத்தில் இடம்பெயர்வினால் தள்ளப்பட்டு கிறிஸ்தவ மடத்தினாரின் உதவியுடன் திருகோணமலைக்குச் சென்று இறந்தவர். ஈழகேசரியில் இவர் பணி செய்யும் வேளை பல எழுத்தாளர்களை முன்னோடிகளாக்கியவர்.

# மெல்ல நகும் நாண நகை

ஒற்றைச் செவ்வந்திப்
புன்சிரிப்புக்காரி!
என்னை படுத்தும்பாடு
அப்பப்பா!

அவள் அழகிற்கு
அழகிய நகைகள் இரண்டு
வெருளும் புள்ளி மான்களைப்
போல் அவள் கண்களிரண்டு
ஒருநகை.

பதமாக குழைத்த பானையின்
மண் போல் இதமாகக் குழைந்த
நாணம் இனிப்புக்காரிகளுக்கே
உரித்தானதல்லவா?

என் சித்திரப்பாவைக்கு வழியும்
நாணம்
வகையானதொரு
நகையல்லவா
அன்னநடையாள்
சின்ன
இடையாள்
எந்தன் உயிராள்
அணியும் நகையல்லவா
எத்தனை உயர்வு

அவள் பெண்மையில் ஊறிய
நாணத்தை கண்ணிய நகையாய்
அணிந்தனளே அகத்தில்

சொல்லிட முடியா சுந்தரி அழகில்
மின்னிடும் கண்ணிமைக் கீழே
எனை கொன்றிடும் விழிகள்
இரண்டு நகையென்று
சொல்வதே புறத்து

ஒத்த நகைகள்
இரண்டு அந்த
ஒயிலாள் இடத்து

இருக்க ஒவ்வா நகைகள் எதற்கு?

அழகியல் நிறைந்த அற்புதமே–இரு
நகையணிந்த பக்குவமே!
நிலைபொருள்.
நகையென அணிந்தாய் அறமும்
பொருளும் அவையிதுவாகும்
முறையில் அவையோ முழுமை
பெற்றால் இன்பம் கூடும்
இனிதே–அதை தந்திடும்
காதல் அமுதே!

உடையும் நகைகள் எதற்கு
உடையா நகைகள் இருக்கு
அடி!
கடையில் கிடையாநகையிரண்டு
உன்னில் இருக்கு
போதும்.
"பிணையேர் மடநோக்கும்"



கபிலன்

# குட்டீஸ் பக்கம்



ஒரு காட்டில் குரங்கு ஒன்று தனியாக வசித்து வந்தது. அது மிகவும் குறும்புகாரக் குரங்காக இருந்தது. பின்விளைவுகளை எண்ணாமல் மிகுந்த குறும்புத் தனம் செய்யும்.

# ஆப்பிழுத்த குரங்கு

அந்த குரங்கு வசித்த அந்த காட்டுப் பகுதிக்குள் ஒரு விறகு வெட்டியும் வசித்து வந்தான். அவன் மரங்களை பெரிய துண்டு களாக வெட்டிவந்து, அவற்றை தன் குடிசை அருகே வைத்து கோடரியால் பிளந்து அடுப்பில் வைக்கக் கூடியதாக சிறு துண்டு களாக்கி, அவற்றை பக்கத்து கிராமங்களுக்குக் கொண்டுசென்று விற்று அதைக்கொண்டு குடும்பம் நடத்தி வந்தான். அவன் மரத் துண்டுகளைப் பிளப்பதற்கு ஆப்புகளைப் பாவிப்பது வழக்கம். ஆப்பு என்பது ஏ வடிவமான மரம் அல்லது இரும்பினால் ஆன ஒரு பக்கம் ஒடுக்கமாகவும் மற்றப் பக்கம் அகலமாகவும் உள்ள ஒரு ஆயுதம்.


ஒருநாள் வழமைபோல் ஒரு பெரிய அடிமரத்துண்டை கோடரியால் பிளக்க ஆரம்பித்தான். அவனுக்கு களைப்பு வந்ததால் அடிமரத்தின் பாதியளவு பிளந்திருந்த பிளவுக்கு இடையில் ஆப்பு போல் ஒரு மரச்சக்கையை வைத்துவிட்டு ஓய்வெடுக்கச் சென்றான்.

விறகு வெட்டியின் செயலை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்த குரங்கு அவன் சென்றவுடன் கீழே இறங்கி வந்தது.

விறகு வெட்டி விட்டுச்சென்ற மரத்துண்டின் மீதேறி மரத்தில் இறுக்கி இருந்த ஆப்பை நோக்கியவாறு அமர்ந்தது. அப்போது பிளவுபட்ட பகுதியில் அதன் வால் முழுவதும் செறிருந்தது. குரங்கு ஆப்பை இழுக்கும் அவதானத்தில் இருந்ததால் தனது வால் மரத் துண்டின் பிளவில் போயிருப்பதை உணரவில்லை. பின் தனது குறும்பு வேலையைச் செய்ய ஆரம்பித்தது. மரப்பிளவு இறுகாமல் செருகி இருந்த ஆப்பை தன் முழுப் பலத்தையும் பாவித்து ஆட்டி ஆட்டி எடுக்க முயற்சி செய்தது.

திடீரென்று அந்த ஆப்புத்துண்டு குரங்கின் கையோடு வந்துவிட்டது. உடனே பிளவுபட்ட மரத்துண்டு சுருங்கிக் கொண்டது. பிளவுக்குள் தொங்கியிருந்த வால் நசுங்க குரங்கு அலறியது. ஓய்வெடுத்துக் கொண்டிருந்த மரவெட்டி அலறல் கேட்டு அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தான். அதற்குள் குரங்கு வலி தாங்காமல் பரிதாபமாக மாண்டு போனது.

பாடம் : 'பின்' விளைவுகளை ஆராயாமல் எந்த காரியத்தையும் செய்யக்கூடாது.




# தினமொரு குறள்



*அறவாழி அந்தணன் தாள்சேர்ந் தார்க் கல்லால்*
*பிறவாழி நீந்தல் அரிது.*

**பொருள் : அந்தணர் என்பதற்குப் பொருள் சான்றோர் என்பதால், அறக்கடலாகவே விளங்கும் அந்தச் சான்றோரின் அடியொற்றி நடப்பவர்க்கேயன்றி, மற்றவர்களுக்குப் பிற துன்பக் கடல்களைக் கடப்பது என்பது எளிதான காரியமல்ல.**

# கண்டுபிடிப்புக்கள்

| கண்டுபிடித்தவர் | கண்டுபிடித்த ஆண்டு | எந்த நாட்டவர் |
|---|---|---|
| 01. நுணுக்காட்டி (Microscope) | | |
| ஜான்சன் | 1959 ஆம் ஆண்டு | ஒல்லாந்து |
| 02. தொலைநோக்கி (Telescope) | | |
| விரன்ஸ்லிப்பேர்சி | 1608 ஆம் ஆண்டு | ஒல்லாந்து |
| 03. மடக்கை (Logorithms) | | |
| ஜோன்நபியிர் | 1614 ஆம் ஆண்டு | ஸ்கொட்லாந்து |
| 04. இரத்தச் சுற்றோட்ட உபகரணம் | | |
| வில்லியம்ஹராவே | 1628 ஆம் ஆண்டு | இங்கிலாந்து |
| 05. கணிக்கும் பொறி (Calculating Machine) | | |
| பிளைய்ஸ் பாஸ்கல் | 1642 ஆம் ஆண்டு | பிரான்ஸ் |
| 06. பாரமானி (Barometer) | | |
| நு.ரொறிசெல்லி | 1644 ஆம் ஆண்டு | இத்தாலி |
| 07. ஊசல் கடிகாரம் (Pendulam Clock) | | |
| நு.ஹேகென்ஸ் | 1657 ஆம் ஆண்டு | ஒல்லாந்து |
| 08. பியானோ (Piano) | | |
| கிறிஸ்ரோபோறி | 1711 ஆம் ஆண்டு | இத்தாலி |
| 09. நீராவி எஞ்சின் | | |
| தோமஸ் | 1712 ஆம் ஆண்டு | பிரித்தானியா |
| 10. மின்னற் கடத்தி | | |
| பெஞ்சமின் | 1752 ஆம் ஆண்டு | அமெரிக்கா |

**மு.கமலினி**
தரம் – 10
(யா/மகாஜனக் கல்லூரி)

# விடுகதை

01. அத்தை இல்லாத அத்தை என்ன அத்தை?
02. அந்தரத்தில் தொங்குது அதிசய மாளிகை மந்திரத்தில் கட்டியவன் மத்தியில் தொங்கிறான் அவன் யார்?
03. அள்ளவும் முடியாது. கிள்ளவும் முடியாது எது?
04. அடித்தாலும் விலகாது அணைத்தாலும் தழுவாது அது என்ன?
05. அந்தியிலே வருவான், அதிகாலை மறைவான் அவன் யார்?
06. அண்ணன் தம்பி அடுத்த வீட்டுக்காரர்கள் ஒருவர் வீட்டுக்கு மற்றவர் போகமுடியாது அது என்ன?
07. அந்தரத்தில் பறக்கும் பறவை அல்ல, அழகான வால் உண்டு குரங்கும் அல்ல அது என்ன?
08. அம்மா படுத்திருக்க மகள் ஓடிக்கொண்டிருப்பாள் அவள் யார்?
09. அவள் குளித்தால் இறந்துவிடுவாள் அவள் யார்?
10. அடர்ந்த காட்டுக்குள் அலைந்து திரிந்து அழகுபடுத்துவான் அவன் யார்?
11. அண்டம் என்ற பெயரும் உண்டு, அடைகாத்தால் குஞ்சும் உண்டு அது என்ன?
12. அர்த்தராத்திரியிலே ஆருமில்லா வேளையிலே, மழை முடிஞ்ச நேரத்திலே மாப்பிள்ளை குடைபிடித்தாராம் அவர் யார்?
13. அத்தான் இல்லாத அத்தான் என்ன அத்தான்?
14. அணில் ஏறாத கொம்பு என்ன கொம்பு?
15. அக்காள் தங்கை உறவுண்டு. அண்டை அண்டை வீடுண்டு, கிட்டக் கிட்ட வந்தாலும் தொட்டுப் பேச முடியாது அவை என்ன?

**விடைகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. சித்தரத்தை | 2. சிலந்தி | 3. காற்று | 4. தண்ணீர் |
| 5. இருள் | 6. தண்டவாளம் | 7. பட்டம் | 8. அம்மிக்குழவி |
| 9. நெருப்பு | 10. சீப்பு | 11. முட்டை | 12. காளான் |
| 13. மொட்டக்கத்தான் | 14. மாட்டுக்கொம்பு | 15. கண்கள் | |

**கு.கோகுலா**
இடைக்காடு மகா வித்தியாலயம்

# அம்மா

கல்யாணப் பந்தலிலே கன்னியவள்
கால்பதித்து
யாரென்று தெரியாத மணவாளனை
கைகோர்த்து
அவன் மனம் புரிந்து
தனக்கென ஒரு முத்து பிள்ளைச்செல்வத்தை
பெற்றெடுக்க

பத்து மாதம் சுமந்து
தன் குழந்தையை
பெற்றெடுத்து
முத்தே கண்ணே என
பெயர்சொல்ல
வளர்க்கிறானே.
அவளே தெய்வம்



தன்னுயிர் போனாலும்
பிள்ளையுயிர்
காப்பாளே அன்னை,
அவளை பார் போற்றும் தெய்வமாய்
வாழ வைப்போமே.

**சி.லாதுசா**
தரம் – 08
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

# ஒட்டகத்தின் குணாதிசயங்கள்

ஒட்டகமானது கடும் குளிர், கடும் வெப்பம், கொதிக்கும் மணல், புழுதிக்காற்று, புல், பூண்டு ,தண்ணீர் அற்ற வறட்சியில் மாதக் கணக்கில் பிரயாணம் செய்யும் போது அனைத்து இயற்கைத் தாக்குதல்களையும் சளைக்காமல் வெற்றிகரமாய் எதிர்கொண்டு பீடுநடை போட்டு பாலைவனத்தை கடக்க கப்பல் போல் அமைவதால் இப்பெயரைப் பெற்றுள்ளது.



ஒட்டகம் பாலைவனத்தில், தனிச்சிறப்பு வாய்ந்த தனக்கு ஒப்புமை அற்ற தாவர உண்ணி வகையைச் சேர்ந்த பாலூட்டி பிரிவைச் சார்ந்த ஒரு வீட்டு விலங்காகும்.

பொதுவாக ஒரு ஒட்டகம் 250 கிலோ எடையிலிருந்து 680 கிலோ எடை வரை வளரும். இப் பாலைவனக் கப்பல் 50 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன. ஒட்டகத்தின் மிகவும் புகழ்பெற்ற பண்பு, நீரில்லாமல், உணவில்லாமல். பாலைவனத்தில் பலநாள் வாழக் கூடியது.

# பொது அறிவு

01. உலகிலேயே மிகவும் பெரிய சிகரம் எது?
**எவரெஸ்ட்**
02. உலகிலேயே அதிகமாக மக்கள் வாழும் நாடு எது?
**சீனா**
03. உலகிலேயே அதிகமாக பேசும் மொழி?
**வடசீன மொழி**
04. உடலை விட தலை பெரிய மிருகம் எது? **எறும்பு**
05. உலகில் கட்டாய பயிற்சி அழிக்கும் நாடு?
**இஸ்ரேல்**
06. படகு வடிவான நாடு எது?
**இத்தாலி**
07. உலகிலே அதிக நீரருந்தும் பறவை எது? **புறா**
08. ஆசியாவில் கடைசியாக தொழில்மயமான ஐரோப்பிய நாடு? **ரஷ்யா**
09. காளானில் இருந்து தயாரிக் கப்படும் மருந்து எது?
**பென்சிலின்**
10. லட்சத்தீவில் அதிகம் பேசப் படும் மொழி? **மலையாளம்**
11. சிவப்பு எறும்பின் கொடுக்கில் அமைந்துள்ள அமிலம்?
**பாரமிக் அமிலம்**
12. தாஸ் கபிடல் என்னும் புத்தகத்தை எழுதியர்?
**கார்ல் மார்க்ஸ்**
13. வெளவால் ஏற்படுத்தும் ஒலி? **மீயொலி**
14. மனிதன் ஒரு அரசியல் மிருகம் எனக் கூறியவர்?
**அரிஸ்டாட்டில்**
15. வனவிலங்கு தடுப்புச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு?
**கி.பி 1890**

**ந. திவ்யா**
தரம் – 07
யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி :** *சமந்தா பவரின் இலங்கைக்கான வருகையின் நோக்கம் என்ன?*
**பதில் :** ஒபாமாவைத்தான் கேட்க வேண்டும்.
மேனன், கல்வியங்காடு

**கேள்வி :** *நல்லாட்சி அரசில் தமிழருக்கான தீர்வு கிட்டுமா?*
**பதில் :** கிட்டும் – ஆனால் கிட்டாது.
க.நவரத்தினம், புத்தூர்

**கேள்வி:** *புதிய அரசின் பட்ஜெட் குறித்து தங்களின் கருத்து என்ன?*
**பதில் :** வரவு இருந்தால் தானே செலவைப் பற்றி சிந்திக்க வேணும். வெறும் கை முழம் போடாது.
கைலைநாதன், யாழ்ப்பாணம்

**கேள்வி :** *திருமலையில் இரகசிய முகாம் உண்மையா?*
**பதில் :** உங்களுக்கு யார் சொன்னது.
மு.லோகேஸ்வரன்,வவுனியா

**கேள்வி :** *சுமந்திரன் - விக்கி முரண்பாடு பின்புலந்தான் என்ன?*
**பதில்:** அவர்களுக்கு அவர்களுடைய முன்புலமே தெரியவில்லை. நான் எப்படி பின்புலம் பற்றி கூற முடியும்.



சி.தியாகராசா, நல்லூர்

**கேள்வி:** *தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை இழுபடுவதற்கான மர்மம் தான் என்ன?*
**பதில்:** ஓம் சம்பந்தன் நமக.
பூ.கண்ணன், சாங்கானை

**கேள்வி :** *பாரிஸ் தாக்குதல் உலகிற்கு உணர்த்தும் செய்தி என்ன?*
**பதில்:** எங்கும் எப்பொழுதும் எப்படியும் தாக்கலாம் என்பதே அந்த தாக்குதலின் செய்தியாகும்.
ப.கணேசலிங்கம், கிளிநொச்சி

**கேள்வி:** *யுத்தத்திற்குப் பிந்திய நிலையில் யாழில் அதிகரிக்கும் போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கு வழி இல்லையா?*
**பதில்:** ஏன் இல்லை. செல்வங்கள் அடைக்கப்பட்டால் எல்லாம் சரிவரும்.
ஐ.சாந்தன், பருத்தித்துறை

**கேள்வி :** *நலன்புரி நிலைய மக்களின் தொடர்கதையாகும் துயரம் நீடிக்குமா?*
**பதில்:** துயரங்கள் நீடிக்காமல் கண்ணீர்கள் விரைவில் துடைக்கப்படும்.
சி.மகேந்திரன், மல்லாகம்



**கேள்வி :** *வலி. வடக்கு மீள் குடியமர்வு சாத்தியமாகுமா?*
**பதில்:** சகலதுமே அத்தியாவசியமான தேவைகளே. மீள் குடியமர்வது, நிவாரணம் வழங்குதல், வீடு கட்டுதல், மக்கள் சரியாக சிரித்து வாழுவர்.
ப.கரிகரன், மாவிட்டபுரம்.

**உங்கள் கேள்விகளுக்கான பதில்களை அளிக்க தயாராகவுள்ளார் அரசகேசரி.**
**உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள்.**

அனுப்ப வேண்டிய முகவரி
*தினச்செய்தி*
*தில்லைகட்டி லேன்,*
*சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.*



# வயிற்றோட்டம்

ஒரு நாளைக்கு மூன்று முறைக்கு மேல்நீராகமலம் செல்வதையே வயிற்றோட்டம் என்கிறோம். வயிற்றோட்டம் ஏற்படும்போது ஒருவரின் உடலிலிருந்து நீர், உப்புக்கள், சீனிச்சத்து ஆகியன அகற்றப்படுகின்றன. இவ்வாறு அகற்றப்படுதலானது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றது. இந்த ஆபத்தைத் தடுக்க வெளியேறிய நீர், உப்புக்கள், சீனிச்சத்து ஆகியன மறுபடியும் உடலுக்குள் சேர்க்கப்பட வேண்டும்.

நோய்க்கிருமிகள் உடலினுள் செல்வது வயிற்றோட்டம் வருவதற்கு ஒரு முக்கிய காரணியாகும்.

**கிருமிகள் உடலுக்குள் செல்லும் முறைகள்**

அழுக்கடைந்த கைகள், அழுக்கடைந்த தண்ணீர், அழுக்கடைந்த உணவு, முறையாகவும் போதியளவும் சமைக்கப்படாத உணவுகள்

**வயிற்றோட்டத்தைத் தவிர்க்கும் முறைகள்**

கொதித்தாறிய நீரைக் குடிக்க வேண்டும், சுத்தமான நீரைப்பயன்படுத்தல், சாப்பாட்டிற்கு முன்னரும், மலசலம் கழித்த பின்னரும் கைகளை நன்கு சவர்க்காரம் இட்டுக் கழுவுதல்

சுத்தமாக நன்கு சமைத்த உணவை உண்ணுவதோடு சமைத்த உணவைப் பூச்சிகள் மொய்க்காமல் மூடிப்பாதுகாக்க வேண்டும்.

**வயிற்றோட்டத்திற்கான சிகிச்சை முறைகள்**

தாய்ப்பால் குடிக்கும் பிள்ளைகளுக்குத் தொடர்ந்து தாய்ப்பாலைக் கொடுக்க வேண்டும்.

உப்புசேர் குளுக்கோசு நீர், உப்பு சேர் கஞ்சி, பொரியரிசி நீர், தேசிக்காய்த் தண்ணீர் இளநீர் ஆகியவை எல்லா வயதுப் பிள்ளைகளுக்கும் கொடுக்கலாம்

**உணவு** – வயிற்றோட்டத்தின் போது உணவுகளைக் கொடுக்கலாம். ஒரு பகுதியாவது செமித்து உடலிற்குச்சத்தைக் கொடுக்கும்.

வயிற்றோட்டம் குறைந்து வரும் போது கட்டாயமாக உணவுகளைத் திரும்பவும் கொடுக்கவேண்டும். வயிற்றோட்டத்தின்பின் ஒருகிழமைக்காவது ஒரு மேலதிக உணவு கொடுக்கவேண்டும்.

**உப்புசேர் குளுக்கோசுநீர்**

உப்புசேர் குளுக்கோசு அடங்கிய சரைகளைக் கடைகளில் வாங்கலாம் (ஜீவனி) இதில் சோடியம் குளோரைட்டு, சோடியம் இருகாபனேற்று, பொற்றாசியம் குளோரைட்டு, குளுக்கோசு அடங்கியுள்ளன. இவற்றை ஒரு லீட்டர் கொதித்தாறிய நீரில் அல்லது சுத்தமான நீரிற கரைத்துப் பாவிக்கலாம். இதை வயிற்றோட்டம் இருக்கும் போது அடிக்கடி கொடுக்கவேண்டும். வாந்தி இருந்தாலும் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு இடையிடையே கொதித்தாறிய சுத்தமான நீரும் கொடுக்க வேண்டும். கரைத்த உப்புசேர் குளுக்கோசு 24 மணித்தியாலயங்களுக்கு வைத்துப்பாவிக்கலாம்.

**உப்புசேர் கஞ்சி**

வயிற்றோட்டத்திற்கான உப்புக்கள் அடங்கிய சரைகளை கடைகளில் வாங்கலாம். இதில் சோடியம் குளோரைட்டு, சோடியம் இருகாபனேற்று, பொற்றாசியம் குளோரைட்டு அடங்கியுள்ளன. வறுத்த அரிசி மாவு 50 கிராம் எடுத்துச் சுத்தமான நீரில 5 நிமிடத்திற்குக் கொதிக்க வைத்துத் தண்ணிரில் முழு அளவை 1 லிட்டர் வரும்வரை கொதித்தாறிய நீரைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இதற்குள் உப்புக்கள் அடங்கிய சரை ஒன்றைச் சேர்த்துக் கரைத்துவிடவேண்டும். இதனை 8–10 மணித்தியாலத்திற்குத்தான் வெளியில் வைக்கக்கூடியதாக இருக்கும். குளிர்சாதனப் பெட்டியானால் கூடிய நேரத்திற்கு வைக்கலாம்.

வீடுகளில் வயிற்றோட்டத்திற்கான உப்புக் கரைசலோ, உப்புசேர குளுக்கோசு கரைசலோ (ஜீவனி) எப்போதும் வைத்திருப்பது நல்லது.

- நன்றி -
நீரிழிவு சிகிச்சை நிலையம்

# கேள்விக்கு என்ன பதில்

எனக்கு வயது 20. திருமணம் முடித்து 10 மாதங்கள் ஆகின்றது. திருமணமான ஒரு மாத்திலேயே கருத்தரித்து விட்டேன். உடல் நலக் குறைவால் கர்ப்பத்தை வைத்திய ஆலோசனைப்படி கலைத்துவிட்டேன். அதன் பின்னர் கர்ப்பத்தடை ஊசி பாவிக்கிறேன். இவ் ஊசி போட்ட பின்னர் மாதவிடாய் பிந்துகின்றது. இதனால் கர்ப்பம் தங்க வாய்ப்பு உள்ளதா?

கர்ப்பத்தடைக்காக வழமையாக பயன்படுத்தப்படும் ஊசியானது Depo Provera ஆகும். இவ் ஊசிமருந்தானது 12 வாரங்களிற்கு ஒருமுறை பயன்படுத்தப்படும். இவ் ஊசி மருந்தை பயன்படுத்தும் போது ஒழுங்கற்ற முறையில் மாதவிடாய் வருவது சாதாரணம். சிலருக்கு ஊசிமருந்து பாவிக்கும் காலப்பகுதியில் மாதவிடாய் வருவதில்லை. இதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. இவ் ஊசிமருந்து பயன்படுத்தும் போது கர்ப்பந்தரிப்பதற்குரிய அளவு மிகக்குறைவு. ஆய்வுகளின் அடிப்படையில் கர்ப்பந்தரிப்பதற்குரிய சந்தர்ப்பம் 0.1 தொடக்கம் 2 வீதம் ஆகும். இது ஒழுங்கான முறையில் 12 வாரங்களிற்கு ஒரு முறை ஊசிபோடுவதால் மேலும் குறைவடையும்.




நீங்கள் உடல் நலக்குறைவால் கர்ப்பத்தை கலைத்ததாகக் கூறுகிறீர்கள். ஆனால் உங்கள் நோய் என்ன? எவ்வாறான சிகிச்சை பெறுகின்றீர்கள் போன்ற தகவல்கள் எதும் குறிப்பிடப்படவில்லை. ஒருவரது கர்பபமானது தாயின் உயிருக்கு ஆபத்து என கருதும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே கலைக்கப்படும். எனவே நீங்கள் உங்கள் அடிப்படை நோய் நிலைமை தொடர்பாக வைத்தியரின் ஆலோசனைப்படி சிகிச்சை பெற்று குறித்த நோய் நிலையானது கட்டுப்பாட்டில் உள்ள போது வைத்தியரின ஆலோசனைப்படி அவர்கள் நீங்கள் கர்ப்பம் தரிப்பது பாதுகாப்பானது எனக் கருதும் சந்தர்ப்பத்தில் நீங்கள் கர்ப்பம் தரிக்கமுடியும்.

*-Dr.பா.மேனகா-*
*நீரிழிவு சிகிச்சை நிலையம்.*
*யாழ் போதனா வைத்தியசாலை*

# கட்டுப்பாடற்ற நீரிழிவால் ஏற்படும் பாதிப்புக்கள்

நீரிழிவு நோயாளிகள் கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டியது அவசியம். அக்கட்டுப்பாடு இழக்கப்படுமிடத்து பாதிப்புகள் அதிகம் ஏற்படும்.

**1. குருதிக் குழாய்களில் ஏற்படும் பாதிப்புகள்**

ஒரு வாகனம் சரியாக இயங்குவதற்கு அதற்குரிய எரிபொருள் விநியோகம் சரியான முறையில் இருக்க வேண்டும். அதேபோன்று எமது கால்களும் சரியாக இயங்க அதற்குரிய குருதி விநியோகம் சிறப்பாக அமைதல் வேண்டும்.

நீரிழிவு நோயாளிகளின் நாள்பட்ட நிலைமையில் அவர்களது நாடிகளில் கொழுப்பு படிவங்கள் ஏற்படும். அந்த நாட்களில் உட்பகுதி தடிப்படைந்து குருதி விநியோகிக்கும் அளவு குறைவடைகின்றது. குருதி விநியோகம் குறைவடையும் போது காலில் ஏற்படும் தொற்றுகளுக்கு எதிராகப் போராடும் வெண்குருதிச் சிறுதுணிக்கைகள் காலைச் சென்றடையும் அளவு குறைவடைகின்றது. இதனால் தொற்று ஏற்படும் சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது. மேலும், காலில் நகத்துக்கும் தோலுக்கும் போதிய குருதி விநியோகம் கிடைக்காமலும் போகிறது.

இதனால் நகங்கள் மஞ்சள் நிறமாக மாறுவதுடன் இலகுவில் உடைந்தும் விடுகின்றன. இவ்வாறான நகங்கள் வெட்டுவதற்கும் கடினமானவையாகின்றன. கால்பாகத்தில் உள்ள தோற்பகுதி பளபளப்பானதாக மாற்றமடையும் கால்பகுதியில் காணப்படும் சிறிய குருதிக் கலனிலும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

இக்குருதிக் கலனின் சுவர்ப் பகுதி பலவீனமடைவதுடன் சில சமயங்களில் உடைந்தும் விடுகின்றது. இத்தகைய சிறிய குருதிக் கலன்களும் காலின் பகுதிக்கு வேண்டிய போசனைப் பதார்த்தங்களை வழங்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பத்தில் தொற்றுக்கள் ஏற்படின் அவை இலகுவில் குணமடையாது.

**2. நரம்புத் தொகுதியில் ஏற்படும் பாதிப்புக்கள்**

கால் பகுதிக்கான நரம்பு விநியோகத்திலும் சில பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. சிறிய குருதிக் கலனில் ஏற்படும் பாதிப்பால் நரம்புகளுக்கான குருதி விநியோகம் குறைவடையும். இதனால் நரம்புகளுக்கு வேண்டிய போசணையும் குறைவடையும். இதனால் கலன்களில் உணர்ச்சிக் குறைவு ஏற்பட்டுக் காயங்கள் இலகுவில் ஏற்படலாம். எனவே இதில் ஏற்படும் சிறிய புண்கள் பெரிதாகப் பெரிதாக கால் விரல்களை அகற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படலாம்.

எனவே இவ்வாறான நோயாளிகள் தங்கள் பாதங்களை அடிக்கடி ஒழுங்காக அவதானித்து சரியான பராமரிப்பை வழங்குவதன் மூலமும் நீரிழிவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலமும் காலில் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக் கொள்ளலாம்.

*கோ.நந்தகுமார்,*
*விரிவுரையாளர்,*
*தாதியர் பயிற்சிக் கல்லூரி,*
*யாழ்பபாணம்.*

# சித்த மருத்துவத்தில் பூவரசம் பூக்கள்

பூவரசம் மரத்தில் இதய வடிவ இலைகளின் நடுவே மஞ்சள் வர்ணத்தில் பூத்துக் குலுங்கும் பூவரச மரத்தின் பூக்கள் எண்ணற்ற மருத்துவ குணங்களை கொண்டுள்ளது. இந்த மலர்கள் உண்பதற்கு உகந்தவை என்று சித்தமருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். பொதுவாக இந்த இலைகளை விஷத்தை போக்கும் வல்லமை உடையதால் இதனை பூச்சிக் கடி மற்றும் விஷ வண்டுகடிகளுக்கு மருந்தாக இந்த பூக்களை சித்த மருத்துவர்கள் பயன் படுத்தி வருகின்றனர்.

நீர் பாதியாக சுண்டும் போது இறக்கி வடிகட்டி காலை மாலை வேளைக்கு இரண்டு அவுன்ஸ் குடிக்கவேண்டும். தொடர்ந்து மூன்று நாட்களுக்கு தினமும் இதுபோல புதிதாக கஷாயம் தயாரித்து குடித்து வர வேண்டும். பின்னர் மூன்று நாட்கள் இடைவெளி விட்டு, மறுபடியில் மூன்று நாட்கள் சாப்பிடவேண்டும். இதனால் விஷக்கடி மூலம் ஏற்பட்ட ஊறல், தடிப்பு, அரிப்பு, மயக்கம், சோம்பல் போன்றவை நீங்கும்.



சொறி, சிரங்கினால் அவதிப்படுபவர்கள் பூவரசம் பூவை அரைத்து அவற்றின் மீது பூசிவர தோல் மென்மையாகும், சொறி சிரங்கு குணமடையும். விஷக்கடி குணமாகும் பூச்சிக்கடி, வண்டுக்கடி, காணாக்கடி போன்ற பூச்சிகள் கடித்து அதனால் தோலில் ஊறல் நோய் ஏற்படும். அவர்கள் பூவரசம் பூ 25 கிராம் எடுத்து நசுக்கி, பழகிய மண்சட்டியில் போட்டு, 200 மில்லிலீட்டர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும்.

இந்த கஷாயம் உட்கொள்ளும் போது எண்ணெய், கடுகு தாளிக்காமல் சாப்பிடவேண்டும். மீன், கருவாடு சேர்க்கக் கூடாது. மூட்டு வீக்கம் வயதான காலத்தில் மூட்டுப் பகுதியில் நீர் கோர்த்து வீக்கத்தால் அவதிப்படுபவர்கள், பூவரசம் பூவுடன் சமஅளவு, காய் பட்டை, எடுத்து அரைத்து நல்ல எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி, மூட்டு வீக்கங்கள் மேல் பூசிவர வீக்கம் குணமடையும்

# யாழ்ப்பாணத்தின் மன்னன்

## நெதர்லாந்தில் வாழும் யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலிய மன்னனின் 28ஆவது பரம்பரையைச் சேர்ந்த மன்னர் இராஜநாதன் கனகராஜா





பெற்றோர்
இளவரசர் தம்பிராஜ் மேர்வின் அந்தோனி கனகராஜ்
இளவரசி மகேஸ்வரி மரீனா அன்ரனீற்றா

புத்திக அத்தாவுடன்

சங்கிலிய மன்னனின் இராசதானி

28 ஆவது வம்ச மன்னர்
இராஜநாதன் கனகராஜா

கஜந்த கப்புவத்தவுடன்

மன்னர் இராஜநாதன் கனகராஜாவுடன்
அமைச்சர் இராஜித சேனாரட்ன

# பெண்கள் மீதான வன்முறை

## ஒரு நோக்கு

**வீட்டு வன்முறையைத் தடுத்தல் சட்டத்தின் கீழ் தீர்வு: இடைக்காலப் பாதுகாப்பு உத்தரவொன்றுக்கு அல்லது பாதுகாப்பு உத்தரவொன்றுக்கு யார் விண்ணப்பிக்கலாம்.**

வீட்டு வன்முறையினால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர், நீதிமன்றிலிருந்து இடைக்காலப் பாதுகாப்பு உத்தரவு ஒன்றை அல்லது பாதுகாப்பு உத்தரவு ஒன்றைப் பெறலாம். மனக்குறைவிலான நபருக்கான அடைதலைக் கொண்டிருப்பதிலிருந்து துஷ்பிரயோகித்தவரை அல்லது குற்றமிழைத்தவரை இடைக்கால பாதுகாப்பு உத்தரவு அல்லது பாதுகாப்பு உத்தரவு தடுக்கின்றது.

**பாதிக்கப்பட்ட நபர் ஒருவரின் சார்பாக விண்ணப்பமொன்றைப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் செய்யலாம்.**

18 வயதுக்கு குறைந்த சிறுவ்ர ஒருவரின் விடயத்தில்: பெற்றோர் அல்லது பாதுகாவலர், சிறுவரை வளர்க்கும் நபர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நபர் ஆகியோர் விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

**பாதுகாப்பு உத்தரவொன்றைப் பெறுவதன் நடைமுறை என்ன?**

நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்று செய்யப்பட வேண்டும்

* வயது வந்தவர் ஒருவரின் விடயத்தில் (18 வயதுக்கு மேல்), நீதிமன்றத்திற்கு நேரடியாக அல்லது அவரது சார்பில் விண்ணப்ப மொன்றைச் செய்யும் வழக்கறிஞர், பொலிஸ் உத்தியோகத்தர் ஊடாக.
* பாதிக்கப்பட்டவர் வாழ்கின்ற பகுதியில் அல்லது வன்முறைச் சம்பவம் இடம்பெற்ற அல்லது அனேகமாக இடம்பெறக்கூடிய பகுதியில் நீதிமன்றம் இருக்க வேண்டும்.
* விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு சட்ட உதவி ஆணைக் குழுவிலிருந்து அல்லது மனித உரிமைகள் தாபனங்களிலிருந்து உதவியை பாதிக்கப்பட்ட நபர் கோரலாம் (தாபனத்திற்கான தொடர்பு: நீதிமன்றத்திற்கான விண்ணப்பத்தின் தளக்கோலம்).

சேவை வழங்குநர்கள்

* நீதிமன்றத்திற்கு செல்வதற்கு முன் பொலிஸ் நிலையமொன்றில் முறைப்பாடொன்றைச் செய்வது கட்டாயமில்லை.
* மனக்குறை கொண்டவர் ஒரு சிறுவர் என்றால் (18 வயதுக்கு கீழ்) ஒரு பெற்றோர், ஒரு பாதுகாவலர், அல்லது சிறுவரை வளர்க்கும் நபர், அல்லது ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோ்ர அல்லது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சிறுவரின் சார்பாக நீதிமன்றத்தில் விண்ணப்பமொன்றைச செய்யலாம்.
* வன்முறையின் மற்றும் துஷ்பிரயோகத்தின் செயற்பாடுகளையிட்டு அறிந்து வைத்துள்ள யாரேனும் ஒருவரிடமிருந்து விண்ணப்பத்திற்கான சத்தியக்கடதாசியை இணையுங்கள் (பகிரங்க நொத்தாரிசு போன்ற சத்தியக்கடதாசியை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட யாரேனும் ஒருவரின் முன்னிலையில் எழுதப்பட்டு, சத்தியம் செய்யப்பட்ட கூற்றொன்றே சத்தியக்கடதாசியாகும். சத்தியக் கடதாசியொன்றில் கூற்றொன்றை செய்யும் நபர் அல்லது ஆட்கள் சத்தியக்கடதாசியில் குறித்துரைக்கப்பட்டுள்ள உண்மைகள் தமது சிறந்த அறிவுக்கு சரியானவை என உறுதிமொழியளிக்க வேண்டும்).

**இடைக்காலப் பாதுகாப்பு உத்தரவொன்றை வழங்குதல்**

* விண்ணப்பத்தையிட்டு இறுதியான விசாரணையின் முன் உத்தரவொன்றைச் செய்வதற்கு அவசியமானது என நீதவான் கருதும் போது, அவரினால் இது வழங்கப்படும்.
* பெண்ணின்/சிறுவரின் உறுதிமொழி மீதான அடிப்படையில், நீதவான் திருப்தியடைந்தால், இடைக்கால பாதுகாப்பு உத்தரவொன்று வழங்கப்பட்டு, விண்ணப்பம் செய்யப்பட்ட பின் 14 நாட்களினுள் விசாரணையொன்று நடத்தப்படும்.
* மேலும், வன்முறையைத் தடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட நபரின் தரப்பின் பாதுகாப்புக்குமான அவசரமான தேவையை நீதிமன்றம் கரிசனைக்கு எடுக்கும்.
* வீட்டு வன்முறையின் விண்ணப்பத்திற்கு ஆதரவளிப்பதற்காக சான்றாக முன்னைய பொலிஸ் முறைப்பாடுகளையும்/பதிவுகளையும், நேரடி சாட்சிகளின் உறுதிமொழிகளையும் நீதிமன்றம் கோரும்.
* இடைக்காலப் பாதுகாப்பு உத்தரவொன்று அவசியமில்லை என நீதவான் தீர்மானித்தால், விண்ணப்பம செய்யப்பட்ட பின் 14 நாட்களினுள் விசாரணையொன்றை நடத்துவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.
* குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று குற்றமிழைத்தவருக்கு எதிராக ஏன் பாதுகாப்பு உத்தரவொன்று வழங்கப்படக்கூடாது. என்பது மீதான அவரது நிலையை விளக்குமாறும், அவரது உண்மையான விடயங்களை முன்வைக்குமாறும் அறிவித்தலொன்றை நீதிமன்றம் வழங்கும்.

## வீட்டு வன்முறை

**இடைக்கால பாதுகாப்பு உத்தரவொன்று என்றால் என்ன?**

* வன்முறையை விளைவித்த நபரை மேலும் ஏதாவது வன்முறையை இழைப்பதிலிருந்து அல்லது விளைவிப்பதிலிருந்து இடைக்காலப் பாதுகாப்பு உத்தரவொன்று தடுக்கின்றது.
* இது தற்காலிகமானது
* பாதுகாப்பு உத்தரவொன்று வழங்கப்படும் வரை அல்லது இடைக்கால உத்தரவொன்று அகற்றப்படும் வரை அது தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.
* இடைக்காலப் பாதுகாப்பு உத்தரவும், பாதுகாப்பு உத்தரவும் பின்வருவனவற்றிலிருந்து குற்றமிழைத்தவரைத் தடைசெய்யும்:
*வன்முறை இழைக்கப்பட்ட நபரின் வீட்டுக்குள், வேலைத்தலத்திற்குள் அத்துடன்/அல்லது பாடசாலைக்குள் பிரவேசித்தல்.
* பங்கிடப்பட்ட வீட்டில் தங்கியிருத்தல்
* வன்முறை இழைக்கப்பட்ட நபருடன் தொடர்புகொள்ளுதல் அல்லது அவரைப் பின்தொடர்தல்
* வன்முறை இழைக்கப்பட்ட நபருக்கு உதவுகின்ற உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு, சமூக ஊழியர்களுக்கு அல்லது மருத்துவ உத்தியோகத்தருக்கு கெடுதலை விளைவித்தல்.
* திருமண வாழ்க்கை மேற்கொள்ளப்பட்ட வீட்டை விற்றல்.
* வன்முறைக்கு உட்பட்டுள்ள நபரின் உடனடியான பாதுகாப்பினை உறுதிப்படுத்துமுகமாக ஒரு சமூக ஊழியரை, குடும்ப ஆற்றுப்படுத்துனரை, நன்னடத்தை உத்தியோகத்தரை, குடும்ப சுகாதார ஊழியரை அல்லது சிறுவர் உரிமைகள் மேம்படுத்தல் உத்தியோகத்தரை நீதிமன்றம் நியமிக்க முடியும்.

**பாதுகாப்பு உத்தரவொன்று என்றால் என்ன?**

* விண்ணப்பம் பற்றிய விசாரணை முடிந்த பின்னர், அவ்வாறு செய்வது அவசியமானது என நீதிமன்றம் திருப்தியடைந்தால், அது பாதுகாப்பு உத்தரவொன்றை வழங்கும்.
* ஏதாவது வீட்டு வன்முறைச் செயற்பாட்டினை விளைவிப்பதற்கு யாரேனும் ஒருவரைப் பாரப்படுத்துவதிலிருந்து அல்லது பெறுவதிலிருந்து குற்றமிழைத்தவரை பாதுகாப்பு உத்தரவு தடை செய்கின்றது.
* பன்னிரண்டு (12) மாதங்கள் வரை பாதுகாப்பு உத்தரவு அமுலில் தொடர்ந்துமிருக்கும். ஆனால், இரு தரப்புக்களும் அவ்வாறு செய்வதற்கு விண்ணப்பித்து, விண்ணப்பம் சுதந்திரமாகச் செய்யப்பட்டுள்ளது, சூழ்நிலை மாற்றமடைந்துள்ளது என நீதிமன்றம் திருப்தியடையும் போது, அது மாற்றப்பட அல்லது அகற்றப்பட முடியும்.

**குற்றமிழைத்தவர் இடைக்கால/பாதுகாப்பு உத்தரவை மீறினால் உங்களால் என்ன செய்ய முடியும்?**

* உடனடியாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய வேண்டும்.
* உங்கள் கோரலுக்கு ஆதரவளிப்பதற்கு சாட்சிகள் இருந்தால் அது உதவியாக இருக்கும்.

**இடைக்கால / பாதுகாப்பு உத்தரவு மீறப்படுவதற்கான தண்டனை என்ன?**

* இடைக்கால/பாதுகாப்பு உத்தரவு ஒரு "நீதிமன்ற உத்தரவு" என்பதுடன், எனவே இந்த உத்தரவை குற்றமிழைத்தவர் மீறினால் அல்லது உத்தரவுக்கு கீழ்படியாவிட்டால் அது ஒரு குற்றவியல் குற்றமாகும்.
* குற்றமிழைத்தவரினால் பத்தாயிரம் ரூபாவுக்கு (10,000) மிஞ்சாத அபராதம் ஒன்றை அத்துடன்/அல்லது ஒரு வருடத்திற்கு மீறாத சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிடலாம்.

**பாதுகாப்பு உத்தரவு வழங்கப்பட்ட பின்னர்**

* வீட்டு வன்முறைக்கு உட்பட்ட நபருக்கும் அத்துடன்/அல்லது பிள்ளைகளுக்கும் தங்குவதற்கு இடமொன்று வழங்கப்படும்.
* உத்தரவின் காரணமாக ஏற்பட்டுள்ள ஏதாவது கஷ்டத்தை வகைப்பொறுப்புக்கு எடுப்பதுடன், வாழிடமொன்றில் வைக்கப்படுவார் அல்லது தங்கியிருப்பதற்கு தற்காலிகமான இடமொன்று வழங்கப்படும். இதுபற்றிய விபரங்கள் இரகசியமாக வைக்கப்படும்.
* வன்முறையை இழைத்த நபர் நிதிசார் ஆதரவை வழங்க வேண்டும். அவ்வாறு செய்வதற்கான கடமையொன்றை அவர் கொண்டுள்ளார்.

**வீட்டு வன்முறையைத் தடுத்தல் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் உதாரணங்கள்**

**பின்வரும் தொகுப்புகளிலிருந்து:**

2005இன் 34ஆம் இலக்க வீட்டு வன்முறையைத் தடுத்தல் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தாரா விஜேதிலகவினால் ஒரு பகுப்பாய்வு

17 வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரியான மனைவி துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டுள்ளார். எதிர்வாதிக்கு பாதுகாப்பு உத்தரவு வழங்கப்பட்ட பின்னர் அவர் வெளியேறிவிட்டதுடன், அதன் பின்னர் அவர் பற்றி கேள்விப்படவில்லை. மனைவியும், அவர்களது மகளும் அமைதியான வாழ்க்கையொன்றை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குடும்ப ஒற்றுமை பேணப்படவில்லை, ஆனால் அமைதி நிலவியது'

"திருமணத்தின் பின் வாழ்ந்த வீட்டிலிருந்து மனைவியையும், மகளையும் துரத்தியடித்த பின்னர், அவர்கள் மனைவியின் வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தவேளை எதிர்வாதி பின்தொடர்ந்து சென்றுள்ளார். பாதுகாப்பு உத்தரவு வழங்கப்பட்டு, மனைவியின் வீட்டுக்குள் அல்லது வேலைத்தளத் திற்குள் பிரவேசிக்கக்கூடாது, அவரது நடமாடும் தொலைபேசி யில் அவரை அழைக்கக்கூடாது அல்லது அவருக்கு குறுஞ் செய்திகளை அனுப்பக் கூடாது என நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டதுடன், கணவரின் நடத்தையினால் அவர்களது மகள் மனவதிர்ச்சியை அடைந்திருப்பதன் காரணமாக அவரிடமிருந்து தூர விலகி இருக்க வேண்டும் என்றும் பணிக்கப்பட்டது. அவரை ஏற்றுக் கொள்ள முடியாத நடத்தையிலிருந்து விலகியிருக்குமாறு எதிர்வாதிக்கு நீதவான் அறிவுரை வழங்கினார். தற்போது மனைவியும், மகளும் அமைதியாக வாழ்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் தீர்வுகள்:**

வீட்டு வன்முறையின் சகல செயற்பாடுகளும் (வயதானவர்களின் உணர்வுபூர்வமான துஷ்பிரயோகத்தைத் தவிர) உண்மையிலேயே தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் குற்றவியல் குற்றங்கள் என்பதுடன், ஏதாவது வேறு குற்றத்தின் ஏதாவது விடயத்தில் அவர்கள் செயற்படுவது போன்று அத்தகைய சூழ்நிலைகளிலும் பொலிஸ் செயற்பட வேண்டும்.

எனவே, பாரதூரமான உடல் ரீதியிலான அல்லது பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகத்தின் விடயங்களில் வைத்தியசாலைக்கு அல்லது பொலிஸ் நிலையத்திற்கு மனைவி முறையிட முடியும். காயம், கடுங்காயம், அல்லது கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் போன்ற குற்றவியல் குற்றமொன்றை காயங்கள் கொண்டிருப்பதாக பொலிஸ்காரர் அல்லது வைத்தியர் திருப்திய டைந்தால், குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றமிழைத்த வருக்கு எதிராகப் பொலிசார் வழக்குத் தொடரலாம்.

நீதிமன்ற உத்தரவொன்றின் கீழ், கட்சிக்காரர்கள் பிரிந்திருந்தால அன்றி (சட்டபூர்வமாகப் பிரிந்திருந்தால்) தண்டனைச் சட்டக் கோவையின் கீழ், திருமணம் சார்ந்த பாலியல் வல்லுறவு குற்றமொன்று அல்ல.

தொடரும்

**தன்னினச் சேர்க்கையாளர்களும், இருபால் சேர்க்கைப் பெண்களுக்கும் எதிரான வன்முறையின் அடிப்படைக் காரணங்களில் ஒன்றாக, நிர்ப்பந்திக்கப்பட்ட எதிர்ப்பால்சேர்க்கைத் திருமணங்களாகும். தமது மகளின் பாலியல்தன்மையைக் குடும்பங்கள் ஏற்றுக்கொள்ளாததும், இதை மாற்றுவதற்காக மூர்க்கத்தனமாக நடந்துகொள்வதும் இன்னொரு காரணமாகும். பெண்களுக்கு எதிரான வன்முறையின் ஓட்டத்தை முளையிலேயே கிள்ளியெறியுமுகமாக பெண்களுக்கு எதிரான வன்முறையின் அடிப்படைக் காரணங்களை நாம் கவனத்திற்கு எடுக்க வேண்டும் என நம்புகின்றேன். தன்னினச் சேர்க்கையைப் பெண்களையம், இருபால் சேர்க்கைப் பெண்களையும் அத்துடன் அவர்களது பிரச்சனைகளையும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான இயக்கங்களும், பெண்களின் இயக்கமும் ஏற்றுக்கொள்வதுடன், இலங்கையில் பெண்களுக்கு எதிராக அதிகரித்துவரும் வன்முறையை நிறுத்துவதற்கு அதை தமது ஆணையில் உள்ளடக்கியதற்கான நேரம்வந்துவிட்டது."**



றொஸான பினேமர் கல்டேரா

(தொடர் சிறுகதை - 4)

# தன்வினை

இதற்கிடையில் எங்கேயோ யாரோ சொல்லி கேள்விப்பட்ட இரண்டு லேடிஸ் ரீச்சர்மார் அங்குவந்து சேர் இதெல்லாம் சகயம் சேர். இப்பத்தே புள்ளையளில் எந்தப் புள்ளை குளப்படி செய்யல நரம்பில்லா நாக்கால பாக்காதைங்க. நாங்களும் O/L படிச்ச காலத்தில் இப்பிடி அண்ணை மாரோட பழகின நாங்கள்தான் எனக் கூற ரம்மியா இதைக் கேட்டதும் மேலும் மேலும் விக்கி விக்கி அழத் தொடங்கினாள். அதற்குள் பிறிஞ்சிப் பலுக்கு கதை போய் பிறிஞ்சிப்பலும் அங்குவந்து விசாரிக்க முருகேசு மாஸ்ரர் ஒன்றுவிடாமல் நடந்த விடயங் களைச் சொல்ல" சேர் இதெல்லாம் பெரிய விசயமில்ல ஆதாரபூர்வ அந்தப்பிள்ளை யாரோட கதைக்குது எண்டு யாராவது நிரூபிப்பினமோ இல்லைத்தானே. சின்னப்பிள்ளேன்ர மனசில கண்டகண்ட விடயத்தை வளர்த்துவிடாம பிள்ளை விரும்பின படி சுதந்திரமா படிக்கட்டும் விடுங்கோ என ரீச்சர்மாரோடு ஒத்து ஊதினார்.

ஆசிரியைகளதும் தலைமை வாத்தி யாரினதும் கதை கேட்ட முருகேசு மாஸ்ரர் மூக்கடைஞ்ச மாதிரிப் பீலிங் பண்ணிட்டு அந்தப்பிள்ளையை வகுப்புக்கு போகவிட்டார். கழுவாத மீனும் அழுக்கான ஆடையும் காலம் செல்லச் செல்ல நாறும் ஆனா அப்போது மற்றவர்கள் அதனை வெறுப்பார்கள். இதை இவர்கள் ஏன் புரியவில்லை. அதை அதை அப்பப்ப செய்யவேணும் சீ இதென்ன உலகம் ஒரு நல்லது, நறியதை அறிந்து "ஆசு இரியன் என்பதே குற்றத்தைக் களைபவன்' என்பதை புரிந்து நடக்குதில்லை. ஏதோ நான் அந்தப்பிள்ளையை வீண்வம்புக்கு இழுத்தமாதிரி இதுகள் பீல் பண்ணுதுகள் என மனதுக்குள் முருகேசு மாஸ்ரர் எண்ணிக் கொண்டிருக் கையில் பாடசாலை முடியும் மணி அடித்தது. முருகேசு மாஸ்ரர் தமிழ் வாத்தியாரோடு நடந்த சம்பவத்தைப் பற்றி அலசி ஆராய்ந்து கதைத்து விட்டு வீட்டுக்கு வந்தார். வீட்டிற்கு வந்தவர் கைகால் முகத்தைக் கழுவி சாப்பிட்டுவிட்டு சற்று நீட்டி நிமிர்ந்து படுப்பம் என போனபோது "மாஸ்ரர் முருகேசு மாஸ்ரர்" என்று அதட்டலான கூப்பிடுதல் வீட்டுப் படலைக் குள் மோட்டார் சைக்கிள்கள் வந்து குவிகின்றன. முருகேசு மாஸ்ரரின் மனதில் பயம் தோன்றினாலும் அதனை அவர் வெளிக்காட்டவில்லை. பயப்படாமல் எழுந்து சென்று படலையைத் திறக்கிறார்.

அப்போது "இப்ப கூனிக் குறுகி நிற்கும் இதே கந்தப்பண்ணை" நிமிந்து நின்று சேர் பள்ளிக்கூடம் படிப்பிக்க போறியளோ அல்லது பிள்ளைக்கு சம்பந்தம் பேசி குறிப்பு பொருத்தி புரோக்கர் வேலை செய்யி றதுக்கு பள்ளிக்கு போறியளோ. உங்களுக்கு உதுக்கே அரசாங்கம் சம்பளம் தருகுது. என கந்தப்பர் கேட்க அவருக்கு பதில் சொல்லி அடக்குவம் என முருகேசு மாஸ்ரர வாய் திறக்குமுன்னம் இப்ப வாத்திமார் படிப்பிக்க எங்க போயினம். அரசாங்கம் சம்பளம் குடுக்குது. வகுப்பில போய் இருந்து பிள்ளையளோட தேவையில்லா அலட்டல் அலட்ட எல்லே சம்பளம் குடுக்குது என இன்னொருவர் சொல்ல சேர் என்ர பிள்ளையப் பற்றி தப்பா எட போட்டிட்டியள் என்ர பிள்ளையள் பொய் சொல்லாதுகள். அதுவும் ரம்மியா எனக்கு பொய் சொல்லமாட்டாள். அவள் எந்தத் தப்பும் செய்யே லையாம், A/L அக்காக்களிட்ட படிப்பு சம்பந்தமாய் ஒப்படைக்கு வினாவிடை கேள்வி பற்றி கதைக்கத்தானாம் போய்வாறது. நீங்க தீர விசாரிச்சு பாக்காம என்ர பிள்ளையின்ர மனசை காயப்படுத் திட்டியள். பிள்ளை வீட்டை வரேக்கையே றோட்டு றோட்டாய் அழுதுகொண்டு வந்தது. வீட்டை வந்தும் சாப்பிடாம அழுது கொண்டிருந்தது. ஏன் சேர் என்ர பிள்ளையை அப்பிடி கேவலமாய் நினைச்சனீங்க, உங்கட பிள்ளைக்கு இப்படி பிரச்சனை வந்தா என்ன செய்வியள். முருகேசு மாஸ்ரரை பேச விடாமல் கந்தப்பண்ணையும் அவரோட வந்த பெரிய மனுசர்களும் மாறி மாறி கூச்சலிட்டு கதைத்தார் கள். முருகேசு மாஸ்ரர் சொன்ன எதையுமே அவர்கள் கேட்கவில்லை ஈற்றில் முருகேசு மாஸ்ரர் சரி கந்தப் பண்ணை இப்ப உங்கட பிள்ளேன்ர மனம் ஆற நான் என்ன செய்ய வேணும் என எதிர் பார்க்கிறியள்.

இண்டைக்கு இந்தப் பெரிய மனுச னுக்கு இப்படி ஒரு கேவலம், இப்படிக் கேவலம் எந்த மனுசனுக்கும் வரக்கூடாது என முருகேசு மாஸ்ரர் நினைத்துக் கொண்டிருக்கையில் என்ன மாஸ்ரர், நான் அண்டைக்கு மன்னிப்பு கேக்கோணும் எண்டு சொன்னதை மனசிலை வைச்சு என்ன கைவிட போறியளோ தயவுசெய்து எதையும் மனசில வைக்காம என்ர மானத்தை காப்பாத்துங்க உங்களை ஆபத் துக்கு உதவும் கண்ணபிரானை கருதி கையெடுத்து கும்பிட்டு கேக்கிறன் பிளீஸ் என்ன காப்பாத் துங்க என்ர மானத்தை காப்பாத் துங்க என கெஞ்சும் அவரது பரிதாபநிலையை பாத்து முருகேசு மாஸ்ரர் கந்தப்பண்ணையை அழைத்துக்கொண்டு பொலிஸ்ரேசனுக்கு போனார்.

பொலிஸ்ரேசன் வாசலை முருகேசு மாஸ்ரர் நெருங்கியதும் வாசலில் நின்ற பொலிஸ்காரன் ஐயா நீங்க என்ன அலுவலாய் வந்தனீங்க என்றான். நான் சப்இன்ஸ்பெக்ரரிட்ட வந்தனான். என முருகேசு மாஸ்ரர் கூற அவர இப்ப பாக்கேலாது ஐயா, அவர் இப்ப சாப்பிட்டுக் கொண்டிருப்பார் நாளைக்கு விடிய வாங்கோ என கூற கந்தப்பர் "மாஸ்ரர் பிளீஸ் மாஸ்ரர் எப்படியாயினும் என்ர பிள்ளையை இண்டைக்கு இரவே மீட்டிடோணும் நீங்க கதையுங்க என சொன்னார்.

ஆனால் அதற்கிடையில் எங்கிருந்தோ ஒருவன் முருகேசு மாஸ்ரரை அவதானித்துவிட்டு வாசலுக்கு ஓடிவந்து வாசலில் உள்ளவனிடம் அது எங்கட பெரிய ஐயாவோட மாஸ்ரர அவரை உள்ளுக்க விடலாம் அவர் ஒண்ணும் பேசமாட்டார் அவரை மறிச்சது கண்டிருந்தா நீதான் பேச்சு வாங்கியிருப்பாய் என கூறிவிட்டு நீங்க உள்ளுக்கு வாங்க ஐயா வந்து இந்த இடத்தில இருங்க நான் பெரிய ஐயாட்ட போய் சொல்லுறன். என கூறிவிட்டு அவன் செல்ல

மறுகணமே முருகேசு மாஸ்ரரின் முன் சப்இன்ஸ்பெக்ரர் ஆன அவரது மாணவர் தோன்றி என்ன சேர் இந்த நேரத்தில நீங்க வீட்டில இருந்து ஒரு போன் பண்ணி இருந்தா நானே வீட்டை வந்திருப்பன். ஏன் சேர் இந்த இருட்டில வந்தனீங்க என பணிவோடு அவன் கேட்க "இல்லைத் தம்பி அது அதுக்கென்று ஓர் மரியாதை இருக்கு அதை அப்பப்ப கொடுக்க வேணும். அதுதான் படிச்சவனுக்கு அழகு. என முருகேசர் கூற, சேர் நீங்க என்ன சொன்னாலும் முதல்ல நீங்க எனக்கு வழிகாட்டி கல்வி அறிவூட்டிய குரு நீங்க இல்லை என்றா நான் இந்த நிலைக்கு வந்திருக்க முடியாது என அவன் கூற அட இந்தக் காலத்தில இப்படி ஒரு மாணவனா? தன்னுடைய உயர்வுக்கு நான்தான் காரணம் என நினைக்கிறான் என்றால் இவனை விட எனது தொழில் எந்தவகையில் உயர்ந்தது. இப்படி ஆயிரத்தில் ஒருவர் மட்டும்தான் இருக்க முடியும் என முருகேசு மாஸ்ரர் மனதில் எண்ணிக்கொண்டு தன்னுடைய வரவுக்கான காரணத்தை முருகேசு மாஸ்டர் சொன்னார்.

(தொடரும் .....)





No-05, NC Road, Trincomalee.
TP- 026 2222298, Fax- 0262221179.
www.jewellanka.8m.com

# கோஹ்லியின் மகிழ்ச்சி

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதன்முறையாக இரவு பகல் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. ஒருநாள் போட்டிகள், இருபதுக்கு இருபது போட்டிகள் போன்றவற்றில் இரவு பகல் ஆட்டம் பழகிப் போன ஒன்று. ஆனால் பல வருட விவாதங்களின் பின் முதன் முதலாக அவுஸ்ரேலியா நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டி இரவு பகல் ஆட்டமாக நடைபெற இருக்கிறது. இப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. இந்த விடயம்பற்றி இந்திய அணியின் தலைவர் விராட்கோஹ்லி வரவேற்றுக் கருத்து வெளியிட்டுள்ளார். கிரிக்கெட் வரலாற்றில் இது ஒரு முக்கிய பதிவென்பது அவரது கருத்து. இந்த பரீட்சார்த்த ஆட்டத்தை ஒரு பெரிய பாய்ச்சலாக எடுத்துக்கொள்வதுடன் டெஸ்ட் போட்டிகளை இன்னும் பிரபல்யப் படுத்த இது உதவும் என்றும் அவர் கூறியுள்ளார். இந்த முயற்சி வெற்றி யளிக்கும் என்று கூறியுள்ள இவர் இன்னொரு மாற்று சந்தர்ப்பமாகவும் இதனை எடுத்துக் கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார். இதேவேளை இதே நாட்களில் இந்திய அணி தென்ஆபிரிக் காவுக்கு எதிரான தனது மூன்றாவது டெஸ்ட் போட்டியையும் விளையாடிக் கொண்டிருக்கிறது. ஒரு டெஸ்ட் போட்டியில் வென்று முன்னிலையில் இருக்கும் இந்திய அணி தற்போது தொடரில் முன்னிலையில் இருக்கிறது. இந்த டெஸ்ட் போட்டியிலும் வெற்றி காணும் முனைப்போடு இருக்கிறார் கோஹ்லி. இந்தப் போட்டி தென்ஆபிரிக்க அணிக்கு பெரிய சவாலாகவே இருக்கப் போகிறது. மேலும் பலவிதங்களில் புதுமைகளை எதிர்பார்க்கும், சர்ச்சைக் குரியவராக இருந்தாலும் திறமை நிறைந்த கோஹ்லி விரைவில் இரவு பகல் டெஸ்ட் ஆட்டத்தில் விளையாட தன்னைத் தயார்படுத்திக் கொள்வதில் ஆச்சரியம் இல்லை.



## விடுபடப் போவதில்லை

பாகிஸ்தானின் இளம்வீரர் வேகப் பந்து வீச்சாளர் ஆட்ட நிர்ணயச் சதியில் குற்றம் இழைத்து சிறைத் தண்டனை அனுபவித்து, மீண்டும் களத்தில் இறங்கியுள்ளவர் மொகமட் ஆமிர். இவர் பங்களாதேஷ் பிரிமியர்லீக் இருபதுக்கு இருபது சுற்றுப் போட்டியில் சிட்டாகொங் வைக்கிங்ஸ் அணியில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை பாகிஸ்தான் முன்னணி வீரர் மொஹமட் ஹாபிசும் இந்த அணியில் விளையாட ஒப்பந்தம் செய்துகொள்ள அழைக்கப் பட்டுள்ளார். ஆனால் அந்த ஒப்பந்தத்தை ஏற்க ஹாபிஸ் மறுத்து விட்டார். எனக்கும் சிட்டாகொங் வைக்கிங்ஸ் அணிக்கும் இடையில் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் எனது தாய்நாட்டை அகௌரவப்படுத்திய ஒரு நபருடன் இணைந்து விளையாட என்னால் முடியாது. உடைகள் மாற்றும் அறையில் இத்தகைய ஒரு நபருடன் இணைந்து பழக முடியாது. ஆகவே நான் இந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுத்து விட்டேன். வேறு எந்த அணியாவது என்னை அனுகினால் அந்த அணி யுடன் விளையாடுவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறியுள்ளார். இந்த வகையில் ஹாபிஸ் சொல் வதில் எந்தத் தவறும் இருக்க முடியாது. அவர் பணம் தான் எல்லாம் என்ப தல்ல என்பதை நிரூபித்து விட்டார். மேலும் கேட்பார் சொல் கேட்டு பாதை மாறிய ஆமீர் எதிர் காலத்தில் இன்னும் பல இத்தகைய அவமானங்களை எதிர்கொள்ள வேண்டிவரும். அது அவராகவே தேடிக்கொண்டது.



## நம்ப முடியவில்லை

பாகிஸ்தான் இங்கிலாந்து அணி களுக்கு இடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டியிலும் பாகிஸ்தான் தோல்வி கண்டது. இந்தத் தோல்வி திட்டமிட்டே அடையப்பட்டதென்றும் இந்த விடயத்தில் பாகிஸ்தான் ஆட்ட நிர்ணயத்தில் முறை கேடாக ஈடுபட்ட தென்றும் இங்கிலாந்து பத்திரிகை யொன்று குறிப்பு வெளியிட்டுள்ளது. இது தற்போது பெரும் சர்ச்சையாக வெளிவந்துள்ளது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகளை பாகிஸ்தான் தலைமைப் பயிற்றுனர் வன்மையாக மறுத்துள்ளார். எங்கள் வீரர்கள் எந்தவகை முறைகேடுகள் பற்றியும் யோசிக்கவில்லை. இயல்பான ஆட்டத் தையே அவர்கள் வெளிப்படுத்தினார்கள் என்று அவர் கூறியுள்ளார். ஆனால் பத்திரிகை சில கேள்விகளை எழுப்பு கிறது.

அதாவது ஆய்வாளர்கள் ஆட்டம் தொடங்கு முன்பே, ஆட்ட நிர்ண யம் நடை பெறக் கூடும் என்று சந்தே கப்பட்ட தாகக் குறிப் பிடுகிறது. பாகிஸ்தான் அணியின் களத்தடுப்பு ஏதோ பொழுது போக்காவே விளையாடுவது போல இருந்தது. அதோடு மூன்று ரண் அவுட்டுகளும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை, மேலும் பாகிஸ்தான் வீரர்களின் ஏனைய சில ஆட்டமிழப்புகள் கூட சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்று வரிசைப்படுத்தப்படு கிறது குற்றச்சாட்டுகள்.

இதுபற்றி முன்னாள் இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல்வோணும் அதிருப்தியான கருத்துக்களையே முன்வைத்துள்ளார். மூன்று ரண் அவுட்கள், வேண்டா வெறுப்பான துடுப்பாட்டம்.... இப்படி நாங்கள் முன்பு கண்டதேயில்லை. நாங்கள் முட்டாள்கள் என்று அவர்கள் நினைக்கிறார்களோ தெரியவில்லை என்று ஆதங்கப்பட் டுள்ளார் அவர்.

இதேவேளை சிலவேளை பாகிஸ்தான் அணிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள், பயிற்றுனர் மீதான அதிருப்தி போன்றவை ஆட்டத்தில் முழுமையான கவனத்தைச் செலுத்தத் தடையாக இருந்திருக்கக்கூடும். அதுவே தோல்விக்கான காரணமாக அமைந்திருக்கக்கூடும். அதற்கப்பால் முன்னைய அனுபவங் களைக் கொண்டு பார்க்கும்போது, பாகிஸ்தான் வீரர்கள் மீது இப்படிக் குற்றம் சாட்டுவது அபாண்டம் போலவே தெரிகிறது.



## இடி விழுந்தது

ஸ்பானியா லாலீகா உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் மிகப் பிரபல்ய மானவை. அதோடு பிரமிப்பு ஊட்டு பவையும் கூட, இந்தச் சுற்றுப் போட்டியில் தான் பார்சிலோனா மற்றும் றியல் மெட்ரிட் அணிகளும் பங்கு கொள்கின்றன. ஆனால் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற இந்த இரண்டு அணிக ளுக்கும் இடையிலான போட்டி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத் தியது. ஏனெனில் 4–0 என்ற ரீதியில் பார்சிலோனா அணி றியல்மெட்ரிட் அணியைத் தோற்கடித்துள்ளது. இதேவேளை ஆட்டத்தின் முதல் எண்பது நிமிடங் களுக்கு லயனல் மெஸ்லி களத்தில் இறங்கவில்லை. அவர் இல்லாமலே மூன்று கோல்களை பார்சிலோனா அடிக்க இறுதி நேரத்தில் இறங்கிய மெஸ்ஸியின் உதவியுடன் சுவாலஸ் நான்காவது கோலை அடித்தார். இப்படி ஒரு அதீத வெற்றிப் பாதையில் பார்சிலோனா செல்லும் என்று நாங்களே எதிர்பார்க்கவில்லையென்று பார்சிலோனா முகாமையாளார் கூறியுள்ளார். மேலும் றியல்மெட்ரிட் அணியின் பலவீனங் களைப் பயன் படுத்தி இந்த வெற்றியை நாங்கள் பெற்றுக் கொண்டதாக எடுக்க வேண்டாம். எல்லா வகையிலும் நாங்கள் மேம்பட்ட அணியாக இருந்தமையாலேயே வென்றோம் என்றும் கூறியுள்ளார்.




இதேவேளை ரியல்மெட்ரிட் முகாம் முற்றாக நிலைகுலைந்து போயுள்ளது. குறிப்பாக கிறிஸ்ரியானோ றொனால்டோ நிலைகுலைந்து போய்விட்டார். அதோடு அணி முகாமையாளர் பதவியில் தொடர்ந்து இருப்பாரா என்ற கேள்வியும் எழுந் துள்ளது. ரியல்மெட்ரிட் அணியின் உண்மையான சவால் இந்தத் தோல்வி யின் பின்னர்தான் தொடங்கியுள்ளது.

எதிர்வரும் போட்டிகளைத் தைரியத் துடன் எதிர்கொள்ளாது, இந்த மரண அடியின் பின் எவ்வாறு சாத்தியம் என்பதே இப்போதுள்ள கேள்வியாக உள்ளது.




ஜோசப் கிருஷ்ணா

(04 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# பிரதேச வாதத்தில் ஊறியோரின் ...

மக்கள் இவர்களின் உண்ணா விரதப் போராட்டத்தை கருத்திலும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இதேவேளை 16–11–2015 அன்று கண்டாவளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஏனைய கிராமங்களை உள்ளடக்கிய ஆயிரக்கணக்கான மக்கள் கண்டாவளை பிரதேச செயலகம் புளியம்பொக்கணைச் சந்தியில்தான் அமைக்க வேண்டும் என்று ஒன்று திரண்டு ஒரு போராட்டத்தை நடத்தியிருந்தனர். எனவே இந்த இடத்தில் ஒரு கிராமத்தைச்சேர்ந்த ஒரு சிலரின் கோரிக்கையா? அல்லது ஏனைய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்களின் கோரிக்கையா? என்ற கேள்வி எழுகிறது.

அத்தோடு இரண்டு நாள் உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்ற போது அரசியல் தரப்புகள் முதல் அதிகாரிகள் வரை எவரும் எட்டியும் பார்க்கவில்லை. முக்கியமாக கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது உள்ள பாராளுமன்ற உறுப்பினரும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை அவரும் பெரும்பாலான மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அமைதியாக இருந்து விட்டார். மற்றும் இவர்கள் உண்ணாவிரதம் இருந்த பாதையால் மாவட்டத்தின் பல உயரதிகாரிகள் சென்று வந்த போதும் அவர்கள் குறித்த போராட்டத்தை கணக்கிலும் எடுக்காமையும் குறித்த உண்ணாவிரத போராட்டம் ஒரு தேவையற்ற, ஓய்வு பெற்றவர்களும், வயோதிபர்களும், கண்டாவளை வெள்ளத்திற்குள் இருந்து வெளியே வந்து இரண்டு நாள் ஓய்வெடுத்துச் சென்றது போல எல்லோரையும் எண்ண வைத்ததன் வெளிப்பாடே.

மீண்டும் அந்த ஐயாவிடம் போய் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தினால் உருவான வெள்ளமும் அதன் பாதிப்பும் சூடான விடயமாக இருக்கும் போது வெள்ளத்திற்குள் இருக்கம் ஏஜிஓ கந்தோரை மாற்றக் கூடாது வெள்ளத்திற்குள்ளேயே வைத்திருக்க வேண்டும் என்று போராட் டம் செய்தால் எவரும் திரும்பி யும் பார்க்க மாட்டார்கள். நான் வேண்டுமென்றால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கு அல்லது அரசியல் கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவு என்று பனர் அடிச்சு தாறன் இந்த பனரை கழட்டிப்போட்டு அதைக் கட்டி உண்ணாவிரதம் இருந்து பாருங்கோ அரசியல்வாதிகள் முதல் அதிகாரிகள் ஊடகங்கள் என எல்லாத் தரப்பும் ஓடி வருவார்கள் என கேட்டுப்பாப்பம் என்று. இருந்தும் ஏதோ ஒன்று தடுக்க நானும் வெளிக்கிட்டன். பாவம் நல்லா சாப்பிட்டு போட்டு வந்து உண்ணாவிரதம் இருந்தவர்கள் இரண்டு நாள் இருந்து விட்டு சென்றுவிட்டார்கள்.

இதைத்தான் எங்கட கிராமத்தில் உள்ள அப்புத்துரை ஐயா சொல்லுவார் ஊரான ஊரவன் எல்லாம் ஏதோ ஒன்றுக்கு அழ கொழுத்துப்போன நாய் கோதுமமா றொட்டிக்கு அழுததாம்.



ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகர்சுன்னாகத்திலுள்ள கண்ணகி நலன்புரி நிலையத்துக்குச் சென்று நன்புரிநிலையபொறுப்புத் தலைவர் அந்தோனிகுயின் மற்றும் நேசனுடன் கலந்துரையாடுவதைக் காணலாம்.

(14 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# குடாநாட்டில் ஜே.வி.பி...

இழுத்து மூடப்படவேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் மறுபுறத்தில் வருகின்ற கடை மைத்திரிபால சிறிசேனவுடையது. இவரது கடையில் பளபளப்பாக உள்ளது. புதிதாக இருக்கின்றது. இதனால் அவரது கடையிலுள்ள பொருட்களுக்கு ஜே.வி.பி உத்தரவாதமளிக்காது என்பதுதான்.

எமக்குத் தெரியும் ராஜபக்ஷ, மைத்திரி, ரணில் என்பது ஒரே குட்டையில் ஊறிய மட்டை. சரளமாகத் தேடிப்பார்க்கின்ற போது இவர்களது அன்றைய போக்கு லஞ்ச, ஊழல், மோசடிக்கு எதிராக செயற்பட்டவர்கள். இந்த ஊழல் பேர்வழிகளின் பிதா மகிந்த ராஜபக்ஷ. இவர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு அவர்கள் பக்கம் அழுத்தம் வருகின்றதா என்றால் இல்லை. இதனால் இந்த ஆட்சி நல்லாட்சி அல்ல. மக்களை வதைக்கின்ற ஒரு ஆட்சியாகவே அமைந்துள்ளது.

***கேள்வி: யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தான் தலைதூக்கி நிற்கின்றது. இந்தநிலையில் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் நீங்கள் போட்டியிட்டு வெற்றிபெற முடியுமென கருதுகிறீர்களா?***

***பதில்:*** ஆம். 60 வருடங்களாக இந்த நாட்டில் இருந்த மேட்டுக்குடி அரசியல்வாதிகள் யாரும் பாமர மக்களுக்காக குரல்கொடுக்கவில்லை. அவர்களுடைய தேவைகளை நிவர்த்தி செய்யாதவர்கள். ஆனால் அவர்களால் விதைக்கப்பட்ட இனவாத கருத்துக்களாலேயே அவர்கள் வெற்றிபெற்று வருகின்றனர்.

அதுமட்டுமன்றி இங்கிருக்கின்ற அரசியல்வாதிகள் தங்களது இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே இனவாதத்தை குறிபபிட்டு வருகின்றனர். இந்த இனவாதத்தினால் கருகி நிற்பவர்கள் சிங்கள, தமிழ் மக்கள். இதனால் இந்த பாமர மக்களுடைய குரலாக ஒலித்தவர்கள் யாரும் கிடையாது. அவ்வாறு ஒலித்தவர்கள் அழிக்கப்பட்டுள்ளனர். அதனால் இன்று யாழ்ப்பாணத்தில் ஒரு பெரிய வெற்றிடம் ஒன்று ஏற்பட்டுள்ளது. மக்களுடைய குரலாக ஒலிப்பவர்கள் யார்? என்று பார்ப்போமானால் யாரும் கிடையாது. இவ்வாறான சூழலில் மக்களுடைய தேவைகள் நிவர்த்தி செய்யப்படுவதற்கு அவர்களின் குரலாக ஒலிப்பவர்கள் 'நாம்' என மக்கள் உணரும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாது போய்விடும். எனவே நாம் எதிர் காலத்தில் வெற்றிபெற வாய்ப்புள்ளது— என்று கூறினார்.

(05 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# நாவடக்கம் மிக்க ...

அனைவரையும் கட்டுப்படுத்துந்திறன் அவசியம். சி.வி.விக்னேஸ்வரன் வடக்கின் மாண்புமிகு முதல்வராக இருக்கலாம். ஆனால், அவர் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டி போட்டு வெற்றிபெற்றவர் அல்லர். கூட்டமைப்பில் பல கட்சிகள் இருக்கலாம். அதில் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தப்படுகின்ற ஒவ்வொருவரும் ஒவ்வொரு கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தியே நிறுத்தப்படுவர். அந்தவகையில், முதலமைச்சர் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் அப்போதைய கட்சியின் செயலாளர் மாவை சோ.சேனாதிராஜாவால் ஒப்பமிடப்பட்ட வேட்பு மனுவைத் தாக்கல் செய்தே தேர்தலில் நிறுத்தப்பட்டார். அமோக வாக்குகளால் வெற்றியும் பெற்றார். அவரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கட்சித் தலைமைக்கு உண்டு. அவர் நிச்சயம் தலைமைக்குக் கட்டுப்பட்டே ஆகவேண்டும். அதைவிடுத்து, சரியான தலைமைத்துவப் பண்பற்ற வீண் வார்த்தைகளை பத்திரிகைகள் வாயிலாக அறிக்கையிடுவது எந்த விதத்திலும் ஆரோக்கியமான செயற்பாடன்று.

கூட்டமைப்புத் தலைமை அவசரமாக மேற்கொள்ளவேண்டிய விடயம் ஒன்றுண்டு. உடனடியாக தலைமைக்குரிய தலைமைத்துவப் பண்பைக் கையிலெடுக்க வேண்டும். கட்சியின் அனுமதியின்றி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களென்றாலும் சரி, மாகாணசபை உறுப்பினர்களென்றாலும்சரி, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களென்றாலும் சரி பத்திரிகை அறிக்கையிடுவதை உடனடியாக நிறுத்தவேண்டும். ஒத்த கருத்துடைய அறிக்கையை அனைவரும் விட்டால் பரவாயில்லை. ஒரே கட்சிக்குள் ஒவ்வொருவரும் ஒன்றுக்கொன்று முரணான அறிக்கையை விடுவது வேதனையளிக்கிறது. திருமூலரின் திருமந்திரப் பாடலொன்றை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன் –

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு

மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன

மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்

பார்ப்பான் பசு ஐந்தும் பாலாச் சொரியுமே – என்கிறது திருமந்திரம்.

பார்ப்பான் – பார்ப்பது கண் தானே . எனவே கண்தான் பார்ப்பான். அதில் உள்ள ஒளிதானே நம்மை நடத்திச் செல்கிறது! கண் – பார்ப்பான் – பார்த்தன், ஒளி–நடத்துபவன்–சாரதி. கண் ஒளியைத்தான் – கண்ணனைத் தான் (கண்) – நாம் பார்த்த சாரதி என்கிறோம். இந்த பார்ப்பன் அகத்திலே பார்ப்பசு ஐந்துண்டு. அதாவது புலன்கள் ஐந்துண்டு என்கிறார் திருமூலர். இதை நாம் மேய்க்காவிட்டால் – கட்டுப்படுத்தாவிட்டால் – கண்ட கண்ட இடத்தில் மேய்ந்து விடும். மனதை கட்டுப்படுத்தும் மார்க்கத்தை அறிந்து நாம் நம் புலன்களை நம் வசப்படுத்தினால் கர்மேந்திரியங்கலான நம் புலன்கள் ஞானேந்திரியமாக மாறி அதனால் நமக்கு அமுதம் கிடைக்கும் என்று கூறுகிறார் திருமூலர்.

இதே நிலைமையில்தான் இன்று எமது அரசியல் தலைமைகள் உள்ளன. கட்சித் தலைவர் என்று ஒரு பிதாமகர் – மேய்ப்பார் – பார்த்தன் –இருக்க, அதன் வால்கள் அனைத்தும் (முதல்வர் உட்பட) ஒவ்வோர் விதமாக அறிக்கையிட்டு வெறிபிடித்து அலைவது தமிழ்மக்களின் எதிர் காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. ஆகவே, பார்ப்பான் – கட்சித் தலைமை – உடனடியாக இந்தப் பிரச்சினைக்கு உடனடி முடிவுகட்டி, ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தவறின் மிகவும் பாரதூரமான விளைவை தமிழ்த் தலைமைகள் எதிர்நோக்க நேரிடும்.

# நாகதீபம் பெயர்மாற்றத்தால் சம்பந்தனுக்கு பிரச்சினையில்லை

நாகதீபம் என்ற பெயரை ஏன் மாற்ற வேண்டும். அதில் எந்தவித உடன்பாடும் கிடையாது என சம்பந்தன் தெரிவித்துள்ளார். அண்மையில் மாகாண சபையில் நயினா தீவு என்ற பெயரே உத்தியோகபூர்வ பெயராக இருக்க வேண்டுமென வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் தீர்மானம் கொண்டு வந்தார்.

திபம் என்பது பௌத்த மக்களின் முக்கியமான ஸ்தலங்களில் ஒன்றாகும். இந்த தீவுக்கு ஒரு காலத்தில் புத்தர் வருகை தந்தார். என்றும் சுலோதரன், மகோதரன் என்ற இரண்டு மன்னர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தார் என்றும் நம்பப்படுகின்றது.

இது தொடர்பாக அண்மையில் தாம் நாகதீபத்துக்கு சென்றதாகவும் அங்கு பௌத்த மதகுரு நூல் கட்டியதாகவும் அந்த நூலை நாடாளுமன்றத்திற்கு காட்டினார்.

'தான் வாழும் இந்த நாட்டில் நாகதீபத்தின் பெயரை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை'. அதனை நாங்கள் எதிர்க்கின்றோம்.

நாங்கள் மக்களை ஒருமைப் படுத்துவோமே தவிர பிரிக்க முன் வரக்கூடாது. நாகதீபமும் நயினா தீவைப் போல் அங்கு இருக்க வேண்டும். இதுதான் எமது வேண்டுகோள் என்றார்.

## யாழ். மன்னன்

# இனப்பிரச்சினைக்கான தீர்வை காணுவதில் ஆர்வம்

யுத்தம் முடிவடைந்து 6 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்னும் காணப்படவில்லை. எனவே இதற்கான தீர்வு துரிதகதியில் காணப்பட வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலிய மன்னனின் 28 ஆவது வம்சத்தைச் சேர்ந்த மன்னன் இராஜநாதன் கனகராஜா. நெதர்லாந்தில் தற்போது வசிக்கும் அவர் தினச்செய்திக்கு அளித்த பிரத்தியேக செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார். யாழ். மன்னன் தனது செவ்வியில் மேலும் கூறியவை –

"நான் கடைசி சங்கிலிய மன்னனின் 28 ஆவது பரம்பரையைச் சேர்ந்த மன்னன் இராஜநாதன் கனகராஜா."

1991 ஆம் ஆண்டு வரை நான் இலங்கையில் வாழ்ந்தேன்.

1989 - 1991 வரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வடக்கு, கிழக்கு அலுவலராக பணிபுரிந்தேன். இதன்போது என்னை 3 முறை கொலை செய்ய முயன்றார்கள். அதிலிருந்து தப்பி எனது மக்களுக்காக பணியை ஆற்றி வந்தேன்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறிய பொழுது நானும் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன்பின் கொழும்பு சென்று வைத்தியசாலையில் பணியாற்றினேன். அங்கும் பிரச்சினை ஏற்பட்டது.

அந்த நேரத்தில் பிரதமராக இருந்த ரணசிங்க பிரேமதாச எனக்கு பாதுகாப்பு வழங்கவில்லை. இதனால் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய தேவை ஏற்பட்டது.


அன்றிலிருந்து இன்றுவரை நெதர்லாந்தில் வசிக்கிறேன்.

போர்த்துக்கல், நெதர்லாந்து, ஒல்லாந்து நாட்டவர்கள் யாழ்ப்பாணத்தை ஆண்டார்கள். இதனால் எமக்கு அங்கு வாழ அனுமதி அளித்துள்ளார்கள்.

சங்கிலிய மன்னன் தொடர்பான ஆதாரங்கள் அழிக்கப்பட்டுள்ளதனால் இங்குள்ள எவருக்கும் அவர்களின் வரலாறு தெரியவில்லை. இதனால் நான் யாழ்ப்பாணத்தில் இருந்துவந்த பின்னர் போர்த்துக்கீசர் எழுதிய குருஸ் என்ற புத்தகத்தின் மூலம் புதிய பல ஆதாரங்களைத் திரட்டியுள்ளேன்.

மேலும் நான் தாய் நாட்டிற்குத் திரும்ப வேண்டும். மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் அதுதான் எனது முதல் நோக்கம்.

ஒரு காலத்தில் மக்கள் எங்களிடம் வந்தார்கள். தற்போது உள்ள நிலைமையில் நாம் மக்களிடம் செல்ல வேண்டும். மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அரசியல்வாதிகள் முயலலாம். ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள்?



மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்றுக் கொள்வார்கள். எப்போதும் மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது. இதனை மாற்றி அமைக்க வேண்டும்.

1989 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் இருக்கின்றபோது காணாமற் போனவர்களைக் கண்டுபிடிக்கும் குழுவுக்கு தலைமை தாங்கி பல செயற்பாடுகளைச் செய்து அவர்களைக் கண்டுபிடித்தேன்.

தற்போது விசாரணை என்று எல்லாம் செய்கிறார்கள். இதில் எந்தவிதப் பயனுமில்லை. யாழ்ப்பாணத்தில் சர்வ சாதாரண-மாக இருந்தபோதுதான் நான் இவ்வளவும் செய்தேன். ஆனால் இங்குள்ள அரசியல்வாதிகள் என்ன செய்கிறார்கள்?

தமிழர்களுடைய பிரச்சினை இதுவரை தீர்க்கப்படவில்லை. எனவே அவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படுவது முக்கியமான தாகும். அதற்கு அரசியல் தீர்வை அமுல்படுத்த வேண்டும். இலங்கையில் வாழும் சகல இனத்தவர்களுக்கும் சமவுரிமை அளிக்கப்பட வேண்டும்.

அத்துடன் தமிழர்களை சிறுபான்மை இனத்தவர்கள் என அழைப்பதை நிறுத்த வேண்டும். சகல இனத்தவர்களும் சுயகௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ்வதற்கான வழிகளைச் செய்ய வேண்டும்.

இலங்கையில் 30 வருடங்களாக இடம்பெற்ற போர் முடிவடைந்து ஆறு வருடங்கள் ஆகியுள்ளன. எனவே புதிய நாடு ஒன்றை சமாதானத்தின் மூலம் உருவாக்க வேண்டும். யுத்தத்தின் மூலம் -

* மக்கள் தமது வீடுகளை இழந்தார்கள்
* தமது அன்புக்குரியவர்களை இழந்தார்கள்
* தமது இருப்பிடங்களை இழந்தார்கள்-

எனவே நாம் அவர்களின் புனர்வாழ்வை துரிதப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்க்கையை முன்னெடுக்க வேண்டும். அவர்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்ற வேண்டும்.

இதுவே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழியென நான் நம்புகிறேன்.

மக்களுடனான தொடர்புகள் இல்லையெனில் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது. இதுவே எனது கருத்தாகும்.

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு நவ.29,2015 அன்று வெளியிடப்பட்டது.